வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 32 | சுடர்: 28 | கதிர்: 330 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஐப்பசி 06, புதன் 23.10.2013




மழைக்கான சாத்தியம் உண்டு.

27°c 26°c

## பாடசாலை மாணவர் இருவர் வானில் வந்தோரால் கடத்தல்

### வடமராட்சிப் பகுதியில் பெரும் பரபரப்பு

யாழ்ப்பாணம், ஒக்.23

வடமராட்சி, உடுப்பிட்டிப் பகுதியில் பாடசாலைக்கு சென்றுகொண்டிருந்த மாணவர்கள் இருவர் இடைவழியில் வைத்து வாகனத்தில் வந்த இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளனர். அவர்களில் ஒரு மாணவன் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் பற்றைக்குள் இருந்து மீட்கப்பட்டார். கடத்தப்பட்டதாகக் கூறப்படும் மற்றைய மாணவனுக்கு என்ன நடந்தது என்பது குறித்து எதுவும் தெரியவரவில்லை.

இந்தக் கடத்தல் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை உடுப்பிட்டிப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

இதனால் நேற்று அந்தப்பகுதி எங்கும் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தரம் 8 இல் கல்வி பயிலும், பொலிகண்டி, சமரபாகு பகுதியைச் சேர்ந்த உருத்திரசிகாமணி உதிக்சயன் (வயது -13) என்ற மாணவனே இவ்வாறு

21

## தமிழ் மக்களை புறக்கணித்து சிங்களவர்களுக்கு காணிகள்

### நாவற்குழி புதுக்குடியேற்ற மக்கள் கொதிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.23

எங்கள் மண்ணில் வந்து குடியேறியுள்ள சிங்கள மக்களுக்குக் காணிகளை அளந்து கொடுத்துள்ள அதிகாரிகள், நான்கு வருடமாக இதே மண்ணில் இருக்கும் எங்கள் காணிகளை அளந்து வழங்காமல் புறக்கணிப்பது ஏன்? இவ்வாறு நாவற்குழி

21



எல்லைப் பிரச்சினை தீர நீண்ட காலம் எடுக்கும் 06

மனித உரிமைகள் பேணப்படவில்லை சாடுகின்றது சர்வதேச மன்னிப்புச் சபை 07

மெய்வன்மை தொழில்நுட்ப அலுவலர்களாக ஆறு பேர் 22

கிரஹம் போர்டின் பணி தொடரப்பட வேண்டும் 23

# வடக்கின் வன்முறைகள் ஜெனிவாவுக்கு அறிக்கை

### தேர்தலைக் கண்காணிப்பதற்கான மத்திய நிலையம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 23

வடக்கு மாகாண சபைத் தேர்தலின் பின்னர் வடக்கில் இடம்பெற்று வருகின்ற வன்முறைச் சம்பவங்கள் மற்றும் அதனோடு இணைந்த அசம்பாவிதங்கள் குறித்துக் கிடைக்கப்பெறும் அறிக்கைகள் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் மார்ச் மாத அமர்வின் போது சமர்ப்பிக்கப்படும் என்று தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் நிறைவேற்று அதிகாரி பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் வன்முறை பற்றிய இறுதி அறிக்கை தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தினால் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் வைத்து வெளியிடப்பட்டது.

இதன்போது நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே பாக்கியசோதி சரவணமுத்து மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

எம்மால் வெளியிடப்பட்டுள்ள




தேர்தல் தொடர்பான வன்முறை பற்றிய இறுதி அறிக்கை, தேர்தல்கள் ஆணையாளர், இராஜதந்திரிகள் ஆகியோருக்கு வழங்கப்படவுள்ளது. இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய வகையில் அழுத்தங்கள் கொடுக்கப்படும் - என்றார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலின் பின்னர், வடக்கில் இடம்பெற்று வரும் வன்முறைகள் தொடர்பில் உங்கள் அறிக்கை

21

## புதிய கட்டடத்தில் நேற்று பால் காய்ச்சினார் விக்கி



யாழ்ப்பாணம், ஒக்.23

வடக்கு மாகாண சபைக்குப் புதிதாகக் கைதடியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடத்துக்கான பால் காய்ச்சும் நிகழ்வும் ஏனைய சம்பிரதாயபூர்வ நிகழ்வுகளும் மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தலைமையில் நேற்று செவ்வாய்க் கிழமை சிறப்பாக இடம்பெற்றன.

கைதடி முதியோர் இல்லத்துக்கு அண்மையில் மூன்று மாடிகளைக் கொண்டதாக 450 மில்லியன் ரூபா செலவில் வடக்கு மாகாண சபைக் கட்டடம் அமையவுள்ளது. இதில் 100 மில்லியன் செலவில் அமைக்கப்பட்ட கீழ்த் தளத்தின் ஒரு பகுதியே நேற்றுப் பால் காய்ச்சி சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

21

## கூட்டமைப்பின் ஆதரவாளர் மீதான தாக்குதல்களுக்கு கடும் கண்டனம்

யாழ்ப்பாணம், ஒக். 23

கடந்த செப்ரெம்பரில் இடம்பெற்ற வடக்கு மாகாணசபைத் தேர்தலின் பின் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் மீது பரவலாக மேற்கொள்ளப்பட்டு வரும் கொலை வெறித் தாக்குதல்களைக் கண்டித்து சாவகச்சேரி நகர சபையின் மாதாந்த அமர்வின் போது கண்டனத் தீர்மானம் நிறைவேற்

21

## சிவில், அரசியல் உரிமைகளுக்கு வடக்கில் இராணுவத்தினர் தடை

யாழ்ப்பாணம், ஒக். 23

சிவில், அரசியல் மற்றும் பொருளாதார உரிமைகளை வடக்கு மக்கள் அனுபவிப்பதற்கு இராணுவம் தடையாக உள்ளது. இந்த இராணுவமயமாக்கல் செயற்பாடு தொடர்ந்துகொண்டேதான் இருக்கப்போகின்றது என்று குற்றம் சாட்டியுள்ள தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான மத்திய நிலையம், இராணுவ மயப்படுத்தல் தேர்தல் செயன்முறைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்தியுள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளது. இருப்பினும் வடக்கின் மொத்த வாக்களிப்பு வீதமும் அதன் பெறுபேறும் இராணுவ மயப்படுத்தலுக்கு மக்கள் பணிய மாட்டார்கள் என்பதையே எடுத்துக் காட்டியுள்ளது என்றும் அந்த நிலையம் மேலும் கூறியுள்ளது.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் மத்திய நிலையத்தினால் வடக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பான இறுதி அறிக்கை யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்று செவ் வாய்க் கிழமை வெளியிடப்பட்டது.

குறித்த அறிக்கையை வெளியிட்டு வைத்த தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான

21

## மாகாண சபைக் கட்டடம் நாளை மறுதினம் திறப்பு

யாழ்ப்பாணம், ஒக். 23

வடக்கு மாகாணசபையின் புதிய கட்டடத் திறப்பு விழா நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்விலும், இதன் பின்னரான கன்னி அமர்விலும் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி கலந்து கொள்ளவுள்ளார். 450 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்ற வடக்கு மாகாணசபையின்

21

## பாதுகாப்புக்கு அதிக நிதி ஒதுக்கீடு 30,624 கோடி 62 இலட்சம் ரூபா

### கடந்த ஆண்டைவிட ரூ. 2,674 கோடி கூடுதல்

கொழும்பு, ஒக்.23

2014ஆம் நிதியாண்டுக்கான பட்ஜட்டிலும் பாதுகாப்புக்கு அரசு அதிக நிதி ஒதுக்கியுள்ளது. பாதுகாப்பு அமைச்சு, புதிதாக உருவாக்கப்பட்ட சட்டம் மற்றும் ஒழுங்குகள் அமைச்சு ஆகிய இரண்டுக்கும் மொத்தமாக 30,624 கோடியே 62 இலட்சத்து10 ரூபா

21

## பொதுநலவாயத்தில் இந்தியா பங்கேற்பதை விரும்பவில்லை

### சம்பந்தன் கருத்து

யாழ்ப்பாணம், ஒக். 23

பொதுநலவாயத் தலைவர்களின் உச்சி மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்று இலங்கைத் தமிழர்கள் விரும்புவதாக, இந்தியாவில் வைத்துத் தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

இலங்கைத் தமிழர்களுக்கா இந்தியா உதவும் என்று கடந்த சனிக்கிழமை சென்னையில், பாரதிய ஜனதாக் கட்சியின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி தெரிவித்திருந்த சூழ்நிலையில், சென்னைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழ் நாட்டுத் தலைவர்களை நேற்றுச் சந்தித்தார். இந்தச் சந்திப்பின் பின்னர் இந்திய ஊடகவியலாளர்களுடன் அவர் சந்திப்பு நடத்தினார்.

அதில் அவர் தெரிவித்ததாவது:

இந்தியப் பிரதமர் இலங்கையில் நடைபெறும் மாநாட்

21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகேஸ்வரி நிதியத்தின் மணல் கொள்ளை வடக்கு மாகாண சபை தடுத்து நிறுத்தும்

## மாகாண சுற்றுச் சூழல் அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக்.23
மகேஸ்வரி நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் மணல் கொள்ளைகளை வடக்கு மாகாணசபை சட்டரீதியாகத் தடுத்து நிறுத்தும். எமது சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதுடன் தனிநபரோ அல்லது தனியொரு அமைப்போ இயற்கை வளத்தை அனுபவிப்பதற்கு எந்த உரிமையும் கிடையாதென்று வடக்கு மாகாணச் சுற்றுச் சூழலியல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

கோண்டாவிலிலுள்ள பாரவூர்தி உரிமையாளர் சங்கத்தினருக்கும், அமைச்சருக்கும் இடையிலான கலந்துரையாடல் சங்கத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இதில், கலந்துகொண்ட லொறி உரிமையாளர்கள் மகேஸ்வரி நிதியத்தின் ஏக போக உரிமைத்தன மான செயற்பாட்டால் தாம் பாதிக்கப்படுவதாகச் சுட்டிக் காட்டினர்.

"நாம் கடன் பெற்றே எமது பாரவூர்திகளை வாங்கினோம். ஆரம்பத்தில் நாங்கள் எல்லோரும் மணல் ஏற்றி இறக்கும் வியாபாரத்தில் ஈடுபட்டோம். ஆனால் தற்போது மகேஸ்வரி நிதியம் தன்னிச்சையாகச் செயற்பட்டு, இருவருக்கு மணல் ஏற்றி இறக்கும் உரிமையை வழங்கியிருக்கின்றது. இதனால் நாம் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளோம். வாங்கிய கடன்களைச் செலுத்த முடியாமல் நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்றோம். எனவே அவர்கள் ஆரம்பத்திலிருந்ததைப் போன்று சகலரும் தொழிலில் ஈடுபட வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுக்க வேண்டும்" என்று மாகாண அமைச்சரிடம் சுட்டிக் காட்டப்பட்டது.

எங்கள் எல்லோரிடமும் தலா 5 ஆயிரம் ரூபா ஆரம்பத்தில் சேவையில் ஈடுபடுவதற்காக வாங்கப்பட்டது. அத்துடன் சேவைக் கட்டணம் என்ற பெயரில் எங்களின் சேமிப்புப் பணமும் கழிக்கப்பட்டது. இந்த நிலையில் அவர்கள் எங்கள் சேவையை இடைநிறுத்தியுள்ளதால் அந்தப் பணத்தை திருப்பித் தர வேண்டும்" எனவும் இதன்போது கோரப்பட்டது.

இதன் பின்னர் உரையாற்றிய அமைச்சர், தனிப்பட்ட நிறுவனத்துக்கு இயற்கை வளத்தை அனுபவிக்கும் ஏகபோக உரிமை கிடையாது. மேலும் மணல் கட்டடத் தேவைக்கு மாத்திரம் உரியது அல்ல. அவற்றைப் பயன்படுத்தி நாம் கண்ணாடி தயாரிக்க முடியும். அத்துடன் மணல் எமது சூழலுக்கு முக்கியமானது. இவற்றைக் கருத்தில் கொண்டே நாம் செயற்பட வேண்டும்.

நீதிமன்றம் மகேஸ்வரி நிதியத்துக்கு அறிவுறுத்தல் வழங்கிய பின்னரும் அவர்கள் மணல் கொள்ளையிலேயே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அத்துடன் இது தொடர்பில் தகவல்கள் திரட்டியவர்கள் கூடக் கொல்லப்பட்டுள்ள நிலைமை காணப்படுவதாக நாம் சந்தேகிக்கின்றோம்.

பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் இவர்கள் மணல் அகழ்வதற்கு அனுமதி கொடுக்கப்பட்ட அளவு எவ்வளவு? இவர்கள் எவ்வளவு அகழ்கின்றார்கள் என்ற விபரங்களை வைத்திருக்கின்றார். ஆனால் தர மறுக்கின்றார். காரணம் உயிர் அச்சுறுத்தலே.

நாம் இவை ஒன்றையும் கண்டு பின்வாங்கப் போவதில்லை. எமது வடக்கு மாகாண சபையின் ஊடாக சட்டத்துக்கு அமைவாக அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் - என்றார். (த-5)

# மாகாண சபை மண்டபத்தை பார்வையிட்டார் முதலமைச்சர்

யாழ்ப்பாணம், ஒக்.23
வடக்கு மாகாண சபையின் கன்னியமர்வு இடம்பெறவுள்ள சபை மண்டபத்தை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் நேற்று செவ்வாய்க்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார்.



வடக்கு மாகாண சபையின் கட்டடத்துக்கான பால் காய்ச்சும் விழா நேற்று கைதடியில் உள்ள அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் பங்கு கொள்ளச் சென்ற வடக்கு மாகாண சபை முதல மைச்சர் க.வி.விக்னேஸ்வரன், சபையின் கன்னிய மர்வு இடம் பெறவுள்ள சபை மண்டபத்தையும் பார்வையிட்டார்.

முதலமைச்சருடன், உட்கட்டுமான அமைச்சின் செயலர் ராஜேந்திரா மற்றும் ஏனைய திணைக்கள அதிகாரிகளும் இதில் கலந்து கொண்டனர்.

சபை மண்டப ஆசன ஒழுங்குகள், அமைப்பு முறைகள் என்பவற்றையும் முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் கேட்டறிந்து கொண்டார். (த-5)

## நெல் விதைப்பு ஆரம்பம்

வடமராட்சி, ஒக்.23
கடந்த சில தினங்களாகப் பெய்த மழையினை அடுத்து வடமராட்சிப் பிரதேசத்தில் நெற்செய்கையாளர்கள் விதைப்பு நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

இப் பிரதேசத்தில் உள்ள வல்லை, கரணவாய், கரவெட்டி மேற்கு, கிழக்கு, கப்பூது, குடத்தனை, அம்பன், செம்பியன்பற்று ஆகிய இடங்களில் விவசாயிகள் மழைக்கு மத்தியில் வயல் நிலங்களைப் பண்படுத்தி நெல் விதைப்பை மேற்கொண்டு வருகின்றார்.(த-8)

# ஆசிரியர்களுக்கு பதவியுயர்வு கிடைக்காதுவிடின் போராட்டம்

## இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.23
எதிர்வரும் டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் உரியவர்களுக்குப் பதவியுயர்வுகள் வழங்கப்பட வேண்டும். தவறின் தொழிற் சங்கங்களை ஒன்றிணைத்து நாடளாவிய ரீதியில் போராட்டம் நடத்தப்படும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் மேலும் தெரிவித்ததாவது:-

ஆசிரியர்கள் கடந்த மூன்று வருடங்களாக பதவியுயர்வு செய்யப்படாது உள்ளனர். இது முன்னேற்றத்துக்குத் தடையாக அமைந்துவிடும். நாட்டில் சுமார் 2 இலட்சத்து 17 ஆயிரம் ஆசிரியர்கள் இவ்வாறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

2011 டிசெம்பர் 31 ஆம் திகதியன்று ஆசிரியர் பதவியுயர்வுக்கான 2011/30 எனும் இலக்க சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. இருந்தும் அது இன்னமும் செயற்படுத்தப்படவில்லை.

ஆசிரியர் பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு சிரேஷ்ட அமைச்சர் ஒருவரின் தலைமையில் அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது. அந்த அமைப்பும் இதுவரை எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நாடாளுமன்றில் அடுத்த மாதம் சமர்ப்பிக்கவுள்ள நிலையில் அதற்கு முன்னர் தமது பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்றார். (ஜ-4)

## பறிபோனது 70 ஆயிரம் ரூபா

ஆலயத் தேர்த் திருவிழா செலவுக்காக கொண்டு சென்ற 70 ஆயிரம் ரூபா பணம் கைப்பையுடன் காணாமற்போனது. இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை சாவகச்சேரியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி வைத்தியசாலை முன்பாக பஸ்ஸில் ஏறிய பெண் ஒருவர் சாவகச்சேரி பஸ் நிலையத்தில் இறங்கிய போது அவரது கைப்பை காணாமற்போனது தெரியவந்துள்ளது. கைப்பையினுள் 70 ஆயிரம் ரூபா பணம், கையடக்கத் தொலைபேசி, அடையாள அட்டை ஆகியவை இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# அரசியல் கைதிகளின் விடுதலைக்கு முதலமைச்சர் வலியுறுத்த வேண்டும்

## சாவகச்சேரி நகர சபையில் தீர்மானம்

தென்மராட்சி, ஒக்.23
நீண்ட காலமாக சிறைகளில் வாடும் தமிழ், முஸ்லிம், சிங்கள அரசியல் கைதிகளை போருக்குப் பின்னரான நல்லிணக்க முயற்சியாக பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய ஜனாதிபதியிடம் வட மாகாண முதலமைச்சர் அனுமதி பெற்றுத்தர வேண்டும் என்று சாவகச்சேரி நகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

"அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாதச் சட்டம் ஆகியவற்றின் கீழ் சந்தேக நபர்களாக கைது செய்யப்பட்டு குற்றஞ் சாட்டப்பட்டவர்களையும், இதுவரை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாது தொடர்ந்தும் சந்தேக நபர்களாகவே தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களையும் மேற்படி சட்டங்களின் கீழ் தண்டிக்கப்பட்டு தண்டனைக் கைதிகளாக சிறையில் வாடும் மூன்று இனங்களைச் சேர்ந்த அரசியல் கைதிகளையும் விடுவிக்க நாம் முயற்சி எடுக்க வேண்டும்.

போருக்குப் பின்னரான நல்லிணக்க முயற்சியாக ஜனாதிபதி இவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்க வேண்டும் என கோர வேண்டும். இதற்கு உதவ மாண்புமிகு வட மாகாண முதலமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட வேண்டும்" என்று கொண்டு வரப்பட்ட பிரேரணை சபை உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை அறிவித்துள்ளார். (ஜ-9)

# சமுர்த்தி வங்கி உடைத்து மின் பிறப்பாக்கி திருட்டு

யாழ்ப்பாணம், ஒக்.23
கல்வியங்காட்டில் உள்ள சமுர்த்தி வங்கிக்கிளை உடைக்கப்பட்டு பணம் திருட முற்பட்ட போதும் அது பயனளிக்காதமையால் அங்கிருந்த மின்பிறப்பாக்கியைத் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வங்கியின் பிரதான கதவைப் பிரித்து உள்ளே சென்ற திருடர்கள் பணம் வைக்கப்படும் பெட்டகத்தை உடைத்து பணம் திருட முயற்சி செய்துள்ளனர். அது பயனளிக்காத நிலையிலேயே மின் பிறப்பாக்கியைத் திருடிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-4-21)

# அடையாளம் காணப்பட்டனர் கடத்திக் கப்பம் வாங்கியோர்

கடத்தி மிரட்டிக் கப்பம் பெற்ற இருவரை இரண்டு வருடங்களின் பின்னர் அடையாளம் காட்டின மூன்று சாட்சிகள்.

2011ஆம் ஆண்டுநவம்பர்மாதம் மட்டுவில் மத்தியைச் சேர்ந்த மூவரைக் கொழும்புக்கு வரவழைத்து அவர்களைக் கடத்தி மிரட்டி 28 லட்சம் ரூபாவினைப் பெற்றுக் கொண்ட இருவரை நேற்று செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் இடம்பெற்ற அடையாள அணிவகுப்பில் சாட்சிகளாக அழைக்கப்பட்ட மூவரும் அடையாளம் காட்டினர்.

2011 ஆம் ஆண்டு மட்டுவில் மத்தியைச் சேர்ந்த நபர் ஒருவர் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்றும், அவரை விடுவித்து தருவதற்கு ஒரு தொகைப் பணத்துடன் வருமாறும் தொலைபேசியில் அவரது குடும்பத்தினருக்குக் கூறப்பட்டுள்ளது. இதனை நம்பி கொழும்பு சென்ற குடும்ப உறுப்பினர்கள் மூவரை அங்கு வைத்துக் கடத்தி பணம் அறவிட்ட பெண் உட்பட இருவரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்து கடந்த வாரம் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர்.

அவர்களை நேற்று வரை விளக்கமறியலில் வைத்த நீதிவான் நேற்று அடையாள அணிவகுப்பு நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதன் பிரகாரம் நேற்று நீதிமன்றில் பதில் நீதிவான் செ. கணபதிப்பிள்ளை முன்னிலையில் அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டது. சாட்சிகளாக அழைக்கப்பட்ட மூவரும் சந்தேக நபர்கள் இருவரையும் அடையாளம் காட்டினர்.

இந்த வழக்கு நீதிமன்றில் நடைபெற்ற போது இருவரை [illegible] மாறு நீதிவான் உத்தரவிட்டார். (த-9)

# யாழ்.சிறைச்சாலை உணவகத்தில் பாவனைக்குதவாத பொருள்கள்

## உடன் சீர் செய்யுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.23
யாழ். சிறைச்சாலையில் உள்ள உணவகத்தில் பாவனைத் திகதி நிறைவடைந்த உணவுப் பொருள்கள் விற்பனை செய்யப்படுவதுடன் அங்கு கழிவுகள் கொட்டப்படும் இடத்துக்கு அருகில் வைத்தே உணவுப்பொருள் தயாரிக்கப்படுவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பல நாள்களாக இந்த நிலைமை காணப்படுகின்ற போதும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களோ, சிறைச்சாலை அதிகாரிகளோ இது தொடர்பில் எந்த விதமான [illegible] எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

[illegible] பைகற்றுக்களில் அடைக்கப்பட்டு வரும் உணவுப்பொருள்கள் பல பாவனைத் திகதி நிறைவடைந்த நிலையிலேயே அங்கு விற்பனை செய்யப்படுகின்றன.

இங்கு உணவு நிலையத்தில் வைத்து விற்பனை செய்வதற்கான உணவுப்பொருள்களும் கழிவுகள் கொட்டப்படும் இடத்துக்கு அருகில் வைத்தே தயாரிக்கப்படுவதாகச் சிறைச்சாலை ஊழியர்கள் கூறுகின்றனர்.

அங்கு உணவுப் பொருள்களைப் பெற்று உட்கொண்ட சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் சிலர் கடும் வயிற்றோட்டத்தினால் அண்மையில் பாதிக்கப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

அவர்களில் ஒரு சிலர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டிருந்தனர்.

எனவே உரியவர்கள் இது தொடர்பில் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களைப் பார்வையிடச்செல்வோர் தம்முடன் உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளமையால் சிறைச்சாலையினுள் இயங்கும் உணவகத்திலேயே உணவுப்பொருள்கள் விலை கொடுத்துப் பெற்று அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு வழங்க வேண்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர்வேலியில் ஆடுகள் திருட்டு

யாழ்ப்பாணம், ஒக்.23
நீர்வேலி தெற்கு பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கட்டி வைக்கப்பட்ட 2 ஆடுகளை திருடர்கள் களவாடிச் சென்றுள்ளனர்.
கடந்த ஞாயிற்றுக்கிழமை பெய்த மழையைப் பயன்படுத்தி நீர்வேலி மனோன்மணி அம்மன் ஆலய வீதியில் உள்ள வீடொன்றில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.
களவாடப்பட்ட ஆடுகளின் பெறுமதி 45 ஆயிரம் ரூபாவுக்கு மேலாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.
குறிப்பாக நீர்வேலி, கோப்பாய் பிரதேசங்களில் ஆடுகளைத் திருடிச் செல்லும் திருடர்களின் தொல்லை தினமும் அதிகரித்துள்ளது.
குறித்த பகுதியில் உள்ள விவசாய நிலங்களில் மேய்ச்சலுக்காகக் கட்டப்படும் ஆடுகள் இவ்வாறு களவாடப்படுவதாகவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர். (வ-17)

## வர்த்தக நிறுவனங்கள் ஞாயிற்றுக்கிழமை திறக்கப்படும்

யாழ்ப்பாணம், ஒக்.23 -
"யாழ்ப்பாண வணிகர் கழகத்தின் தீர்மானத்துக்கமைய எதிர்வரும் தீபாவளி தினத்தை முன்னிட்டு ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் அடுத்த மாதம் 2ஆம் திகதி வரையான வர்த்தக விடுமுறை தினங்களில் சகல வர்த்தக நிறுவனங்களைத் திறக்க யாழ். வணிகர் கழகம் அனுமதி வழங்கியுள்ளது. (வ)



யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியின் மாணவர்கள், ஆசிரியர்கள் என 125 பேர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அண்மையில் இரத்ததானம் வழங்கினர். (வ-4)

## வீட்டில் தனித்திருந்த பெண்ணை மிரட்டிய மர்மக்கும்பல்

யாழ்ப்பாணம், ஒக்.23
வீட்டில் தனியாக இருந்த பெண்ணை இலக்கத் தகடற்ற மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாதோர் சிங்களத்திலும், கொச்சைத் தமிழிலும் பேசி மிரட்டியுள்ளனர்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு சுழிபுரம் வடக்கில் இடம் பெற்றுள்ளது.
இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-
நேற்று முன்தினம் இரவு தனது குழந்தைகளுடன் வீட்டில் தனியாக இருந்த பெண் ஒருவரிடம் இலக்கத் தகடுகள் இல்லாத மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் "உனது கணவன் எங்கே?" என கொச்சைத் தமிழிலும் , சிங்களத்திலும் கேட்டு மிரட்டினர். அத்துடன் "உனது கணவனுக்கு முதல் நடந்தது தெரியாதா?" என்றும் கேட்டுள்ளனர். அந்தப் பெண்ணின் கணவர் 2012 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இருந்தவர் என்று இனந்தெரியாத நபர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டிருந்தார். அதன் பின்னர் உயிர் அச்சுறுத்தலின் காரணமாக வெளிநாட்டுக்குச் சென்றுள்ளார். தற்போது அவரை தேடி மர்மக்கும்பல் இரவு வேளையில் வந்து விசாரித்து மிரட்டியதால் சுழிபுரம் வடக்கில் பதற்றமான சூழல் நிலவுகின்றது. சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (வ-21)

## ஏல விற்பனையில் நகை வாங்கிய பெண்ணிடம் கொள்ளை

தென்மராட்சி, ஒக்.23
வங்கி ஏல விற்பனையில் பெற்ற நகையுடன் வீடு திரும்பிய பெண்ணைப் பின் தொடர்ந்த திருடர்கள் சங்கத்தானைப் பகுதியில் சனநடமாட்டமில்லாத இடத்தில் வைத்து கைப்பையுடன் அபகரித்துச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது.
மீசாலையைச் சேர்ந்த பெண் ஒருவர் வங்கி ஒன்றில் பணிபுரிந்து வருகிறார். அங்கு இடம்பெற்ற நகைகள் ஏல விற்பனையின் போது 5 பவுண் தங்க நகைகளை அவர் கொள்வனவு செய்திருந்தார். அன்று மாலை கடமை முடித்து வீடு செல்லும் வேளையில் அவரைப் பின் தொடர்ந்து சென்ற கொள்ளையர்கள் சைக்கிளில் சென்ற பெண்ணின் கைப்பையை அபகரித்துச் சென்றுள்ளனர்.
கைப்பையினுள் கொள்வனவு செய்த நகை, 10 ஆயிரம் ரூபா பணம், தொலைபேசி, வங்கி அட்டை, அடையாள அட்டை போன்றவை இருந்துள்ளன.
இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
இதேவேளை கடந்த வாரம் அந்தப் பகுதியில் நடந்து சென்ற பெண்ணின் தங்கச் சங்கிலியையும் அறுக்க கொள்ளையர்கள் முயற்சி பலிதமாகாததால் தப்பியோடி விட்டனர். தெரிவிக்கப்பட்டது. (வ-9)

### சாவகச்சேரி பொதுச் சந்தையில்

## வெளியூர் வர்த்தகர்களுக்குத் தடை சபை உறுப்பினர்கள் எதிர்ப்பு

தென்மராட்சி. ஒக்.23
தீபாவளி வியாபாரத்துக்காக வரும் வெளியூர் வியாபாரிகளை பொதுச் சந்தையில் வியாபாரம் செய்ய அனுமதிப்பதில்லை என நகர சபைத் தலைவரால் விடுக்கப்பட்ட அறிவிப்புக்கு சபை உறுப்பினர்களால் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.
சாவகச்சேரி நகர சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று நடைபெற்றபோது வெளியூர் வியாபாரிகளுக்கு தடை விதிக்கும் அறிவிப்பை சபைத் தலைவர் வெளியிட்டார்.
அப்போது சந்தையில் உள்ள சில வர்த்தகர்களுக்காக சந்தைக்கு பொருள்கள் வாங்க வரும் ஆயிரக்கணக்கானோரை மக்கள் பிரதிநிதிகளான நாம் வெறுத்தொதுக்க முடியாது. பொருளின் தரம் அறிந்து கொள்வனவு செய்ய வேண்டியது மக்களின் கடமையாகும். ஒரு சிலரின் வர்த்தக நடவடிக்கைக்கு நகரசபை பணிந்து போக முடியாது.

**வியாபாரிகளின் உரிமைகளைத் தடுக்கும் முயற்சியில் சபை ஈடுபடக்கூடாது என உறுப்பினர்களால் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.**

வியாபாரம் என்பது சகலருக்கும் பொதுவான விடயமாகும். இலாப நட்டம் அவர்களின் வியாபாரத்தைப் பொறுத்தது. வியாபாரிகளின் உரிமைகளைத் தடுக்கும் முயற்சியில் சபை ஈடுபடக்கூடாது என உறுப்பினர்களால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.
உறுப்பினர்களின் கருத்துக்களை ஏற்றுக் கொள்வதாகத் தலைவர் சபையில் தெரிவித்தார். (வ-9)

## மன்னார் தனியார் பஸ் உரிமையாளர்கள் அமைச்சர் டெனீஸ்வரனைச் சந்தித்தனர்

மன்னார், ஒக்.23
மன்னார் மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்துக்கும்,, வடமாகாண அமைச்சர் சட்டத்தரணி பா.டெனீஸ்வரனுக்கும் இடையில் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் மன்னார் நகர சபை மண்டபத்தில் விசேட சந்திப்பு இடம்பெற்றது.
மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்கத்தின் தலைவர் ரி.ரமேஸ் தலைமையில் இடம்பெற்ற குறித்த சந்திப்பின் போது சங்கத்தின் செயலாளர் ரி.சுரேஸ்குமார் உட்பட சங்க நிர்வாக சபை உறுப்பினர்கள், மன்னார் நகரசபை முதல்வர் எஸ்.ஞானப்பிரகாசம் மற்றும் நகர சபை உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.



சந்திப்பின் போது மன்னார் மாவட்டத்தில் உள்ள தனியார் பஸ் உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளை அமைச்சர் டெனீஸ்வரனிடம் முன்வைத்து தமது பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுத் தருமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.
இதன்போது வருகை தந்த அமைச்சருக்கு மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்கத்தின் சார்பாக அதன் தலைவர் ரி.ரமேஸ் நினை வுச் சின்னம் ஒன்றை வழங்கிக் கௌரவித்தார். (வ-12)

### பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணிக்கக் கோரி

## சட்டசபையில் தீர்மானம் உடனே நிறைவேற்றுக

### கருணாநிதி வலியுறுத்து

சென்னை, ஒக்.23
பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வலியுறுத்தி சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்ற வேண் டும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.
இது தொடர்பாக கருணாநிதி வெளி யிட்ட அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா சார்பில் யாரும் கலந்து கொள்ளக் கூடாது என்று டெசோ சார்பில் வலியுறுத்தியுள்ளோம். ராமதாஸ், திருமாவளவன், கி.வீரமணி போன்றோரும் வலியுறுத்தியுள்ளனர்.
கடந்த 18 ஆம் திகதி பிரதமர் மன் மோகன் சிங்குக்கு எழுதிய கடிதத்தில் முதல்வர் ஜெயலலிதாவும் இதே கருத்தை வலியுறுத்தியுள்ளார்.
கனடா இந்த மாநாட்டைப் புறக் கணிக் கப் போவதாக ஏற்கனவே அறிவித்துள்ளது.
இதன் அடிப் படையில் ஒட்டு மொத்த தமிழகத்தின் உணர்-வும் ஒருமுகப்பட்டுள்ளது என்பதைத் தெரிவிக்கும் வகையில், பொதுநலவாய மாநாட்டில் இந்தியாவில் இருந்து எவரும் பங்கேற்கக் கூடாது



என்று சட்டசபைக் கூட்டத் தொடரில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். ஏகமனதாக நிறைவேற்றப்படும் இந்தத் தீர்மானத்தை மத்திய அரசுக்கு அனுப்பி வலியுறுத்த வேண்டும்.
சட்ட சபைக் கூட்டத் தொடர் இன்று புதன்கிழமை கூட உள்ளதாக ஆளுநர் கே.ரோசய்யா அறிவித்துள்ளார். பேரவை கூடுவது தொடர்பாக ஆளுநர் அறிவித்த பிறகு அரசு சார்பில் முக்கியமான அறிவிப்புகள் வெளியிடுவது மரபு இல்லை. அது பேரவையின் மாண்புக்குப் பெருமை சேர்ப் பதாகவும் அமையாது. ஆனால் அரசு சார்பில் தொடர்ந்து முக்கிய அறிவிப்புகள் வெளியிடப்படுவதாகவும் கருணாநிதி குற்றம்சாட்டியுள்ளார். (வ)

## வடமாகாண சபைச் செயற்பாடுகள் சிறப்பாக அமையட்டும்

### சாவகச்சேரி நகர சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

தென்மராட்சி, ஒக்.23
வடக்கு மாகாண சபைத் தேர்தல் சுமுகமாக நடைபெற ஒத்துழைத்த அனைத்துத் தரப்பினருக்கும் நன்றி தெரிவித்தும், மாகாண சபை ஆட்சியைக் கைப்பற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் முதலமைச்சர் , மாகாண அமைச்சர்கள் மற்றும் அனைத்து உறுப்பினர்களுக்கும் சிறப்புடன் செயற்படப் பாராட்டுத் தெரிவித்தும் சாவகச்சேரி நகர சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை குறித்த பிரேரணையைச் சமர்ப்பித்தார்.
பிரேரணை தொடர்பாக சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சூ.அலெக்ஸாண்டர் உரையாற்றுகையில்:-
25 வருடங்களின் பின்னர் வடமாகாண சபை என்னும் குழந்தை பிறந்துள்ளது. இதனை ஒழுங்கமைத்து சிறப்புடன் இயங்கவைக்க உள்ளூராட்சிச் சபைகள் உட்பட அனைவரும் ஒத்துழைத்து ஊக்குவித்து சிறந்த மாகாண சபையாக திகழச் செய்ய வேண்டும்.
2009 இற்குப் பின்னர் மக்களுக்கு ஏற்பட்ட நெருக்கடிகள் அனைவரும் அறிந்ததே. இந்த நிலையில் நாம் அனைவரும் ஒத்துழைப்பு ஊக்குவிப்பு வழங்க வேண்டும் எனவும் உள்ளூராட்சிச் சபைகள் அனைத்தும் மாகாண முதலமைச்சர், அமைச்சர்கள், உறுப்பினர்கள் ஆகியோருக்கு வாழ்த்துத் தெரிவித்து தீர்மானங்களை நிறைவேற்றி அவர்களை [illegible] தெரிவித்தார்.
மாகாண சபைச் செயற்பாடுகள் சிறப்பாக அமைய வாழ்த்துத் தெரிவிக்கும் வகையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட தாக தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவையான நிதி முறைப்படி கிடைத்தால் எமது பிரதேசத்தை வளப்படுத்த முடியும்

## கரவெட்டி பிரதேச சபைத் தலைவர் தெரிவிப்பு

பருத்தித்துறை, ஒக்.23
அந்தந்த பிரதேச சபைகளுக்குரிய நிதிகள் உரிய முறைப்படி கிடைத்தால் ஒவ்வொரு பிரதேசங்களை வளப்படுத்த முடியும். முத்திரை வரியும், நீதிமன்ற குற்றப்பணமும் கிடைக்குமாயின் எமக்கு 14 கோடி ரூபா கிடைக்கும். இதனை வைத்து கரவெட்டிப் பிரதேசத்தை அபிவிருத்தி அடையச் செய்ய முடியும் என கரவெட்டிப் பிரதேச சபைத் தலைவர் வியாகேசு தெரிவித்தார்.

கரணவாய் பகுதியில் அறிவகம் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த இரு ஆண்டுகளாக முத்திரை வரி பிரதேச சபைக்கு வழங்கப்படவில்லை. முத்திரை வரியானது மாகாண சபைக்குத்தான் உரியது. ஆனால் அது எமக்குக் கிடைக்கவில்லை. இதேபோல் நீதிமன்ற குற்றப் பண மும் எமக்குக் கிடைக்கவில்லை. இவை கிடைத்தால் எமது பகுதியை அபிவிருத்தி அடையச் செய்ய முடியும்.

இதேபோல் கடந்த 2011, 2012 ஆம் ஆண்டுகளில் நிறுத் தப்பட்ட நிதிக் கொடுப்பனவு கள் பிரதேச சபைக்கு கிடைக்க வேண்டும்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் நிதியிலிருந்து 6 லட்சத்து 75 ஆயிரம் ரூபா பணம் கிடைத்துள்ளது. அந்த நிதியிலிருந்தே அறிவகத்தின் திறப்பு விழாவுக்கு 40 ஆயிரம் ரூபா நிதிவழங்கப்பட்டுள்ளது.

எனவே பிரதேச அபிவிருத்திக்கு உரிய முறையில் பணம் கிடைத்தால் எம்மாலும் எமது பிரதேசத்தை அபிவிருத்தியடையச் செய்ய முடியும் -என்றார். (வ-422)

கணினி திருத்தம்
உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

## கண்ணீர் அஞ்சலி



வேலணை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவர்
ந. ஜெகநாதன் அவர்களின் பாசமிகு தாய்

**திருமதி இராசம்மா நடராசா**

அவர்கள் 21.10.2013 இல் அமரத்துவம் எய்தியமையிட்டு அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆன்மா இறைநிழலில் சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**பணிப்பாளர்கள், பணியாளர்கள்,**
**வேலணை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்,**
**வேலணை.**

(சி/13165) (10,14)

## மரண அறிவித்தல்

### விஜயராஜன் இராகுலன்

றொறன்ரோ கனடாவில் வசிக்கும் விஜயராஜன் (ரகு) றஞ்சிதகௌரி தம்பதியரின் அன்புப் புதல்வன் விஜயராஜன் இராகுலன் நேற்று (22.10.20103) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் கட்டுவன் விஜயசுந்தரம் தம்பதியரினதும், நயினாதீவு கதிரேசு கற்பகம் தம்பதியரினதும் அன்புப் பேரனும், விஜேயின் ஆருயிர்ச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

84/2, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
T.P: 021 7900729

தகவல்:
திருமதி ஞானகௌரி விக்னேஸ்வரன்
(பெரிய தாயார்),
சித்தப்பாமார்.

(32815) (10,14)

## மரண அறிவித்தல்

### அம்பலவாணர் பேரம்பலம்

(காரைநகர்)



காரைநகர், முல்லைப் பிலவினைப் பிறப்பிடமாகவும், காரைநகர் அல்லின் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் பேரம்பலம் (ஓய்வுபெற்ற உதவி நில அளவை அத்தியட்சகர்) நேற்றுமுன்தினம் (21.10.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர்-பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மாவதியின் அன்புக் கணவரும், சியாமளா (பிரான்ஸ்), பிறேமளா (கொழும்பு), முரளிதரன் (லண்டன்), அனுஷா (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வச் சந்திரன் (நேரு - பிரான்ஸ்), முருகமூர்த்தி (அதிபர்-யாழ்ற்ரன் கல்லூரி- காரைநகர்), தயாளினி, விக்கினேஸ்வரன் (ஆசிரியர்- பசறை தமிழ்ம.வி) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, கிருஸ்ணபிள்ளை, முருகேசு, பாக்கியம் மற்றும், மனோன்மணி, கமலம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வராணி கமலாதேவி, கங்காதேவி காலஞ்சென்ற நீதிராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், அருளம்பலம், சண்முகசங்கரன், நடராசா, கமலவேணி ஆகியோரின் சகலனும், கோகுலன், இராகுலன், நகுலன், மயூரேசன், செந்தூரன், நிரோசன், நிருஜன், அபிதா, கௌசீகன், கிருத்திகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.10.2013) வியாழக்கிழமை காலை. 9.00 மணிக்கு அன்னாரின் அல்லின் வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சாம்பலோடை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்லின் வீதி, காரைநகர்.
T.P: 021 320 7332

தகவல்:
குடும்பத்தினர்.

(33221) (10,14)

### பருத்தித்துறையில் நாளை தொழில் சந்தை

பருத்தித்துறை, ஒக்.23
வடமராட்சி பிரதேசத்திலுள்ள வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கு தனியார் துறையில் வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொள்ள மனிதவலு வேலை வாய்ப்பு திணைக்களத்தின் வழி காட்டல் நிகழ்வு பருத்தித்துறை பிரதே செயலகத்தில் நாளைவியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் ஒரு மணிவரை நடைபெறவுள்ளது.

இந்தத் தொழிற்சந்தையில் தனியார் நிறுவனங்கள் பல பங்குகொள்ளவுள்ளன. இதில் வேலை யற்ற இளைஞர், யுவதிகள் தங்களுக்கு பொருத்தமான வேலையை தெரிவு செய்து கொள்வதுடன் ஆலோசனைகளையும் பெறலாம் என பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (ந)

### அரச நாடக விழா

யாழ்ப்பாணம், ஒக்.23
கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் அரச சிறுவர் நாடக விழாவும் விருது வழங்கலும் நிகழ்வு நாளை வியாழக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு கொழும்பு றோயல் கல்லூரி மண்டபத்தில் நடை பெறவுள்ளது. (வ-14)

# மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு கச்சதீவை மீட்பதுதான்

## திராவிடர் கழகப் பொதுக்குழு தீர்மானம்

தமிழக மீனவர்களின் உரிமைக ளுக்கு நிரந்தரத் தீர்வு கச்சதீவை மீட்பதுதான் என்று திராவிடர் கழகப்பொதுக்குழுதீர்மானம்நிறைவேற்றியுள்ளது.

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமையில் நேற்றுமுன்தினம் காலையில் திராவிடர் கழகப் பொதுக் குழு கூடியது. இதில் தமிழக மீனவர்களின் உரிமைகளுக்கு நிரந்தரத் தீர்வு கச்சதீவை மீட்பதே என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தாக்கப்படுவதும், கைது செய்யப்படுவதும், சிறை வைக்கப்படுவதும் அன்றாட செயற்பாடாகி யுள்ளன. தமிழ்நாட்டு மக்கள் பல வகைகளி லும் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியும், நாடாளுமன்றத்தில் தமிழ்நாட் டைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒரு மனதாகவே உரத்த முறையில் குரல் கொடுத்து வரும் நிலையிலும் இந்தியப் பிரதமர் அடிக்கடி வருத்தத் தைத் தெரிவித்துக் கொள்வதும் கிளிப்பிள்ளை போல பாடம் படித்து வந்தது போல தொடர்ந்தும் நடைபெறுகின்றது. இவை எல்லாவற்றையும் துச்சமாக மதிக்கும் போக்கைஇலங்கை அரசுகடைப் பிடித்து வருகிறது.

இந்த வகையில் ஒரு சுண்டைக் காய்த் தீவு - வல்லரசாக ஆகப் போவதாகத் துடித்துக் கொண்டிருக்கும் இந்தியாவை அலட்சியப்படுத் துவது -இந்தியத் துணைக் கண்டத்தின் சுயமரியாதைக்குப் பேரிழுக்காகும்.

தமிழ்நாட்டுக்குச் சொந்தமான கச்சதீவை சட்ட விரோதமாக இலங்கைக்குத் தாரை வார்த்துக் கொடுத்தது தான் தமிழக மீனவர்கள் நாள் தோறும் அனுபவிக்கும் கொடுமைகளுக்கு முக்கிய காரணமாகும் என்பதால் கச்சத் தீவை மீட்பது என்று முடிவு செய்து, அதன் அடிப்படையில் செயற்பட வேண்டும் என்று இப் பொதுக் குழு மத்திய அரசை வலியுறுத்துகிறது-என்றுள்ளது. (வ)

# முள்ளிவாய்க்கால் அவலத்தை வெளிப்படுத்த பரப்புரைப் பயணம்

சென்னை, ஒக்.23
இலங்கை முள்ளிவாய்க்கால் அவலத்தை உலகின் கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையில் அடுத்த மாதம் 8, மற்றும் 9 ஆகிய திகதிகளில் பரப்புரை பயணம் மேற்கொள்ளவுள்ளதாக நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

மயிலாடுதுறையில் செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கையிலேயே அவர்இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைப் போரின் இறுதிக் கட்டத்தில் முள்ளி வாய்க்காலில் நடை பெற்ற அவலத்தை உலகின் கவனத்துக்குக் கொண்டு செல்லும் வகையில் அடுத்த மாதம் 8ஆம் மற்றும் 9ஆம் ஆகிய திகதிகளில் பரப்புரை பயணம் மேற்கொள்ளப்படவுள்ளது. இதில், தமிழ் தேசிய இயக்க அமைப்பாளர் பழ.நெடுமாறன், நடராசன் உள்ளிட்டவர்கள் கலந்துகொள்கிறார்கள். பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்தக் கூடாது - என்பதை இந்தப் பரப்புரையின் போது வலியுறுத்துவேன்- என்றார். (ய)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் சிவயோகநாதன்

(உரிமையாளர் நாதன் ஸ்ரோர்ஸ், கொக்குவில்.)

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவயோகநாதன் (உரிமையாளர் நாதன் ஸ்ரோர்ஸ் கொக்குவில், 22.10.2013 அன்று காலமாகி விட்டார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சகோதரர்கள், பிள்ளைகள்,
மருமக்கள்

கொக்குவில் மேற்கு, கொக்குவில்

## மரண அறிவித்தல்

### கிரியா கலாப முத்தாமணி

### பிரம்மஸ்ரீ சபாரதினக் குருக்கள் தேவராஜ குருக்கள் ( நடராஜ குருக்கள் )

### (மாலைசந்தை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய பிரதம குரு)



அல்வாய் மாலுசந்தியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அல்வாய் மாலை சந்தை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ சபாரத்தினக் குருக்கள் தேவராஜக் குருக்கள் நேற்று (22/10/2013) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினக் குருக்கள் வள்ளியம்மா தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியக் குருக்கள் இராசம்மா தம்பதியரின் மருமகனும், தவளாம்பிகை அம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியசர்மா மற்றும் வாலாம்பிகை அம்மா (கொழும்பு) கனகசபாபதி சர்மா (லண்டன்), ஆகியோரின் சகோதரரும், வசுந்திரா காலஞ்சென்ற இரவீந்திரக் குருக்கள், வத்சலா (லண்டன்), வைதேகி, சுதாகரக் குருக்கள்(மாலைசந்தை ஸ்ரீவரதராஜவிநாயகர் ஆலயக் குரு), கிரிதரன் (லண்டன்), சுபாஷனி (கொழும்பு), சுரேந்திரன் (புகையிரத அதிபர் செட்டிக்குளம்) ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற இராமகிருஷ்ண சர்மா, ஜெயேஸ்வரி, வாகீஸ் வரக்குருக்கள் (லண்டன்), பாலசுப்பிரமணியசர்மா (தொழில்நுட்ப உத்தியோகத்தர் மருத்துவபீடம் யாழ்ப்பாணம்), நித்தியாந்தி சித்திரா (லண்டன்), சுவாமிநாதசர்மா (நிதி முகாமையாளர் The Gemtrans Engineering Co.கொழும்பு) சாந்தினி ( அபிவிருத்தி உத்தியோகத்தர் விவசாய திணைக்களம், வட மாகாணம்) ஆகியோரின் அன்பு மாமானரும், விதுசன்( Doctor - லண்டன்), வித்தியாதரன் (லண்டன்),சுபாங்கன் ( பொறியியலாளர் இ.மி.சபை), பிரசாந்தன் (மின்சார சபை சுன்னாகம்), நிவேதா (லண்டன்), சஞ்சய் (லண்டன்) சுபஜெனனி (கொழும்பு), ஸ்ரீ குருபிரசாத், ஹரிபிரசாத் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 24/10/2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் காலை 11.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அடியார்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

மாலுசந்தி, அல்வாய் கிழக்கு.

(C/13171)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரைகுறை 'காப்பெற்' அக்கறை எடுப்பார் யாரோ?



வலி. வடக்கு, ஒக். 23

யாழ்ப்பாணம் காங்கேசன் துறை வீதிக்கான காப்பெற் போடும் பணிகள் பெருமளவில் நிறைவு பெற்றுள்ள போதிலும், சில இடங்களில் உரிய முறையில் காப்பெற் போடப்படாது கைவிடப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

கோண்டாவில் உப்பு மடம் சந்தி, சுன்னாகம் சந்தி போன்ற இடங்களில் காப்பெற் வீதி அமைக்கும் போது மதகுகள் திருத்தும் பணிகள் முடிவடையாமையால் அந்த இடங்களில் காப்பெற் போட முடியாத நிலைமை காணப்பட்டது.

உரிய மதகுகளை அமைக்கும் பணிகள் தற்போது நிறைவு பெற்றுள்ள போதிலும், அந்த இடங்களுக்கு மீண்டும் உரிய முறையில் காப்பெற் போடப்படவில்லை.

இதனால் காப்பெற் போடப்பட்டும் பயனற்ற நிலைமையே காணப்படுகின்றது.

எனவே வீதி அபிவிருத்தி அதிகார சபை அவற்றைப் பார்வையிட்டு உரிய முறையில் அந்தப் பகுதிகளிலும் காப்பெற் போட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என சமூக ஆர்வலர்களும் பொது மக்களும் வாகனச் சாரதிகளும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

(வ-86)

# விவசாய நடவடிக்கைகளின் போது நவீன உத்திகளைப் பின்பற்றுக

## கூட்டுறவு உதவி ஆணையாளர் தெரிவிப்பு

அச்சுவேலி, ஒக்.23

விவசாயிகள் மரபு ரீதியிலான நடைமுறைகளை மட்டும் தொடர்ந்து பின்பற்றாமல் நவீன தொழில்நுட்ப உத்திகளையும் மற்றும் விஞ்ஞான ரீதியிலான நடைமுறைகளையும் உள்வாங்கி தமது பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கேற்ப தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு கூறினார் யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் கே.அருந்தவநாதன்.

யாழ்.மாவட்ட உருளைக் கிழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஆரம்பக் கூட்டம் திருநெல்வேலியில் யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. இதன் போது பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதற்கு வழங்கப்படும் உதவிகள் மற்றும்ஊக்கு விப்புக்கள் உண்மையான விவசாயிகளுக்கு முழுமையாக கிடைக்க வேண்டும். இந்த விடயத்தில் போலிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கக் கூடாது. கூட்டுறவுத் தத்துவம் விவசாயிகளுக்கு நல்ல பயனைத் தந்துள்ளது. யாழ். மாவட்ட விவசாயிகள் கூட்டு றவு முறையில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்கள். இதனை யாழ். மாவட்ட கூட்டுறவுத் துறையின் வரலாற்றின் ஊடாகவும் நடை முறையிலும் கண்டுகொள்ள முடிகின்றது.

யாழ்.மாவட்டத்தில் பயிர்ச் செய்கையாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல நிலையில் வளர்ச்சிகண்டிருந்தது. இடைக் காலத்தில் நலிவடைந்து போனாலும் மீண்டும் அதன் சேவைகள் ஆரம்பித்துள்ளன. இந்த வகையில் உருளைக் கிழங்கு செய்கையாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதும் அவற்றை ஒன்றிணைத்து மாவட்ட ரீதியில் சமாசம் உருவாக்கப்படுவதும் நல்ல பாராட்டுக்கு உரியது இது. உருளைக் கிழங்கு செய்கையாளர்களுக்கு வாய்ப்பாக அமையும்.

பயிர்ச் செய்கையை ஊக்கு விப்பதற்கு வழங்கப்படும் உதவிகள், மானியங்கள் உண்மையான விவசாயிகளை சென்றடைய வேண்டும். இந்த விடயத்தில் ஊழல் நம்பிக்கை மோசடிக்கு இடமளிக்கக் கூடாது. சுயநலம் இருக்கக் கூடாது.

உருளைக்கிழங்கு செய்கையில் கடந்த காலத்தில் விவசாயிகள் எதிர்கொண்ட பாதிப்புகள், நட்டங்களைக் கருத்தில் கொண்டே 50 வீத மானிய விலையில் விதை உருளைக் கிழங்கு வழங்கப்படுகின்றது. இதில் முறை கேடுகளுக்கு இடமளிக்கக் கூடாது. இந்த விடயத்தில் மிக நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும். இதற்கு அனைத்து உறுப்பினர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இந்த விடயத்தின் நடைமுறைச் செயற்பாடுகள், முறைகேடுகள் என்பவற்றை கூட்டுறவுத் திணைக்களமும் கண்காணித்து சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்-என்றார்.

(வ-11)

## சுகாதார மேம்பாட்டு நிகழ்வு வடமராட்சியில் இன்று

வடமராட்சி.ஒக்.23

வடமாகாண கல்வி, சுகாதார அமைச்சுக்கள், மாகாண கல்வித் திணைக்களம், வடமராட்சி கல்வி வலயம் என்பன ஒன்றிணைந்து நடத்தும் சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழான நிகழ்வுகள் இன்று புதன்கிழமை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தலைமையில் இரு அமர்வுகளாக நடைபெறவுள்ளன.

**மாணவர்களால் ஒழுங்கமைக்கப்பட்ட சுகாதார மேம் பாட்டை விளக்கும் கண் காட்சியும் இடம்பெறும்**

காலை 8.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது அமர்வில் மருத்துவமுகாம், மாணவர்களால் ஒழுங்கமைக்கப்பட்ட சுகாதார மேம்பாட்டை விளக்கும் கண்காட்சி ஆகியன இடம்பெறும். முதலாவது அமர்வில் பிரதம விருந்தினராக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசாவும், சிறப்பு விருந்தினராக பிரதேச செயலர் இ.த.ஜெயசீலனும் கலந்து கொள்வர்.

பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அமர்வில் கண்காட்சி, போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கலுடன் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். இரண்டாவது அமர்வில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (வ-8-35)

# சுற்றுலாப் பயணிகளின் வருகை குடாநாட்டில் மீண்டும் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.23

யாழ்.குடாநாட்டுக்குள் மீண்டும் சுற்றுலாப் பயணி களின் வருகை அதிகரித்துள்ளதுடன் நகர் உட்பட சுற்றுலா மையங்களிலும் சுற்றுலாப் பயணிகள் நிறைந்து காணப் படுகின்றனர்.



காலநிலை மாற்றங்கள் மற்றும் விடுமுறை நாள்கள் அரிதாகக் காணப்பட்டதாலும் வடமாகாண சபைத் தேர்தலுக்கான ஆரவாரத்துடன் கடந்த மாதங்களில் யாழ்.குடாநாடு பரபரப்பாகக் காணப்பட்டதாலும் தென்பகுதி உட்பட வெளி மாவட்டங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து குடாநாட்டுக்கு வருகை தருவோரின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே காணப்பட்டது.

எனினும் வடமாகாண சபைத் தேர்தலின் பின்னர் குடாநாடு அமைதியடைந்துள்ள நிலையில் இந்த மாதம் தொடர்ச்சியான விடுமுறை தினங்கள் வந்து கொண்டிருப்பதால் சுற்றுலாப் பயணிகள் மீண்டும் குடாநாட்டுக்கு பெருமளவில் வருகைதர ஆரம்பித்துள்ளனர்.

குடாநாட்டின் பிரபலமான சுற்றுலா மையங்களைப் பார்வையிட்டு அது தொடர்பான புராதன கதைகளைக் கேட்டறிவதில் அவர்கள் ஆர்வம்காட்டி வருகின்றனர். சுற்றுலாப் பயணிகளின் இந்த வருகையால் யாழ். நகரும் நெரிசல் அடைந்துள்ளது.

சுற்றுலாப் பயணிகளது வாகனங்கள் நகரின் பிரதான வீதிகளில் தரித்து விடப்பட்டுள்ளதுடன் சுற்றுலா மையங்களிலும் சுற்றுலாப் பயணிகள் அதிக நேரத்தை செலவழிக்கின்றனர். சந்தைகளில் உள்ளூர் உற்பத்திப் பொருள்களையும் அவர்கள் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர். (வ-14-17)

## மருதங்கேணிக்கு விரைவில் கேபிள் தொலைபேசி இணைப்பு

யாழ்ப்பாணம்.ஒக்.23

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி பிரதேசத்துக்கு கேபிள் தொலைபேசி இணைப்புகளை வழங்குவதற்கான பணிகளை ஸ்ரீலங்கா ரெலிக் கொம் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

கேபிள் தொலைபேசி இணைப்புகளை வழங்குவதற்கான பரிவர்த்தனைக் கோபுரம் அங்கு அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பரிவர்த்தனைக் கோபுரம் ஊடாகவே வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேசத்துக்கு கேபிள் இணைப்புகள் வழங்கப்படவுள்ளன.



மருதங்கேணி பிரதேசத்தில் இதுவரை கேபிள் இணைப்புகள் கிடைக்கப்பெறாத காரணத்தால் அந்தப் பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கினர். எனினும் தற்போது அதற்கான முன்னாயத்தப் பணிகள் இடம்பெற்று வருவதுடன் முதற்கட்டமாக அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், வங்கிகள் போன்றவற்றுக்கு இணைப்புகள் வழங்கப்படவுள்ளன. அதனைத் தொடர்ந்து பிரதேசத்தில் உள்ள வீடுகளுக்கும் இணைப்புச் சேவை வழங்கப்படவுள்ளது. (வ-14-17)

**போதனா வைத்தியசாலை பணியாளர்கள் படுகொலை**

# இனிவரும் காலங்களில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறக் கூடாது

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்க யாழ்.கிளைத் தலைவர் கருத்து

யாழ்ப்பாணம்.ஒக்.23

யாழ்.போதனா வைத்தியசாலையில் மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் பணியாளர்களை இந்திய இராணுவத்தினர் சுட்டுக்கொலை செய்த பின்னர் அனைவருக்கும் முன்னாலேயே பெற்றோல் ஊற்றிக் கொளுத்தினர். இது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறக் கூடாது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்க யாழ்.கிளையின் தலைவரான மருத்துவ நிபுணர் எஸ்.நிமலன் தெரிவித்தார்.

போதனா வைத்தியசாலையில் பணியில் இருந்த போது 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் மருத்துவர்கள், தாதியர்கள், உத்தியோகத்தர்கள், நோயாளர்கள் உட்படப் பலர் கொல்லப்பட்டனர். இந்த நினைவு தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒவ்வொரு வருடமும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் நேற்று முன்தினம் நினைவு தின நிகழ்வு இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு அஞ்சலி உரை ஆற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சம்பவம் இடம்பெற்ற காலப்பகுதியில் நான் உட்படப் பலர் மருத்துவ மாணவர்களாக இருந்தோம். வைத்தியசாலையைச் சூழ ஷெல் மழை பொழிந்து கொண்டிருந்தபோது வைத்தியசாலையின் உள்ளே துப்பாக்கிகளால் 21 பேரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.


குழந்தை வைத்திய நிபுணர் சிவபாதசுந்தரம் தான் ஒரு வைத்தியர் என்று கூறி தனது கைகளை மேலே உயர்த்தியபோதும் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். மறுநாள் 21 பேரினது சடலங்களையும் இந்திய இராணுவத்தினர் தற்போது பிரேத அறை உள்ள இடத்துக்கு முன்பாக குவித்து அனைவரும் பார்த்திருக்க பெற்றோல் ஊற்றிக் கொளுத்தியிருந்தனர்.

வைத்தியசாலையில் நான் உட்பட மயிரிழையில் தப்பியவர்கள் அன்றையதினம் குறித்த ஓர் இடத்தில் முற்பகல் தொடக்கம் பிற்பகல் வரை முழங்காலில் தடுத்து வைக்கப்பட்டிருந்தோம். நாம் எம்மை வைத்தியர்கள், பணியாளர்கள் என்று கூறியிருந்த போதும் அச்சுறுத்தலுக்கு மத்தியிலேயே இருந்தோம். பின்னரே நிலைமை ஓரளவு சீராகியது. இது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம் பெறக் கூடாது - என்றார். (வ-4)

# உடுவிலில் மூவருக்கு டெங்குத் தொற்று

வலி.வடக்கு, ஒக்.23

யாழ்ப்பாணத்தில் மழை காலம் ஆரம்பித்ததைத் தொடர்ந்து உடுவில் சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் டெங்கு நோயின் தாக்கத்தால் 3 சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் இனங் காணப்பட்டுள்ளது.



உடுவில் சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் கடந்த காலத்தில் டெங்கு நோயின் தாக்கம் காணப்பட்ட மற்றும் வைத்தியசாலைக்கு காய்ச்சல் காரணமாக செல்ப வர்களின் அடிப்படையில் பொது சுகாதார பரிசோதகர்கள் காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பாக கிராம மட்டத்தில் மேலெழுந்தவாரியாக கடந்த 19 ஆம் திகதி ஆய்வுகளை மேற்கொண்டனர்.

இதன்போது இணுவில் துரை வீதியில் ஏற்கெனவே டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட வீட்டில் உள்ள பத்துமாதப் பிள்ளையொன்றும், மற்றும் உடுவில் [illegible] வீதியில் உள்ள ஒன்றரை வயதுப் பிள்ளையொன்றும் மற்றும் உடுவில் கிழக்கு காளி கோயிலடியில் உள்ள பாடசாலை மாணவனான 13 வயது சிறுவனொருவனும் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு அவர்கள் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் மேலும் டெங்குத் தாக்கம் ஏற்படாமல் தடுக்கும் வகையில் புகையூட்டல் மேற்கொள்ளப்பட்டதுடன் விழிப்புணர்வு செயற்பாடுகளும் பொது சுகாதார பரிசோதகர்கள், மருத்துவ மாதர்களால் மேற் கொள்ளப்பட்டன. (வ-86)

## ஞானச்சுடர் வெளியீடு

வரணி, ஒக்.23

சந்நிதியான் ஆச்சிரமத்தால் ஐப்பசி மாத ஞானச்சுடர் சஞ்சிகை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. இது 190 ஆவது மலராகும். வெளியீட்டு உரையை சி.பத்மநாதனும், மதிப்பீட்டு உரையை ஆசிரியரும் சைவப்புலவருமான க.நித்தியதசீதரனும் நிகழ்த்துவர். (வ-122-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலக்கரி ஊழல்: இடைக்கால அறிக்கை தாக்கல்

புதுடில்லி, ஒக்.23

நிலக்கரிச் சுரங்க ஒதுக்கீடு ஊழல் வழக்கு தொடர்பான விசாரணையின் தற்போதைய நிலவரம் குறித்த இடைக்கால விசாரணை அறிக் கையை உயர் நீதிமன்றத்தில் சி.பி.ஐ. தாக்கல் செய்துள்ளது.

நிலக்கரிச் சுரங்கம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் முறைகேடு நடைபெற்றது என்றும் அதில் அரசுக்கு 1 லட்சத்து 86 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது என்றும் குற்றஞ் சாட்டப்பட்டது. அதையடுத்து இது குறித்து சி.பி.ஐ. விசாரணைகளை ஆரம்பித்தது.

முறைகேடு தொடர்பாக சி.பி.ஐ. 14 வழக்குகளைப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டது. இந்தநிலையில் குறித்த வழக்குத் தொடர்பான விசாரணையின் தற்போதைய நிலவரம் குறித்த. இடைக்கால விசாரணை அறிக்கையை உச்ச நீதிமன்றத்தில் நேற்று சி.பி.ஐ. தாக்கல் செய்துள்ளது. அதில் தொழிலதிபர் குமார் மங்கலம் பிர்லா தொடர்பான வழக்கு விசாரணை விவரங்களை சி.பி.ஐ. தெரிவித்துள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

### மாயமான ஆவணங்கள்

நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு தொடர்பான ஆவணங்கள் மாயமானமை குறித்த விசாரணை தொடர்பான நிலையையும் சி.பி.ஐ. தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)



தமக்கு பணிகளைத் தொடர்ச்சியாக வழங்க வேண்டும் என்று கோரி இந்திய ஊர்காவல் படையினர் லக்னோவில் நடத்திய ஆர்ப்பாட்டம் அடிதடியில் முடிந்தது.போராட்டத்தைக் கட்டுப்படுத்த முயன்ற பொலிஸாரும், ஊர்காவல் படையினரும் தம்மிடையே மோதிக் கொண்டனர். தம்மீது தாக்குதல் நடத்துவதற்கு முன்னேற்பாடாக ஊர்காவற் படையினர் தடிகளுடன் ஹெல்மெற் அணிந்து ஆர்ப்பாட்டத்துக்கு வந்திருந்தனர் என்று பொலிஸார் குற்றஞ்சாட்டியுள்ளனர். (ற)

## சந்திரபோஸ் தொடர்பான ஆவணங்கள் வேண்டும்

### உறவினர்கள் மனு

கொல்கத்தா, ஒக்.23

சுபாஷ் சந்திரேபோஸ் குறித்து மாநில அரசிடம் உள்ள 64 ரகசிய ஆவணங்களை தங்களிடம் தர வேண்டும் என்று நேதாஜியின் உறவினர்கள் மேற்கு வங்க அரசுக்குக் கோரிக்கை கடிதம் எழுதி அனுப்பியுள்ளனர்.

எனினும் அதுகுறித்து மாநில அரசு பதிலேதும் அனுப்பவில்லை என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் கூறும் போது,

"சுபாஷ் சந்திரபோஸ் தொடர்பான 64 ரகசிய கோப்புகள் மேற்கு வங்காள அரசிடம் உள்ளது. அவைநமக்குகிடைத்தால் அவரைப் பற்றிய ஏராளமான தகவல்களை அறிய முடியும். மாநில அரசே நேதாஜியின் வாழ்க்கை பற்றிய தகவல்களை அளிக்க மறுத்து விட்டால்.. மத்திய அரசிடம் இருந்து நாங்கள் எவ்வாறு பெற முடியும்?" என்று தெரிவித்துள்ளனர். (ற)

# எல்லைப் பிரச்சினை தீர நீண்ட காலம் எடுக்கும்

## இந்தியப் பிரதமர் கூறுகின்றார்

புதுடில்லி, ஒக்.23

இந்திய - சீனப் எல்லைப் பிரச்சினை தீர்வதற்கு நீண்ட காலம் எடுக்கும் என்று தெரிவித்துள்ளார் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ரஷ்ய பயணத்தை முடித்து கொண்டு நேற்று சீனாவுக்குப் பயணமாகியுள்ளார். அந்த பயணத்தின்போது இரு நாடுகளுக்கு இடையேயான எல்லைப் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தநிலையில் இருநாடுகளுக்கும் இடையிலான எல்லைப் பிரச்சினை தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே இந்தியப் பிரதமர்



மன்மோகன்சிங் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,

"இந்திய - சீன உறவு கடந்த 9 ஆண்டுகளில் ஒரு நிலையான வளர்ச்சியை எட்டியுள்ளது. இருதரப்பு உறவுகள் மேம்படுவதற்கான வேலைகளில் சீனத் தலைவர்களோடு இணைந்து நாங்களும் பணியாற்றுகிறோம்.

இரு நாடுகளுமே பொருளாதார சந்தையில் பிரமாண்டமான வளர்ச்சியை கண்டுள்ளன. நாங்கள் எங்கள் வேறுபாடுகளை மறந்து எல்லைப் பகுதியில் அமைதியைக் காப்போம். அதே நேரத்தில் எங்களுக்குள் இருக்கும் வேறுபாட்டை எல்லையில் ஒரு போதும் அனுமதிக்கமாட்டோம்.

இந்திய - சீன எல்லைப் பிரச்சினை என்பது மிக நீண்ட பிரச்சினை. இது ஓர் எளிதான பிரச்சினை அல்ல. எல்லைப் பிரச்சினையைத் தீர்க்கச் சில காலம் எடுக்கும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## லாலு பதவி காலி



புதுடில்லி, ஒக்.23

ஊழல் வழக்கில் ஐந்து ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள பீகார் மாநிலத்தின் முன்னாள் முதல்வரும், ராஷ்டிரிய ஜனதா தள கட்சியின் தலைவருமான லாலு பிரசாத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டது. அதற்கான உத்தரவை மக்களவை சபாநாயகர் மீரா குமார் பிறப்பித்துள்ளார்.

பீகாரின் ஒருங்கிணைந்த பகுதியாக ஜார்க்கண்ட் மாநிலம் இருந்தபோது பைசா மாவட்ட கருவூலத்தில் இருந்து கால்நடைத் தீவனம் வாங் குவதற்காக பெறப்பட்ட நிதியில் 37 கோடியே 70 லட்சம் ரூபா முறைகேடு செய்யப்பட்டது என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

அதையடுத்து அந்தக் காலப் பகுதியில் பீகார் முதலமைச்சராக இருந்த ராஷ்டிரிய ஜனதா தள கட்சித் தலைவர் லாலு பிரசாத் மற்றும் முன்னாள் முதலமைச்சர் ஜெகன்நாத் மிஸ்ரா ஆகியோர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அது தொடர்பான வழக்கை விசாரித்த ராஞ்சி சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் லாலு பிரசாத்துக்கு ஐந்து ஆண்டுகள் சிறைத் தண்டனை மற்றும் 25 லட்சம் ரூபாய் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தது.

குற்றவழக்குகளில் தண்டனை பெறும் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தகுதிநீக்கம் செய்யவேண்டும்என்று கடந்த ஜூலை மாதம் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அதனையடுத்து ஊழல் வழக்குகளில் லாலு பிரசாத் யாதவ் மற்றும் ஜெகதீஷ் சர்மா ஆகியோருக்கு தண்டனை விதிக்கப்பட்ட நிலையில், அவர்களின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகள் தற்போது பறிக்கப்பட்டுள்ளன. (ற)

## இனிமேல்தான் இந்தியாவின் பதிலடி

புதுடில்லி, ஒக்.23

எல்லைக்கு அப்பால் இருந்து அத்துமீறும் பாகிஸ்தான் இராணுவத்தினருக்கு தக்க பதிலடி கொடுக்குமாறு இந்திய இராணுவத்தினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்று இந்திய இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. பாகிஸ்தான் படையினர் மீது உத்தரவுக்குச் சிறிதும் காத்திராமல் தயக்கமின்றி திருப்பித் தாக்குமாறு அதில் கூறப்பட்டுள்ளது. (ற)

# அரசியல் கூட்டமா? இல்லவே இல்லை

## பதறுகின்றார் நடிகர் விஜய்

சென்னை, ஒக்.23

நான் அரசியல் கூட்டம் எதையும் நடத்தவில்லை, எனது ரசிகர்களிடம் அரசியல் குறித்து ஆலோசிக்கவும் இல்லைஎன்று அவசர அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார் நடிகர் விஜய்.

நடிகர் விஜய் சில நாள்களுக்கு முன்பு கேரளாவிற்குச் சென்று தனது ரசிகர்மன்ற நிர்வாகிகளிடம் அரசியல் குறித்து ஆலோசனை நடத்தியதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன. அதையடுத்தே அவசர அவசரமாகஅறிக்கைஒன்றை வெளியிட்டுள்ளார் அவர்.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

"அண்மையில் நான் கேரளாவில் ரசிகர்மன்ற நிர்வாகிகளைச் சந்தித்து அரசியல் சம்பந்தமாக ஆலோசனையில் ஈடுபட்டதாக நாளிதழ் ஒன்றில் செய்தி வெளியானது. அந்



தத் தகவலில் உண்மை இல்லை. இதைப் படித்து ரசிகர்களும், பொது மக்களும் மற்றும் ஊடக நண்பர்களும் குழப்பம் அடைந்துள்ளார்கள். நான் கடந்த இரண்டு மாதமாக ஹைதராபாத்தில் 'ஜில்லா' படப்பிடிப்பில் பங்கேற்று வருகிறேன். கேரளாவிற்கே நான் செல்லவில்லை. அப்படியிருக்க இப்படியொரு தவறான செய்தியால் ரசிகர்கள் மட்டுமன்றி நானும் குழப்பமடைந்துள்ளேன்." - என்று கூறப்பட்டுள்ளது. (ற)

# தூண்டில் போடும் காங்.; சிக்குவாரா டெண்டுல்கர்?

புதுடில்லி, ஒக்.23

நட்சத்திர கிரிக்கெட் வீரர் சச்சினை காங்கிரஸ் கட்சிக்குள் இழுப்பதற்கு பேரம் பேசப்பட்டு வருகின்றது என்று மத்திய பிரதேச அரசியல் வட்டாரத்திலிருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த வாரம் நட்சத்திர கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெறும் தனது முடிவை அறிவித்தார். எதிர்வரும் நவம்பர் மாதம் மேற்கிந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்குப் பின்னர் முழுமையாக அவர் ஓய்வு எடுக்கவுள்ளார்.

இந்தநிலையில் எதிர்வரும் நவம்பர் மாதம் சட்டசபைத் தேர்தல் நடக்கும் மத்திய பிரதேச மாநிலத்தில் சச்சினை களம் இறக்க காங்கிரஸ் திட்டமிட்டுள்ளது.

மத்திய பிரதேசத்தில் கடந்த 10 ஆண்டுகளாக பா.ஜ.க ஆட்சி நடைபெற்று வருகிறது. அங்கு



எதிர்க்கட்சியாக இருக்கும் காங்கிரஸ் எப்படியாவது ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என கங்கணம் கட்டியுள்ளது. காங்கிரஸின் தேர்தல்பரப்புரைக் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ஜோதிராதித்யா சிந்தியா சச்சினுக்கு மிக நெருங்கிய நட்புக்குரியவராம். அவர் மூலம் விரைவில் சச்சினிடம் காங்கிரஸ் உயர்பீடம் பேசவுள்ளது என்று கூறப்படுகிறது.

2012ஆம் ஆண்டு ஜூன் மாதம் விளையாட்டு துறையில் ஆற்றிய சேவையைக் கௌரவிக்கும் வகையில் சச்சினுக்கு ஏற்கனவே ராஜ்ய சபா உறுப்பினர் பதவி வழங்கப்பட்டது.(ற)

# நீதிமன்றிடம் எடுபடாத பவர் ஸ்டாரின் 'பவர்'

## சரணடையுமாறு உத்தரவு

சென்னை, ஒக்.23

மோசடி வழக்கில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள சினிமா நடிகர் பவர் ஸ்டார் சீனிவாசன் நீதிமன்றில் சரணடைந்தே முன் பிணை பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ளது நீதிமன்றம்.

காரின் இலக்கத்தகட்டை மாற்றி விற்பனை செய்து மோசடி செய்தார் என்று விருதுநகர் போக்குவரத்து அதிகாரி பொலிஸாரிடம்அளித்தமுறைப்பாட்டை அடுத்தே நடிகர் பவர்ஸ்டார் சீனிவாசன், ஜோதிராஜன், பாலகிருஷ்ணன் ஆகிய 3 பேர் மீது மோசடி வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணை தற்போது நடைபெற்றுவரும் நிலையில்வழக்குவிசாரணைக்கு பவர் ஸ்டார் தொடர்ந்து முன்னிலையாகாததால் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது. அதனால் முன்பிணை கோரி பவர் ஸ்டார் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்திருந்தார். எனினும் மனுவை விசாரித்த நீதிபதி, பவர்ஸ்டார் நீதிமன்றில் சரணடைந்த பின்னரே பிணை கோரி விண்ணப்பிக்க முடியும் என்று தீர்ப்பளித்தார்.(ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரான்ஸ் மக்களை உளவு பார்த்தீர்களா?

### அமெ. தூதருக்கு அழைப்பாணை

பாரிஸ். ஒக்.23
பிரான்ஸ் மக்களின் தொலைபேசி உரையாடல்கள் அமெரிக்க உளவு அமைப்பால் ஒட்டுக் கேட்கப்பட்டன என்று வெளியான தகவல்கள் தொடர்பாக அமெரிக்கத் தூதருக்கு பிரான்ஸ் வெளியுறவுத்துறை அமைச்சகம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.
இந்தத் தகவலை உறுதிப்படுத்தியுள்ள பிரான்ஸ் வெளியுறவுத்துறை அமைச்சர் லாரன் பாபியஸ், அது குறித்து மேலும் கூறும்போது,
"இந்தவிவகாரம் தொடர்பான தகவல்கள் நாளிதழில் வெளியாகியவுடன் உடனடியாக அமெரிக்கத் தூதருக்கு அழைப்பாணை அனுப்பட்டது." என்று தெரிவித்துள்ளார்.
பிரான்ஸில் வெளியாகும் 'லேமான்ட்' நாளிதழ்,
"அமெரிக்க உளவுப்பிரிவின் தேசிய பாதுகாப்பு அமைப்பு கடந்த ஆண்டு டிசெம்பர் 10ஆம் திகதி முதல் இந்த ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி வரை பிரான்ஸில் உள்ள 7 கோடியே 3 லட்சம் பேரின் தொலைபேசி உரையாடல்களை ரகசியமாகப் பதிவு செய்துள்ளது. அவற்றின் மூலம் அவர்களுக்கு பயங்கரவாதிகளின் தொடர்புகள் உள்ளதா என்பதைக் கண்டறிவது அதன் நோக்கம் அல்ல. பிரான்ஸின் முக்கிய தொழிலதிபர்கள் மற்றும் அரசியல்வாதிகளின் தொடர்புகளைக் கண்காணிக்கவே அவை பயன்படுத்தப்படுகின்றன" என்று தகவல் வெளியிட்டிருந்தது. அவற்றைத் தேசிய பாதுகாப்பு அமைப்பின் முன்னாள் பணியாளர் எட்வேர்ட் ஸ்நோடனை மேற்கோள் காட்டி அந்த நாளிதழ் வெளி யிட்டிருந்தது.
இந்த விடயம் குறித்து அதிகாரிசனை செலுத்தியுள்ள பிரான்ஸ் உள்துறை அமைச்சர் மேனுவல் வேல்ஸ், "இந்தத் தகவல் மிகவும் அதிர்ச்சி அளிக்கக் கூடியதாக உள்ளது. இதை ஏற்றுக்கொள்ளவே முடியாது" என்று தெரிவித்துள்ளார். (ற)





ஆஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் பகுதியில் ஏற்பட்ட காட்டுத் தீ கட்டுக்கடங்காமல் பரவி வருகின்றது. அந்தப் பகுதியில் வசித்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அகற்றப்பட்டு வரும் நிலையில், தீயைக் கட்டுப்படுத்த நூற்றுக்கணக்கான தீயணைப்பு வீரர்கள் இரவு பகலாகப் போராடி வருகின்றனர். 40 ஆயிரம் ஹெக்ரெயருக்கும் மேலான நிலப்பரப்பை தன் பசிக்கு இரையாக்கிய தீயில் அகப்பட்ட சின்னஞ்சிறு உயிரினம் ஒன்று படத்தில். (ற)

## மெக்சிகோவை தாக்குகிறது பெரும் புயல்!

சான்பிரான்ஸிஸ்கோ, ஒக்.23
மெக்சிகோவின் தென்பகுதியை அடுத்த 72 மணி நேரத்துக்குள் கடுமையான புயல் தாக்கவுள்ளது என்று அந்த நாட்டு வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.
இதுகுறித்து தேசிய நீர் குழு தலைவர் டேவின் கோர்ன்பெல் கூறுகையில்,
"பெரும் புயல் ஒன்று மெக்சிகோவைத் தாக்குவது உறுதியாகி உள்ளது. அந்தப் புயல் கடும் சூறாவளியாக மாற (ஹரிகேன்) 80 சதவிகிதம் வாய்ப்பு உண்டு.
அந்தப்புயல் காரணமாக கடலோரப் பகுதிகளில் கனமழை பொழியும். பலத்த காற்று வீசும்' என்று தெரிவித்துள்ளார்.
கடந்த சில மாதங்களுக்கு முன் மெக்சிக்கோவில் அடுத்தடுத்து ஏற்பட்ட இரண்டு சூறாவளிகளில் 157 பேர் உயிரிழந்தனர். 17 லட்சம் பேர் வீடுகளை இழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# மனித உரிமைகள் பேணப்படவில்லை

### சவூதி அரேபியாவைச் சாடுகின்றது சர்வதேச மன்னிப்புச் சபை

நியூயோர்க், ஒக்.23
சவூதி அரேபியாவில் மனித உரிமைச் செயற்பாடுகள் மோசமடைந்து வருகின்றன என்று சர்வதேச மன்னிப்புச் சபை குற்றஞ்சாட்டியுள்ளது.
நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் தமது நாட்டில் சீர் திருத்தங்களை நடைமுறைப் படுத்துவோம் ஐ.நா. சபைக்கு என்று சவூதிஅரேபியா உறுதியளித்திருந்தபோதும், அது குறித்து இது வரை எத்தகைய நடவடிக் கைகளையும் அந்த நாடு மேற்கொள்ளவில்லை என்றும் அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.
இதுகுறித்து சர்வதேச மன்னிப்புச்சபை விடுத்துள்ள அறிக்கையில்,
"சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதாக ஐ.நா. சபைக்கு சவூதி அரேபியா உறுதி வழங்கியிருந்தது.

AMNESTY INTERNATIONAL

ஐ.நா. பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் சவூதி அரேபியாவின் மனித உரிமைச் செயற்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

ஆனால் அடக்குமுறையே அந்த நாட்டில் அதிகரித்துள்ளது. அமைதியைச் செயற்படுத்தும் ஆர்வலர்கள் எதேச்சாதிகாரத்தனமான முறையில் அடக்கப்படுகின்றனர். கைது செய்யப்படுபவர்கள் நீதியற்ற விசாரணை முறையை எதிர்கொள்கின்றனர்.
அவை குறித்து எழும் சர்வதேச விமர்சனங்களை அடக்குவதற்கு தன்னிடம் உள்ள பொருளாதார வலுவைப் பயன்படுத்துகின்றது சவூதி அரேபியா." என்று கூறப்பட்டுள்ளது.
ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் சவூதி அரேபியாவின் மனித உரிமைச் செயற்பாடுகள் குறித்து விவாதிக்கப்படவுள்ள நிலையில் சர்வதேச மன்னிப்புச்சபையின் இந்த அறிக்கை வெளியாகியுள்ளது. (ற)

## மூளை அகற்றப்பட்டே கெனடியின் உடல் அடக்கம்

### வெளியாகும் புதிய தகவல்கள்

நியூயோர்க், ஒக்.23
சுட்டுக்கொல்லப்பட்ட அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோன் எப் கெனடியின் மூளையை அவரது தம்பி களவாடினார் என்று தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.
அமெரிக்காவின் 38ஆவது ஜனாதிபதியாகப் பதவி வகித்தவர் ஜோன் எப் கெனடி. அவர் 1961 ஆம் ஆண்டு முதல் 1963ஆம் ஆண்டு வரை ஜனாதிபதியாகப் பதவி வகித்தார். 1963ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22ஆம் திகதி தனது 46ஆவது வயதில் டெக்காஸ் மாநிலம் டல்லாஸ் நகரில் மனைவிஜாக்குலினுடன் காரில் செல்லும்போது சுட்டுக் கொல்லப்பட்டார்.
இந்த நிலையில் ஜேம்ஸ் சுவான்சன் என்பவர் கெனடி குறித்து 'என்ட் ஒவ் டேஸ்' என்ற புத்தகம் ஒன்றை வெளி யிட்டுள்ளார்.
அந்தப்புத்தகத்தில் "சுட்டுக் கொல்லப்பட்ட கெனடியின் உடல் அடக்கம் செய்யப்பட்ட போது அவரது மூளை புதைக்கப்படவில்லை.
கெனடியின் மூளையை அவரது தம்பி ரோபெர்ட் கெனடி களவாடிச் சென்று விட்டார். தற்போது அதை ஒரு பாதுகாப்புப் பெட்டகத்தில் பத்திரப் படுத்தியுள்ளார். கெனடிக்கு ஏற்பட்டிருந்த நோய் குறித்தும், அதற்காக அவர் எடுத்துக் கொண்ட மருந்து மற்றும் சிகிச்சையை உலகம் அறியாமல் மறைப்பதற்காகவும் இப்படி அவர் செய்திருக்கலாம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
அந்தத் தகவல்களால் தற்போது அமெரிக்காவில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (ற)

# கஞ்சா விற்கப் போகின்றோம்


### உருகுவே அரசு அதிரடி அறிவிப்பு

மான்டேவீடியோ, ஒக்.23
தென் அமெரிக்க நாடான உருகுவே அரசு, கஞ்சா விற்பனையில் ஈடுபடப் போவதாக என்று அதிரடியாக அறிவித்துள்ளது. அதன்மூலம் எதிர்காலத்தில் உருகுவே குடிமக்கள் தரமான ஒரு கிராம் கஞ்சாவை ஒரு அமெரிக்க டொலருக்குப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அந்நாட்டு அரசு கூறுகின்றது.
கொலம்பியா, வெனிசுவேலா, உருகுவே போன்ற தென் அமெரிக்க நாடுகளில் 'கொக்கேய்ன்' போன்ற போதைப் பொருள் உற்பத்தி மற்றும் கடத்தல், கட்டுக்கடங்காமல் நடைபெற்று வருகிறது. அதே போன்று மெக்சிகோவிலும் இந்தப் பிரச்சினை தலைவிரித்து ஆடுகிறது.
அதனால் வன்முறை, போதைப் பொருளுக்கு அடிமையாதல் போன்ற சமூகப் பாதிப்புகளை, பல ஆண்டு முயற்சிக்கு பிறகும் கட்டுப்படுத்த முடியாததால் பொருளாதார ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள அந்த நாட்டு அரசுகள் முடிவெடுத்துள்ளன.
போதைப் பொருள்களின் விலை குறைந்ததும் பாதிப்பும் குறைந்தமான கஞ்சாவின் பயன்பாட்டை சட்டப்பூர்வமாக அனுமதிக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என்று அந்த நாடுகள் முடிவு செய்துள்ளன.
அதனால் விலை உயர்ந்த கொடிய போதைப் பொருள்களின் பயன்பாடு குறையும், கொடிய போதைப் பொருள்களை தயாரிக்க தேவைப்படும் தாவரங்களை சட்ட விரோதமாக வளர்க்கும் விவசாயிகள் கஞ்சாப் பயிருக்கு மாறுவர் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அந்த வகையில், உருகுவேயில் கஞ்சா பயன்பாட்டை அனுமதிக்கும் சட்டம் விரைவில் நிறைவேற்றப்பட உள்ளது. இந்தச் சட்டப்படி ஒவ்வொரு நபரும் மாதம் 40 கிராம் வரை கஞ்சாவை வாங்கிப் பயன்படுத்தலாம் என்று கூறப்படுகின்றது. (ற)



## அணுமின் நிலையத்துக்கு பிரிட்டன் இணக்கம்

லண்டன், ஒக்.23
பிரிட்டனின் முதலாவது புதிய அணுமின் நிலையத்தை நிர்மாணிப்பதற்கு அந்தநாட்டுஅரசு இணக்கம் தெரிவித்துள்ளது.
பிரான்ஸின் முன்னணி மின் சக்தி நிறுவனமான ஈடிஎப் தலைமையிலான நிறுவனங்களின் கூட்டமைப்பு இந்த அணுமின்நிலையத்தை நிர்மாணிக்கவுள்ளது. எதிர்வரும் 10 ஆண்டுகளில் நிர்மாணித்து முடிக்கப்படவுள்ள இந்த அணுமின் நிலையத்திலிருந்து நாட்டின் மின்சக்தித் தேவையின் 7 சதவீதத்தை பூர்த்திசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது.
பிரிட்டன் இயற்கைவழி எரிபொருள்களில் மட்டுமே தங்கியிராமல் குறைந்த எரிசக்தி பாவனையை நோக்கிச் செல்வதற்கு இந்த அணுமின் திட்டம் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ற)



ஆஸ்திரேலியாவின் புகழ்பெற்ற சிட்னி ஒபேரா கூடம் தனது 40ஆவது ஆண்டுப் பூர்த்தி தினத்தை கொண்டாடியது. 1973 ஆம் ஆண்டு திறக்கப்பட்ட இந்தக் கூடத்தின் வெளியே கூடி பிறந்தநாள் வாழ்த்து பாடிய மக்கள், கேக் வெட்டியும் தங்கள் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டனர்.தானிஷ் கட்டடக்கலை நிபுணரால் வடிவமைக்கப்பட்ட அந்தக் கட்டடத்தை அமைக்க 14 ஆண்டுகள் எடுத்தது. தொலைக்காட்சியில் மட்டுமே பார்த்த அந்தக் கட்டடத்தை சுற்றிப் பார்க்கும் வாய்ப்பு 40ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எதிர்காலத்தில் அறிவையும் ஆற்றலையும் வெளிப்படுத்தும் நூல்கள் வெளிவர வேண்டும்

யாழ்ப்பாணம், ஒக்.23
தமிழ், சமஸ்கிருதம் இரண்டிலுமே பாண்டித்தியம் பெற்றவர் பண்டிதர் பஞ்சாட்சரசர்மா. அவர் கந்தபுராணத்தில் அதீத ஈடுபாடு கொண்டு அதன் புகழைப் பரப்ப தனது பொருள்களைச் செலவிட்டார்.

பணடிதர் மற்றும் சுவாமி இராசேந்திரக்குருக்கள் ஆகிய இரண்டு பெரியார்களின் நினைவாக இந்த விழா இடம்பெறுவது பொருத்தமானதே என பிரம்மஸ்ரீ சி.சரவணபவன் குறிப்பிட்டார்.

இந்து சமயப் பேரவையின் ஆதரவுடன் சர்வானந்தமயபீடம் நடத்திய புத்தகத் திருவிழா சனி, ஞாயிறு ஆகிய இரு நாள்கள் நடைபெற்றன.

இந்து சமயப் பேரவையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தலைமை உரையாற்றிய பிரம்ம ஸ்ரீ சி.சரவணபவன் இந்திய சைவ பண்பாட்டுக் கமைய வாழ்ந்த இவர்கள் கல்விமான்கள் மட்டுமன்றி சாதாரண மனிதனும் உன்னதமான நிலையை எய்த வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டிருந்தனர். இந்தப் பெரியார்களின் ஆக்கங்களையும் தனது ஆக்கங்களையும் கொண்டதான பல நூல்களைத் தந்த கோப்பாய் சிவம் இன்று 'நலம் நல்கும் நாராயணன்', 'சைவ விரதங்களும் விழாக்களும்' என்னும் இரண்டு நூல்களை வெளியிட்டுள்ளார். இந்தியா வரை அவரது புகழ் பரந்துள்ளது. அவர் மேலும் சிறந்த பல ஆக்கங்களைத் தருவதன் மூலம் எதிர்காலச் சந்ததிக்குச் சிறந்த அறிவையும், ஆற்றலையும் பெறக் கூடிய நிலையை உருவாக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ந-7)

> "கல்விமான்கள் மட்டுமன்றி சாதாரண மனிதனும் உன்னதமான நிலையை எய்த வேண்டும் என்பதில் இவர்கள் ஆர்வம் கொண்டிருந்தனர்



இலங்கை பெண்கள் சாரணிய மன்றத்தால் நடத்தப்பட்ட ஜனாதிபதி விருது வழங்கும் விழா கொழும்பில் நடைபெற்றது. இந்த விழாவில் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவிகளான யாழினி இராஜேந்திரன், சைத்தசி ஜெயராஜா ஆகியோருக்கு ஜனாதிபதி விருது கிடைத்துள்ளது. இந்த விருது வடமாகாணத்துக்கு பத்து வருடங்களின் பின் கிடைத்துள்ளது. இந்த விருதைப் பெற்ற மாணவிகளுடன் மாணவர்கள் விருதைப் பெறுவதற்கு உழைத்த இலங்கை பெண்கள் சாரணியமன்ற முன்னாள் ஆணையாளர் திருமதி தீ.தர்மகுலசிங்கம், மற்றும் திருமதி சிவராஜா ஆகியோரையும் காணலாம்.

# சாரணர் துருப்பின் 70 ஆவது ஆண்டுவிழா

வலி. வடக்கு, ஒக். 23
கொக்குவில் இந்துக் கல்லூரி சாரணர்களின் 7 ஆவது சாரணர் துருப்பின் 70 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பகல் 10.30 மணிக்கு கல்லூரி பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் சாரணன் உ.அமல்ராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி சாரணன் சதானந்தன் ஆனந்தும் சிறப்பு விருந்தினராக நல்லூர்க் கோட்டக் கல்விப்பணிப்பாளார் சு.சண்முககுமாரும் கௌரவ விருந்தினராக தொழில் முனைவர் சி.ராஜ்குமாரும் யாழ் மாவட்ட சாரண ஆணையாளா செ.தேவரஞ்சனும் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் சாரணியன் மலர் வெளியிடல், சாரணிய இணையத் தளத்தை ஆரம்பித்தல் மற்றும் சாரணிய உயர் விருது பெற்றவர்களின் கௌரவிப்பு நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ந-86)

# புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி.தென் மேற்குப் பிரதேச சபை நடத்தும் புத்தகக் கண்காட்சியும், விற்பனையும் இரு தினங்கள் நடைபெறவுள்ளன.

பிரதேச சபை கலாசார மண்டபத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் 26 ஆம் திகதி சனிக்கிழமையும் நடைபெறும்.

இந்தக் கண்காட்சி பாடசாலை மாணவருக்கு பயனுள்ள தாக அமையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-100)

# நடமாடும் நூல் கண்காட்சி

வலி. வடக்கு, ஒக். 23
வலி. தெற்கு உடுவில் பிரதேச சபையின் ஏழாலை உப அலுவலகமும் புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயமும் இணைந்து உள்ளூராட்சி வாரம், தேசிய வாசிப்பு மாதம் என்பவற்றை முன்னிட்டு நடாத்தும் நடமாடும் நூற் கண்காட்சி இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு புன் னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் அதிபர் த.லோகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் மொரட்டுவைப் பல்கலைக்கழக ஓய்வுநிலை பேராசிரியர் கந்தப்பு சுப்பிரமணியம் கலந்து கொண்டு கண்காட்சியைத் திறந்து வைப்பார். (ந-86)

# விஞ்ஞான மாணவர்களுக்கு வெளிக்களப் பயிற்சி

வடமராட்சி, ஒக்.23
வலிகாமம் வலயப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான பயிற்சியும், வெளிக்களச் செயற்பாடுகளும் தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தினரால் அண்மையில் நடத்தப்பட்டது. இதன் போது யாழ்.பண்ணை மற்றும் சரசாலைப் பகுதிகளில் காணப்படும் கண்டல் தாவரச் சூழலை மாணவர்கள் பார்வையிட்டனர். அதனைத் தொடர்ந்து வெளிக் கள நிலையத்துடன் அமையப்பெற்ற கடற்கரைச் சூழல், சதுப்பு நிலச்சூழல் மற்றும் கடலும் நன்னீரும் கலக்கும் சூழல் ஆகியவற்றைப் பார்வையிட்டு அவை தொடர்பான மாதிரிகளையும் சேகரித்தனர்.

தொண்டமனாறு ஏரியில் காணப்படும் கடல் தாவரங்கள், விலங்குகள் மற்றும் இறால் முட்டைக் கூடுகள் ஆகியவற்றைப் பார்வையிட்டதுடன் தாவர விலங்குகளுக்கு இடையேயான இடைத் தொடர்புகள், சூழலியல் இசை வாக்கம் தொடர்பாகவும் ஆய்வுகளையும் மேற்கொண்டனர்.

இந்தக் களப்பயிற்சியில் தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தின் தலைவர் பேராசிரியர் திருமதி எஸ்.குகதாசன், வெளிக்களப் பணிப்பாளர் திருமதி க.இராஜாராம், தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தின் உப தலைவர் ந.அனந்தராஜ், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் இ.நாமகள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஆகியோருடன் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களும் ஆசிரியர் களும் கலந்து கொண்டு களப் பயிற்சியைப் பெற்றுக் கொண்டனர். (ந-8)

# உளநல விழிப்புணர்வு கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக்.23
யாழ்.பல்கலைக்கழக மெய்யியல் உளவியல்துறை மாணவர்களின் ஏற்பாட்டில் உளநல விழிப்புணர்வு தொடர்பான உளவியல் கண்காட்சி இன்றும், நாளையும் நடை பெறவுள்ளது. யாழ்.பல்கலைக்கழக கலைப் பீட புதிய கட்டடத் தொகுதியில் இரு நாள்களும் காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை நடைபெறும் இந்தக் கருத்தரங்கு மெய்யியல் உளவியல் துறைத் தலைவர் கலாநிதி க.கஜவிந்தன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கலைப் பீட பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதனும் கௌரவ விருந்தினராக பேராசிரியர் ப.புஸ்பரட்ணமும், சிறப்பு விருந்தினர்களாக மெய்யியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் நா.ஞானக்குமரன், பேராசிரியர் க.சிவானந்தமூர்த்தி ஆகியோரும் கலந்துகொள்வர். (ந)

# நிர்வாகிகள் தெரிவு

வரணி, ஒக்.23
வரணி பிரதேச வைத்திய சாலை நலன்புரி சங்கத்தின் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவு கடந்த திங்கட்கிழமை சங்கத்தின் தலைவர் வ.ஆறு முகம் தலைமையில் நடை பெற்றது.

தெரிவு செய்யப்பட்ட நிர்வாகி கள் விவரம் வருமாறு:- தலைவர் மருத்துவர் வீ.ஆறுமுகம், செயலாளர் சி.அருணாசலம், தனாதிகாரி வீ.சிவராசசிங்கம், உப தலைவர் சி. சின்னத்தம்பி, உப செயலாளர் செ.நவரட்ணசாமி, கணக்காய்வாளர் கா.ராஜ்மோகன் ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக 11 பேரும் தெரிவு செய்யப்பட்டனர். (ந-122)

# மழையைச் சாதகமாக்கி பெண்ணிடம் கொள்ளை

கொட்டும் மழையை சாதகமாக பயன்படுத்திய திருடன் சைக்கிளில் சென்ற பெண்ணிடம் இருந்து சுமார் பதினையாயிரம் ரூபா பணம் மற்றும் இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் என்பவற்றை கைப் பையுடன் பறித்தெடுத்து சென்ற சம்பவம் திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு கோண்டாவில் இந்து மகா வித்தியாலய ஒழுங்கையில் இடம் பெற்றுள்ளது.

நல்லூர் பிரதேச சபையில் கடமை யாற்றுபவரான அப்பெண் சைக்கிளில் தனது வீட்டுக்கு சென்று கொண்டு இருந்த வேளையில் மோட்டார் சைக்கிளில் பின்னால் வந்த நபர் சைக்கிளின் முன்கூடையில் பொருள்களுடன் வைக்கப்பட்டு இருந்த கைப் பையைப் பறித்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளார்.

இதனுள் பலஆவணங்களும் இருந் துள்ளன. இதுசம்பந்தமாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ந-86)

நாய்க்குட்டிகள் விற்பனைக்கு
டல்மேஷன் மற்றும் டோபர்மன் நாய்க் குட்டிகள் உடன் விற்பனைக்கு மானிப்பாயில் உள்ளது.
T.P: 077 476 6744 (33208) (6.3.4)

கை நிறைய உழைக்கும் வாய்ப்பு
நீங்கள் O/L பரீட்சையில் சித்தியடைந்தவரா? கை நிறைய உழைக்க வேண்டும் என்று விரும்புபவரா?
ஆம் எனில் நேர்முகத் தேர்வுக்கு உடனே அழையுங்கள்
077 640 8622
T. நிஷாந்தன் (33207) (6.3.4)
(எதுவித கட்டணமும் அறவிடப்படமாட்டாது)

வாகனம் விற்பனைக்கு
TATA-207-NP-PR.xxxx Cap
வாகனம் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 515 1761 (29673) (6.3.4)

விற்பனைக்கு
பொமனேரியன், டாஸன் நாய்க்குடடிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 440 2087 (33150) (6.3.4)

விற்பனைக்கு
புன்னாலைக்கட்டுவன் வடக்கு திடர்புலத்தில் கடைக் கட்டடத்துடன் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(32001)(45.3.6) தொ.பே.077 658 2818

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
விருதுகள் இரவு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விருதுகள் இரவு விழாவானது இன்று (23.10.2013) புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும்.
அழைப்பிதழில் குறிப்பிட்டிருந்தபடி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு மைதான திறந்தவெளி அரங்கிற்குப் பதிலாக இந்நிகழ்வு கைலாசபதி கலையரங்கிற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதனை அழைப்பிதழ்கள் கிடைக்கப்பெற்றோர் கவனத்தில் கொள்ளுமாறு வேண்டிக்கொள்ளப்படுகின்றீர்கள்.
பதிவாளர். (சி/13161)(6.3.4)

White Stone (Pvt) Ltd
Wanted Accountant
Work place : Kilinochchi
Qualifications:
* AAT Completed with 2 Years Accounting experience OR
* HNDA fully qualified OR
* ICASL / CIMA partly qualified with 2 years Accounting experience.
Ladies are encouraged to apply.
Salary Negotiable
Contact to:-
White Stone (Pvt) Ltd.
No-16, 1st Floor, 2nd Cross Street, Vavuniya.
024 - 222 6262, 077 - 710 4559
Contact before 05.11.2013
(29822)(10.6.3)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
கிளி/மயில்வாகனபுரம் அ.த.க.பாடசாலை
தருமபுரம், பரந்தன்.
எமது பாடசாலையில் 2013 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற ம.கௌசிகன் மற்றும் சு.சதுர்சிகா இருவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



ம.கௌசிகன்
157 புள்ளிகள்



சு.சதுர்சிகா
153 புள்ளிகள்
அத்துடன் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற
செ.கிருபாலினி - 148 ஜெ.கம்ஷா - 148 ஜெ.கிருஜா - 139
பு.பௌசிகா - 132 உ.விதுஷா - 124 வி.ஜென்சன் - 109
ஈ.புவித்திரா - 100 இ.டிலக்ஷா - 106
இவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
மேலும் இவர்களுக்குக் கற்பித்த ஆசிரியை செல்வி க.கிருபாலினி அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
பாடசாலைச் சமூகம், கிளி/மயில்வாகனபுரம் அ.த.க.பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஸ் தரிப்பிடம் இல்லை இன்னலுறும் பயணிகள்

முல்லைத்தீவு, ஒக்.23

மாங்குளம் சந்தியில் பஸ் தரிப்பிடம் அமைக்கப்படாததால் முல்லைத்தீவு நோக்கிச் செல்லும் பயணிகள் பெரும் இன்னல்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

ஏ-9 பிரதான வீதியிலிருந்து முல்லைத்தீவு நோக்கிச் செல்லும் பிரயாணிகள் பஸ் தரிப்பிடம் இல்லாததால் மழையிலும், வெயிலிலும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

மேலும் அடிக்கடி பஸ் சேவை இல்லாததால் தாம் நீண்ட நேரமாகக் காத்திருக்க வேண்டியுள்ளதாகவும் பயணிகள் தெரிவிக்கின்றனர். இங்கு நிழல்தரும் மரங்கள் கூட இல்லாததால் வெயில் காலத்தில் சற்றுத் தூரத்தில் அமைந்துள்ள கடைகளை நாட வேண்டியுள்ளதாகவும் இதனால் பஸ்ஸைத் தவறவிடும் சந்தர்ப்பமும் உண்டு எனவும், இவர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் புளியங்குளம் ஊடாகப் பயணிப்பதால் கால விரயமும் அதிக பணச் செலவும் ஏற்படுவதாகவும் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது மழைகாலம் ஆரம்பித்து விட்டதால் தமது நிலை மோசமாக மாறியுள்ளதாகவும், எனவே மேற்படி இடத்தில் பஸ் தரிப்பிடம் ஒன்றை அமைத்துத் தமது இன்னல்களைப் போக்குமாறும் முல்லைத்தீவு பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-500)

# காணி ஆவணங்கள் கிடைக்கவில்லை சிக்கலில் வீட்டுத்திட்டப் பணிகள்

### ஓமந்தையில் கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத நிலை



நெளுக்குளம், ஒக்.23

வவுனியா ஓமந்தை வேப்பங்குளத்தில் அமைந்துள்ள வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்குரிய காணி ஆவணங்கள் இதுவரை வழங்கப்படவில்லையெனத் தெரிய வருகின்றது.

வவுனியாவில் அமைக்கப்பட்டு வரும் வீட்டுத் திட்டங்கள் தொடர்பாக வவுனியா மாவட்ட வீடமைப்பு அதிகார சபை அலுவலகத்தின் முகாமையாளரான திருமதி வி.எம்.குரூஸ்ஸி இது குறித்து தெரிவித்ததாவது-

வவுனியாவில் வீட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் ஏற்படுகின்றது. அரசின் ஒத்துழைப்பு எமக்குப் போதியளவு கிடைக்குமாயின் இதனைத் தவிர்த்துக்கொள்ள முடியும்.

வவுனியாவில் 2011 ஆம் ஆண்டு ஓமந்தை வேப்பங்குளத்திலும், சிங்களப் பகுதியான நிகரம பகுதியிலும் வீட்டுத்திட்டங்களை அமைப்பதற்கான வேலைகளை ஆரம்பித்தோம். அரசினால் வீடுகளை அமைப்பதற்கான 145 மில்லியன் ரூபா கடன் தொகையாக ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் ஓமந்தையில் அரச ஊழியர்கள் 200 பேருக்கும் நிகரம பகுதியில் இதே போன்று 90 பேருக்கும் இந்த நிதியைப் பகிர்ந்தளிப்பதற்குத் திட்டமிட்டோம். இதில் ஓமந்தையில் வீடுகளை அமைப்பதற்கு முன் வந்த 199 பேருக்கு தலா 5 லட்சம் ரூபா கடன் தொகையை கட்டம் கட்டமாக வழங்கினோம். இதைப் போன்று நிகரம வீட்டுத்திட்ட பயனாளிகள் 76 பேருக்குத் தலா 5 லட்சம் ரூபாவை வழங்க முன் வந்தோம். மேலும் பலருக்கு கடன் வழங்கவும் தீர்மானித்துள்ளோம். போதிய நிதி கிடைக்கப்பெறுமாயின் அதனை வழங்குவதற்கு நாம் தயாராகவுள்ளோம்.

அத்துடன் 'கெயார்' நிறுவனத்தின் உதவியுடன் ஓமந்தை வீட்டுத்திட்டத்துக்கு 2.6 கிலோ மீற்றர் நீளமான வீதியையும் நிகரம வீட்டுத் திட்டத்துக்கு 2 கிலோமீற்றர் நீளமான வீதியையும் நாம் புனரமைத்துள்ளோம். இந்தப் பகுதிகளில் வீதிகளை முழுமையாக அமைப்பதற்கு அரசின் உதவி மேலும் தேவைப்படுகின்றது. வீதிகள் சீராக இல்லாததால் மழை காலத்தில் பயனாளிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஓமந்தை வீட்டுத் திட்டத்துக்கான மின்சார வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன. ஆனால் நிகரம பகுதிக்கு மின்சாரம் இதுவரை கிடைக்கவில்லை. இதேவேளை ஓமந்தை வீட்டுத்திட்டக் காணிகள் இதுவரை வனவிலங்கு திணைக்களத்தால் விடுக்கப்படாத நிலையே காணப்படுகின்றது.

வனவிலங்கு அதிகாரசபையின் அனுமதி கிடைக்கும் பட்சத்திலேயே வீடுகள் அமைந்துள்ள காணிகளுக்குரிய ஆவணங்களை வழங்க முடியும். இப்படியான பல்வேறு சிக்கல்கள் 2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத்திட்டத்தில் உள்ளன என்றார்.

இது தொடர்பாக வவுனியா பிரதேச செயலருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது: ஓமந்தை வீட்டுத் திட்டத்துக்கென ஒதுக்கப்பட்ட காணிகள் வனவிலங்குத் திணைக் களத்துக்கென முன்னர் ஒதுக்கப்பட்டவையாகும்.

இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வனவிலங்குத் திணைக்களத்தினர் காணியை விடுவிக்கும் பட்சத்தில் வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கு அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட காணிகளுக்கான உறுதிகளை வழங்க முடியும் என்று தெரிவித்தார். (க-402)

## வறிய மாணவருக்கு பண உதவி

முல்லைத்தீவு, ஒக்.23

பல்கலைக்கழகம் சென்ற வறிய மாணவர்கள் 11 பேருக்குகற்சிலைமடு கிராம அபிவிருத்திச் சங்கத்தால் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் ஒரு லட்சத்து பத்தாயிரம் ரூபா உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கற்சிலைமடு கிராம அபிவிருத்திச் சங்கத்தினரே இந்த உதவிகளை வழங்கியுள்ளனர்.

இது ஒரு முன் மாதிரியான செயற்பாடு எனவும் வறிய நிலை மாணவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும் எனவும் பெற்றோர்கள் தெரிவித்தனர். இந்தச் சங்கத்தால் இதற்கு முன்னரும் பல்கலைக்கழகம் சென்ற மாணவர்களுக்கு பண உதவிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-500)



மன்னாரில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற சமுர்த்தி முகாமையாளர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான வங்கிக் கணக்குத் தொடர்பான பயிற்சி நெறிச் செயலமர்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினர். (க-12)

## உள்ளூராட்சி வாரத்தில் மன்னாரில் நடமாடும் சேவை

மன்னார், ஒக்.23

உள்ளூராட்சி வார நிகழ்வுகளையொட்டி மன்னார் நகர சபையினால் நடமாடும் சேவையொன்று நடத்தப்பட்டுள்ளது.

இந்த நடமாடும் சேவை நேற்று முன்தினம் திங்கட்கிழமை மன்னார் மூர் வீதி கிராமத்தில் இடம்பெற்றது. ஏற்கனவே மன்னார் நகர சபையின் வருமான அதிகரிப்பு மற்றும் அதன் சிறப்பான துரித சேவை என்பவற்றைக் கருத் தில் கொண்டு ஆசிய மன்றத்தினால் சபையின் வருமானப் பகுதி கணினி மயப்படுத்தப்பட்டிருந்தது. அதற்கு மைய துரித சேவையை மக்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரு நிகழ்வாகவும் இது அமைந்தது.

மன்னார் நகர சபையின் செயலாளர் எல்.றெணால்ட் பிறிற்றோயின் திட்டமிடல் மற்றும் வழிகாட்டலின் கீழ் சபை உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் இந்த நடமாடும் சேவை நடைபெற்றது.

குறித்த நிகழ்வின் ஆரம்ப வைபவத்துக்கு மன்னார் நகர சபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம், மன்னார் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம்.ஏ.ஜே.துரம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெற்ற நடமாடும் சேவையில் குறித்த பகுதியைச் சேர்ந்த வரியிறுப்பாளர்களுக்கு சோலை வரி, துவிச்சக்கர வண்டி உரிமம், வியாபார உரிமம், பொது முறைப்பாடுகள் மற்றும் நிலுவை அறவீடுகள் தொடர்பான சேவைகள் வழங்கப்பட்டன.

இதில் சுமார் 150 பொதுமக்கள் வரை கலந்துகொண்டு பயனடைந்தனர். மேலும் நிலுவைத் தொகையான 47 ஆயிரத்து 560 ரூபாவும் அறவீடு செய் யப்பட்டது. உள்ளூராட்சி வார நிகழ்வுகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை தேசிய ரீதியில் கொண்டாடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-12)

## சுற்றுலாப் பயணிகளின் வருகை பெரும் வீழ்ச்சி

### பிரபாகரனின் இல்லம் தகர்க்கப்பட்டதே காரணம்

முல்லைத்தீவு, ஒக்.23

புதுக்குடியிருப்பில் அமைந்திருந்த விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் இல்லம் தகர்க்கப்பட்டதால் இங்கு வரும் தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகளின் வருகையில் வீழ்ச்சியேற்பட்டுள்ளது.


இந்த இல்லம் தகர்க்கப்படுவதற்கு முன்னர் தினமும் ஏராளமான வாகனங்களில் இங்கு தென்னிலங்கையைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் வருகை தருவது வழக்கமாக இருந்தது. இவர்கள் பிரபாகரன் தங்கியிருந்த இல்லத்தைக் காண்பதில் அதிக ஆர்வம் காட்டி வந்தனர். மேலும் இவர்கள் சில நாள்கள் இங்கு தங்கியிருந்து வேறு இடங்களைப் பார்வையிடுவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

அத்துடன் இங்கு கிடைக்கும் பழவகைகள் , பனாட்டு, ஒடியல் மற்றும் பனைசார் உற்பத்திப் பொருள்களையும் பெருமளவில் கொள்வனவு செய்து தம்முடன் எடுத்துச் சென்றனர். இதனால் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு நல்ல வருவாய் கிடைத்தது.

ஆனால் பிரபாகரனின் இல்லம் தகர்க்கப்பட்டதன் பின்னர் தென்னிலங்கையிலிருந்து இங்கு வருகை தருபவர்களின் தொகையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. மிகவும் குறைந்த அளவினரே வந்து செல்வதைக் காண முடிகின்றது.

இதனால் உள்ளூர் உற்பத்தியாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். (க-500)

## கேடு விளைவிக்கும் வகையில் சூடுவெந்தானில் உடைந்த பாலம்



நெடுங்கேணி, ஒக்.23

நெடுங்கேணி சூடுவெந்தான் கிராமத்துக்கான பிரதான வீதியில் அமைந்துள்ள பாலம் கடந்த ஐந்து மாதங்களாக உடைந்த நிலையில் ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் காணப்படுகின்றது.

நெடுங்கேணிப் பிரதான வீதியின் புனரமைப்புக்கென டிப்பர் வாகனமொன்றில் மண் ஏற்றிக்கொண்டு வந்தபோது இந்தப் பாலம் உடைந்தது. ஆனால் இது தொடர்பாக எவரும் கவனம் செலுத்தாததால் இதனூடாகப் பயணிக்கும் பொதுமக்கள் ஆபத்தை எதிர்கொண்டு வருகின்றனர். தற்போது பெய்துவரும் மழை காரணமாக உயிராபத்தை ஏற்படுத்தும் நிலைக்கு இந்தப் பாலம் மாறியுள்ளதைக் காண முடிகின்றது. மேலும் கடும் மழை பெய்யுமானால் நிலைமை மோசமாக மாறிவிடுமென மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் இனியும் தாமதிக்காது உடனடியாக இந்தப் பாலத்தைப் புனரமைக்குமாறு பலரும் வேண்டுகோள் விடுத்துள் ளனர். (க-435)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை வளாகத்தை இணைக்க வேண்டாம்

## கிழக்கு மாகாண சபை வேண்டுகோள்



திருகோணமலை, ஒக்.23
கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயற்படும் திருகோணமலை வளாகத்தை வேறு பல்கலைக்கழகத்துடன் இணைக்க வேண்டாம் என்று கிழக்கு மாகாண சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்தக் கோரிக்கை உயர் கல்வி அமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆகியவற்றிடம் விடுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை வளாகம் 2001 ஆம் ஆண்டிலிருந்து கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயற்படுகின்றது.

திருகோணமலை வளாகம் தொடர்ந்து கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயற்பட வேண்டும் என்ற கோரிக்கை இறுதியாக இடம்பெற்ற மாகாண சபை அமர்வில் கிழக்கு மகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தண்டாயுதபாணியால் முன்வைக்கப்பட்டது.

திருகோணமலையில் அனைத்து உயர்கல்வித் துறைகளையும் கொண்ட பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டும் என்று 1950 ஆம் ஆண்டு கல்விமான்கள் வேண்டுகோள் முன்வைத்த போதிலும், இது வரை அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை என்று அவர் சுட்டிக்காட்டினார்.

திருகோணமலை வளாகத்தை அநுராதபுரத்திலுள்ள இராஜரட்டை பல்கலைக்கழகத்துடன் இணைப்பதென உயர் கல்வி அமைச்சு முதலில் தீர்மானித்திருந்தது. திருகோணமலையைச் சேர்ந்த பொது அமைப்புக்கள் அதனை எதிர்த்ததால் இந்த நடவடிக்கை கைவிடப்பட்டது என்று அவர் கூறினார்.

அதனையடுத்து திருகோணமலை வளாகத்தை புறக்கோட்டையில் உள்ள சிறிஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைப்பதென அரசு தீர்மானித்துள்ளது.

தற்போது கிழக்குப் பல்கலைக் கழகத்தின் கீழுள்ள திருகோணமலை வளாகத்தை இராஜரட்டை பல்கலைக்கழகத்துடன் அல்லது சிறிஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைப்பதானது நியாயமற்றது என்று அவர் தெரிவித்தார்.

இவ்வாறான தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதைக் கைவிடுமாறு கிழக்கு மாகாண சபை கோரிக்கை விடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். (ச)

# வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

## வழங்கினார் ஹிஸ்புல்லாஹ்



மட்டக்களப்பு, ஒக்.23
மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 10 பின்தங்கிய பாடசாலைகளுக்குச் சென்ற பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளார்.

மாணவர் ஒருவருக்கு தலா 250 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் கொண்ட பொதிகளை அவர் வழங்கியுள்ளார். கல்குடா, மட்டக்களப்பு மத்தி ஆகிய கல்வி வலயங்களிலுள்ள 10 தமிழ், முஸ்லிம் பாடசாலைகளுக்கு பிரதி அமைச்சர் பயணம் மேற்கொண்டார்.

பாடசாலைகளில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதுடன், வறிய மாணவர்களுக்கக் கை கொடுத்து உதவுவதே எனது பயணத்தின் நோக்கம் என்று பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் கூறினார்.

எதிர்காலத்தில் தமிழ்ப் பாடசாலை முஸ்லிம் பாடசாலை என்ற பாகுபாடின்றி அனைத்துப் பாடசாலைகளையும் ஒரே கண்ணோட்டத்தில் அணுகி அங்குள்ள குறைகள் நீக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## திருகோணமலை உள்ளூராட்சி வார பரிசளிப்பு

திருகோணமலை, ஒக்.23
திருகோணமலை நகராட்சி மன்ற உள்ளூராட்சி வார நிகழ்வின் பரிசளிப்பு விழா நகரசபை மண்டபத்தில் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நகர சபையின் தலைவர் க.செல்வராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண முதலமைச்சர் அப்துல் நஜீப் ஏ.மஜீத் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக கிழக்கு மாகாண பிரதம செயலர் சரத் அபய குணவர்த்தனவும், கௌரவ விருந்தினர்களாக கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மா.உதயகுமார் மற்றும் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ.நிசாம், கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் கு.குணநாதன், திருகோணமலை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.சுதாகரன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் திருகோணமலை ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் நடனமும், 'மரணத்தை வெல்வோம்' என்ற தலைப்பில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு நாடகமும் மேடையேற்றப்படவுள்ளன. (ச-40)

## சட்டவிரோதமாக மது விற்றவர் மாட்டினார்

மட்டக்களப்பு, ஒக்.23
அம்பாறை, தமண பிரதேசத்தில் சட்டவிரோதமாக மதுபான விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்த மதுபானப் போத்தல்களும் மீட்கப்பட்டுள்ளன என்று தமண பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து ஞாயிற்றுக்கிழமை மடவலந்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டார் என்று தமண



பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

# அதிகாரிகள் சிலருக்கு உடனடி இடமாற்றம்

அம்பாறை, ஒக்.23
தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அம்பாறை மாவட்ட அலுவலக அதிகாரிகள் சிலருக்கு உடனடி இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த உடனடி இடமாற்ற நடவடிக்கையின்கீழ் அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளராகக் கடமையாற்றிய அகில விஜய ராஜபக்ஷ மீரிகம இளைஞர் பயிற்சி நிலையத்துக்கும், அம்பாறை மாவட்ட இளைஞர் சேவை அதிகாரிகளான சாகரிகா தமயந்தி குருநாகல் மாவட்டத்துக்கும், ஏ.எச்.உமாலெப்பை மட்டக்களப்பு மாவட்டத்துக்கும், எஸ்.எம்.ஏ.லத்தீப் மொனராகலை மாவட்டத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்தில் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரியாகக் கடமையாற்றிய ஆலிதீன் ஹமீர் அம்பாறை மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் கடமையாற்றிய மேலும் மூன்று பிரதேச இளைஞர் சேவை அதிகாரிகள் கொழும்பு, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (ச)



கிழக்கு மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தால் நடத்தப்பட்ட நீர்ப்பாசன நிகழ்வு திங்கட்கிழமை மீனோடைக்கட்டில் நடைபெற்றது. இந்தநிகழ்வில் அமைச்சர் உதுமாலெப்பை, கிழக்கு மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் எஸ்.திலகராஜா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# வியாபாரப் போட்டி கத்திக்குத்தில் முடிந்தது

திருகோணமலை பஸ் நிலையத்துக்கு முன்பாக அமைந்துள்ள இரண்டு ஹோட்டல்களில் ஏற்பட்ட வியாபாரப் போட்டி கத்திக்குத்தில் முடிந்தது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் மற்றொருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது- கடந்த சில நாள்களாக திருகோணமலைக்கு அதிகமான உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். அதனால் வர்த்தக நிலையங்களில் வியாபாரமும் களைகட்டியுள்ளது.

அதனால் தமது ஹோட்டலுக்கு வாடிக்கையாளர்களை வரவேற்பதில் ஏற்பட்ட போட்டியால் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் இறுதியில் ஆளைக்கொல்லும் அளவுக்கு முற்றியுள்ளது. கடந்த ஞாயிறுக்கிழமை மாலை 7.15 மணிக்கு தமது ஹோட்டலுக்கு முன்பாக வந்து நின்ற வானில் வந்த வாடிக்கையாளர்களை அழைப்பதற்காக அந்த ஹோட்டலைச் சேர்ந்த ரஹீம் என்பவர் வான் நின்ற இடத்துக்கு அருகில் சென்றார். அப்போது அங்கு ஓட்டோவில் ஒளிந்து இருந்த இனம் தெரியாத இருவர் குறித்த நபரை கத்தியால் குத்தியுள்ளனர். இந்தச் சம்பவத்தை கவனித்த ஹோட்டல் ஊழியர்கள் சம்பந்தப்பட்ட ஓட்டோவை பொலிஸாரின் உதவியுடன் துரத்திப் பிடித்தனர். ஆயினும் சந்தேக நபர்கள் இருவரும் தலைமறைவாகியுள்ளனர். சாரதியை கைது செய்து விசாரணை நடத்திய போது அவர் தனக்கு எதுவும் தெரியாது, பக்கத்து ஹோட்டலில் உள்ளவர்களே இந்த ஏற்பாட்டை செய்தனர் என்று கூறினாரெனப் பொலிஸில் தெரிவித்தனர். (ச-291)

# வடிகால்களுக்குள் கழிவுகள்; தொற்றுநோய் பரவ வாய்ப்பு

அம்பாறை, ஒக்.23
அம்பாறை,மாளிகைக்காடு கிராமத்திலுள்ள வடிகால்களுக்குள் வீட்டுக்கழிவுநீர், மலசலகூட கழிவுநீர் என்பன சேர்வதால் துர்நாற்றம் வீசுவதுடன், தொற்று நோய்கள் பரவும் அபாயமும் ஏற்பட்டு வருகிறது என்று பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நிற்காத வகையில் வீதியோரங்களில் அமைக்கப்பட்டுள்ள வடிகால்களுக்குள் அண்மையிலுள்ள குடியிருப்பாளர்கள் தமது வீடுகளிலிருந்து அகற்றப்படும் பலதரப்பட்ட கழிவு நீரை வெளியேற்றுகின்றனர்.



அதனால் வடிகால்களில் நீரோட்டம் தடைப்படுவதுடன், அசுத்தமான நீர் தேங்கி நின்று துர்நாற்றமும் வீசுகின்றது.

வீட்டுக் கழிவு நீரால் அசுத்தமடைந்துள்ள வடிகால்களிலிருந்து நுளம்புகள் உற்பத்தியாகிப் பெருகுவதுடன், அருகிலுள்ள குடியிருப்புக்கள், வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள் ஆகிய வற்றுக்கும் பரவுகின்றன. அதனால் தொற்று நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரடி பரிசோதனைகளை மேற்கொண்டு வடிகால்களை சுத்தமாக பராமரிக்கும் வகையில் வீட்டு கழிவு நீரை வடிகால்களுக்குள் செலுத்துவோருக்கு உரிய அறிவுரைகளை வழங்க வேண்டும். அதற்கு மாறாக இவ்வாறான நடவடிக்கைகளை புரிபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வோருக்கு பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டு மக்களின் கலாசாரத்தை அழிக்க ஆரம்பித்துள்ளது அரசு!

## பௌத்தர் என்று சொல்லும் தகுதி மஹிந்தவுக்கு இல்லை என்கிறது ஐ.தே.க.

"ராஜபக்ஷ அரசு தவறான அரசியல் பாதையைத் தெரிவு செய்துள்ளது. பௌத்தர் என்று சொல்லிக்கொள்ளும் தகுதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இல்லை" என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பி.எம். சுவாமிநாதன் தெரிவித்தார்.

பண ஆசையில் நாட்டையும் அப்பாவி மக்களையும் விற்று நாட்டின் கலாசாரப் பண்பாடுகளையும் அழிக்கும் செயற்பாட்டை அரசு ஆரம்பித்துள்ளது என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பானங்களையும் போதைப் பொருள்களையும் எதிர்க்கும் பௌத்த அரசியல்வாதிகள் கசினோ சூதாட்டத்தை மட்டும் ஆதரிப்பதற்கான காரணம் என்ன?

இலங்கை பௌத்த நாடாயின் இலங்கையின் இவ்வாறான சூதாட்டங்களையும் நாட்டை அழிக்கும் செயற்பாடுகளையும் ஆதரிக்கவே கூடாது.

பண ஆசையில் நாட்டையும் அப்பாவி மக்களையும் விற்று நாட்டின் கலாசாரப் பண்பாடுகளையும் அழிக்கும் செயற்பாட்டை அரசு ஆரம்பித் துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பௌத்த மதகுருமாரிடமும் சிங்கள, பௌத்த மக்களிடமும் அளித்த வாக்குறுதி இன்று பொய்யாகிவிட்டது.

கசினோவை ஆதரிக்காது நடிக்கும் ஜனாதிபதி மறுபுறம் அரசில் இருக்கும் சூதாட்டக்காரர்களை ஏவிவிட்டு கசினோ சட்ட மூலத்தை நிறைவேற்ற நினைக்கின்றார்.

இலங்கையில் எத்தனை கசினோ நிலையங்களை கொண்டு வந்தாலும் சிங்கப்பூர், அவுஸ்திரேலியாவைப்போன்று எமது நாட்டை மாற்ற முடியாது. அந்த நாடுகளில் சட்டமும் நீதியும் சரியாகப் பிரயோகிக்கப்படுகின்றன. அதேபோல், அவர்களின் வாழ்க்கை முறை வித்தியாசமானது. கலாசார முறைமைகளும் வேறுபட்டன.

அவர்களுடன் எமது மக்களை ஒப்பிட்டு செயற்பட முடியாது.

இதைக்கூட புரிந்துகொள்ள முடியாத அரசே இலங்கையில் ஆட்சி நடத்துகின்றது. அதே போல், இந்தக் கசினோ சூதாட்டத்தை இலங்கையில் நடைமுறைப் படுத்திய சில காலத்திலேயே மக்களின் எதிர்ப்பு தெரியவரும் - என்றார்.

## 5 இலட்சம் ரூபா கொள்ளை: நால்வர் வசமாக மாட்டினர்

பலாங்கொடை, ராஸ்ஸகல, மெத்தகந்த தேயிலைத் தோட்டத்தில் தேயிலைக் கொழுந்து வியாபாரி யொருவரிடமிருந்து ஐந்து இலட்சம் ரூபா பணத்தைக் கொள்ளையிட்ட சம்பவத்தில் நான்கு சந்தேக நபர்கள் கைதுசெய்யப் பட்டுள்ளனரென பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (20 ஆம் திகதி) கைதுசெய்யப் பட்ட நால்வரில் இருவர் சகோதரர்கள் எனவும் மற்று மிருவர் அவர்களது உறவினர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

இந்தக் கொள்ளைக்காக அவர்கள் விளையாட்டுத் துப்பாக்கியொன்றையும் உள்நாட்டுத் தயாரிப்பான 'ரம்போ' கத்தியையும் பாவித்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொள்ளையிடப்பட்ட ஐந்து இலட் சம் ரூபாவில் இரண்டு இலட்சத்து 38 ஆயிரத்து 650 ரூபா, விளையாட்டு பிஸ்டல், கத்தி, கொள்ளைக்குப் பயன்படுத்தப்பட்ட கார், மோட்டார் சைக்கிள் ஆகியவையும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்களை பலாங்கொடை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் தொடர்வதாகவும் பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

## கடும் எதிர்ப்புகளையடுத்து கசினோ சட்டமூலத்தை மீளப்பெற்றது அரசு

கசினோ சூதாட்ட சட்ட மூலத்தை திரும்பப்பெற அரசு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை மீளப் பெறுவதாக அரசு அறிவித்துள்ளது.

கொழும்பில் கசினோ சூதாட்ட மையங்களை அமைப்பது குறித்து அரசு நாடாளுமன்றில் சட்டமூலமொன்றை முன்வைக்க தீர்மானித்திருந்தது.

உபாயமார்க்க அபிவிருத்தி சட்ட மூலத்தில் திருத்தம் என்ற பெயரில் கசினோ உள்ளிட்ட இரு சட்ட மூலங்களை கொண்டு வர அரசு தீர்மானித்திருந்தது. எனினும், அதற்கு தெரிவிக்கப்பட்ட எதிர்ப்புக்கள் காரணமாக அவற்றை மீளப் பெற்றுக் கொள்ள அரசு தீர்மானித்துள்ளது.

1988 இலக்கம் 40 என்ற பந்தைய மற்றும் வரிச்சட்ட மூலத்தில் கசினோ திட்டத்திற்கு வரி நிவாரணம் வழங்கவென முன்வைக்கப்பட்ட இரு சட்ட மூலங்கள் இவ்வாறு மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

நாளையும், நாளைமறுதினமும் கசினோ சட்டமூலம் நாடாளுமன்றில் வாக்கெடுப்புக்கு விடப்பட விருந்தமை குறிப்பிடத்தக்கது.



ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற செயற்குழு கூட்டத்தில் கட்சியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் உரையாற்றுவதையும் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி சுரேஷ் கங்காதரன் உட்பட கலந்து கொண்ட செயற்குழு உறுப்பினர்களையும் படங்களில் காணலாம்.

## இலங்கைக்கு இந்தியப் போர்க்கப்பலா? நீதிமன்றத்தில் தமிழக அரசு எதிர்ப்பு

### 29ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைப்பு

இலங்கைக்கு இந்தியா போர்க்கப்பல்களை விற்பனை செய்ய தமிழ்நாடு அரசு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் தமிழக அரசின் தரப்பு சட்டவாளர் நேற்றுமுன்தினம் இந்த எதிர்ப்பை வெளியிட்டார்.

மதுரையைச் சேர்ந்த சட்டவாளர், பி.ஸ்டாலின், இந்திய அரசு இலங்கைக்குப் போர்க் கப்பல் விற்பதைத் தடைசெய்யக் கோரி சமர்ப்பித்திருந்த பொது நல மனுமீதான விசாரணையின்போதே, தமிழ்நாடு அரசின் இந்த நிலைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, இந்திய மத்திய அரசின் நிலைப்பாட்டை அறிவிக்குமாறு நீதிபதிகள் உத்தரவிட்டிருந்தனர். இந்த நிலையில், நேற்றுமுன்தினம் நீதிபதிகள் ஜெய்சந்திரன், வேணுகோபால் ஆகியோர் முன்பாக, மீண்டும் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது.

அப்போது, தமிழக அரசு சார்பில் மேலதிக தலைமை சட்டவாளர் செல்லப் பாண்டியன் முன்னிலையாகி, இலங்கைக்கு இந்திய அரசு போர்க் கப்பல்களை விற்பனை செய்வதில் தமிழ்நாடு அரசுக்கு உடன்பாடு இல்லை என்று தெரிவித்தார்.

இதுதொடர்பாக இந்தியப் பிரதமருக்கு தமிழ்நாடு முதல்வர் ஜெய லலிதா கடிதம் அனுப்பியுள்ள போதிலும் அதற்கு பிரதமர் மன்மோகன்சிங் பதில் அளிக்கவில்லை என்றும் அவர் கூறினார். இதையடுத்து, இலங்கைக்கு போர்க்கப்பல் விற்கும் விவகாரத்தில், தமிழ்நாடு முதல்வர் அனுப்பிய கடிதத்தின் மீதான இந்திய மத்திய அரசின் நிலைப்பாடு என்ன என்பதை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு, மத்திய அரசுத் தரப்பு சட்டவாளருக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர். இந்த மனு மீதான அடுத்த விசாரணையை வரும் 29 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

## அடுத்த நாடாளுமன்ற, ஜனாதிபதி தேர்தல்களில் போட்டியிட பொன்சேகாவுக்குத் தடை

### மனித உரிமைகள் குழு கடும் விசனம்

ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மறியல் தண்டனை அனுபவித்தார் என்ற காரணத்தால் அடுத்த நாடாளுமன்ற, ஜனாதிபதி தேர்தல்களில் பங்கேற்க முடியாமல் தடுக்கப்பட்டிருப்பதையிட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களின் மனித உரிமைகள் குழு எனும் அமைப்பு விசனம் தெரிவித்துள்ளது.

அரசமைப்பின் 89(டி), 91 உறுப்புரைகளுக்கு அமைய சரத் பொன்சேகாவினால் இந்தத் தேர்தல்களில் 7 வருடங்களுக்கு பங்கேற்க முடியாதென இந்தக் குழு கூறியுள்ளது.

2010 இல் ஜனநாயக தேசிய முன்னணியின் அன்னம் சின்னத்தில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினரான பொன்சேகா ஹைகோப் வழக்கில் இராணுவ நீதிமன்றினால் குற்றவாளியாக காணப்பட்டு மறியல் தண்டனை விதிக்கப்பட்டார்.

பொன்சேகாவின் விடயத்துக்கு அப்பால் இந்தக் குழுவானது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், என்.ரவிராஜ், ரி. மகேஸ்வரன் ஆகியோரின் கொலைகள் தொடர்பாகவும் ஆராய்ந்துள்ளது. பரராஜசிங்கம், ரவிராஜ் ஆகியோரின் கொலை தொடர்பில் போதிய முன்னேற்றமில்லை எனவும் இந்தக்குழு விசனம் தெரிவித்துள்ளது.

## ஐ.தே.க.குழு மோதல்: நேற்றும் ஒருவர் சரண்

மாத்தறை நகரில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி குழு மோதல் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் ஒரு சந்தேகநபர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுசந்த ரோஹன எனப்படும் குறித்த நபர் நேற்றுக் காலை சட்டத்தரணி ஊடாக மாத்தறை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் மாத்தறை நீதவான் நீதிமன்றில் முன்னிலை செய்யப்படவுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மாத்தறை மோதல் தொடர்பில் 48 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட பின்னர் நேற்றுமுன்தினம் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கொடுப்பனவுகள் முழுமையாக வழங்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து

## பணிப்புறக்கணிப்பில் குதிக்கின்றது வைத்திய தொழிற்சேவையாளர் சபை

தாதியர், துணை, இரண்டாம் நிலை வைத்திய தொழிற் சேவையாளர்களின் ஒன்றிணைந்த சபை பணிப் புறக் கணிப்பில் ஈடுபட்டுள்ளது.

கொடுப்பனவுகள், சம்பளம் மற்றும் தமக்குள்ள வரப்பிரசாதங்களை முழுமையாக வழங்காமைக்கு எதிராக இந்த பணிப் புறக்கணிப்பு மேற்கொள்ளப்படுகின்றது என்று அந்த சபை தெரிவித்துள்ளது.

இந்தப் பிரச்சினைகள் [illegible] பல சுற்றுக்களில் பேச்சு நடத்தப்பட்டது எனவும், இதுவரையில் தமக்கான தீர்வு முன்வைக்கப்படவில்லை எனவும் அச்சபை சுட்டிக் காட்டியுள்ளது.

அதன்படி நவம்பர் மாதம் முதலாம் திகதி நாடு தழுவிய ரீதியில் பணிப் புறக்கணிப்பை விரிவாக்கப்படவுள்ளதாகவும் அதற்கு முன்னர் பொறுப்பதிகாரிகள் தமக்கான தீர்வை முன்வைக்க வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அரச தாதியர் சங்கம், துணை வைத்திய சேவையாளர்கள் சங்கம் உள்ளிட்ட 16 சங்கங்கள் இந்த பணிப் புறக் கணிப்பை மேற்கொள்வதற்கு தீர்மானித்துள்ளன.

## பிரிட்டன் பொதுத்தேர்தலில் இலங்கைத் தமிழ்ப் பெண்

பிரிட்டனில் நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் தொழிற்கட்சியின் சார்பில் உமாகுமரன் என்ற இலங்கைத் தமிழ்ப் பெண் போட்டியிடவுள்ளார்.

உமாகுமரனின் பெற்றோர் இலங்கையில் நிகழ்ந்த உள்நாட்டுப் போரினால் இலண்டனுக்கு குடிபெயர்ந்தனர். இலண்டனில் பிறந்த உமா குமரன், ஹரோ தொகுதியில் பிரதான எதிர்க்கட்சியான தொழிற்கட்சி சார்பில் போட்டியிடவுள்ளார் என அறிவித்துள்ளார்.



இலண்டன் குயீன்ஸ் மேரி பல் கலைக்கழகத்தில், அரசியலில் பட்டம் பெற்ற உமா குமரன், பொதுக் கொள்கையில், முதுமாணிப் பட்டம் பெற்றுள்ளார். இவர் தமிழ், சிங்களம், ஆங்கிலம், பிரெஞ்ச், ஜேர்மன் ஆகிய ஐந்து மொழி களைப் பேசும் திறன் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பதின்மூன்றாவதை முடக்கும் நோக்கும் போக்கும் நீண்டு செல்லும்.......

திருகோணமலை மாவட்டம் சம்பூர் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியேற்றுவதற்கு, துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று உயர்நீதிமன்றம் அரசாங்கத்துக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது. ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் இடம் பெயர்ந்த மக்கள் மேற்கொண்ட முயற்சிக்குப் பலன் கிடைத்துள்ளது. ஆயினும் நீதிமன்றத் தீர்ப்பு நடைமுறையாகி சம்பந்தப்பட்ட மக்கள் தமது சொந்த மண்ணுக்கு - முன்னரே குடியிருந்த பிரதேசத்துக்குத் - திரும்புவதற்கு இன்னும் எத்தனை ஆண்டுகளாகும் என்பது அரசுக்கே வெளிச்சம்.

இந்தியாவின் உதவியுடன் - அதன் வர்த்தக நோக்கம் சார்ந்த திட்டத்தில் ஒன்றான அனல் மின் நிலையம் இலங்கையில் - சம்பூரில் - நிறுவப்பட உள்ளது. சம்பூர்க் காணிகளை அரசாங்கம் சுவீகரிக்கக் கூடும் என்ற அச்சத்திலேயே நீதிமன்றத்தில் மக்கள் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பிரதேசங்களில் போர் முடிவுற்ற கையோடு பெரும்பான்மை இன மக்களைக் குடியேற்றும் சம்பவங்கள் முடுக்கி விடப்பட்டிருந்தன. (அது குறித்து இப்பத்தியில் ஏற்கெனவே சுட்டிக்காட்டி இருந்தோம்). அதேபோன்று சம்பூர்ப் பிரதேசத்திலும் நடைபெறும் என்ற அச்சத்திலேயே சம்பூர் மக்கள் நீதிமன்றின் உதவியை நாடினர்.

போருக்கு முன்னரான காலத்தில், சம்பூர்ப் பகுதி செழிப்படைந்த பிரதேசமாக மிளிர்ந்தது. அக் காலத்தில் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த (தமிழ்) மக்கள் எவரிடமும் கையேந்தி வாழ்ந்ததில்லை. ஆனால் இப்போது அகதிகளாக்கப்பட்டு, அரசிடம் பல ஆண்டுகளாக கையேந்தி மனித மாந்தைகளாக மாற்றப்பட்டுள்ளனர் என்று திருகோணமலை நகரசபை உறுப்பினர் சி.நந்தகுமார் தெரிவித்திருந்தார்.

தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை, அபிவிருத்தி என்ற முத்திரையுடன்-லேபலுடன்-கபளீகரம் செய்யும் அநியாயம் நடைபெறுகிறது என்றும்-

ஆனால் மின் நிலையம் அமைக்கும் அபிவிருத்திப் பணி என்ற பாங்கில் காணிகள் பறிக்கப்படுவதை நிறுத்தி, அவர்கள் தமது சொந்த இடங்களில் குடியமர உதவுவதற்கு இந்தியா உதவ வேண்டும் என்றும் நகரசபை உறுப்பினர் வலியுறுத்தி இருந்தார். நீதிமன்றத் தீர்ப்பு சம்பூர் மக்களுக்கு நீதி, நியாயம் கிடைக்க வகை செய்துள்ளதால் அந்தத் தேவை இப்போது இல்லை என்றாகிவிட்டது.

திருகோணமலையில் மட்டுமன்றி கிழக்கின் ஏனைய மாவட்டங்களான மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலும் போரினால் இடம்பெயர்ந்த மக்கள் இன்னமும் முழு அளவில் மீளக் குடியமர்த்தப்படவில்லை.

போர் முடிவுற்று நான்கு ஆண்டுகள் கடந்த நிலையிலும், அம்பாறையில் பல கிராமங்களில் இன்னும் மக்கள் மீளக் குடியமர்த்தப்படவில்லை என்பது பதிவு செய்யப்பட வேண்டியதாகும்.

கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர் த.கலையரசன், நாவிதன்வெளிப் பிரதேச சபை நிகழ்வில் இதனை அண்மையில் விலாவாரியாக வெளிப்படுத்தி இருந்தார்.

அதேவேளை-

சம்பூர் மக்கள் கடந்த ஏழு வருடங்களாக அகதி முகாம்களில் பல வகைகளிலும் அல்லற்பட்டு வாழ்ந்து வருகின்றனர். ஆனால், சம்பூர் மக்களில் பலர் மீள்குடியேற்றப்பட்டு விட்டனர் என்றும் இன்னும் சிலரே குடியேற்றப்படவுள்ளனர் என்றும் அரச தரப்பில் தெரிவிக்கப்படுவது தவறென்றும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கு.நாகேஸ்வரன் ஆணித்தரமாகத் தெரிவித்தமையும் ஊன்றிக் கருத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

இந்த வகையில், தமிழ் மக்களின் பூர்வீக வாழ்விடங்களை அபகரித்து, தமிழ்த் தேசியத்தை சிதறடித்து, தமிழர் கலாசாரத்தை இல்லாமற் செய்து எமது எதிர்கால சமூகத்தில் பல பின்னடைவுகளை உண்டாக்க பலர் திட்டம் தீட்டிச் செயற்படுவதாக மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் சுட்டிக்காட்டி உள்ளதும் இங்கே கவனத்தில் எடுக்கப்பட வேண்டியதாகும்.

தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பூமிகளாக விளங்கிய வடக்கு, கிழக்கு மாகாணங்களில், அபிவிருத்தி என்ற போர்வைக்குள் பெரும்பான்மை இனத்தவர்களை அரச அனுசரணையுடன் குடியேற்றும் திட்டம், இலங்கைக்கு பிரித்தானியரிடம் இருந்து சுதந்திரம் கிடைத்த ஒரு சில வருடங்களிலேயே, டி.எஸ்.சேனநாயக்கா காலத்தில் அதிவேக வேகமாக ஆரம்பிக்கப்பட்டது.

அந்த ஆரம்பப் புள்ளியைப் பூதாகாரமாகப் பெருப்பிக்கும் கைங்கரியம் காலத்துக்குக் காலம் உயர்ந்து செல்வதே இந்த நாட்டின் "ஜனநாயகம்?" என்றாகிவிட்டது.

அதனைத் தண்ணீர் ஊற்றி, நீண்டு, நெடிந்து ஓங்கி வளரச் செய்வதற்காகவே அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்கும் இலக்கு. பதின்மூன்றாவது திருத்தத்தை முடக்கிச் செத்தலாக்கும் நோக்கம் நிறைவுறும் வரை அரசின் இந்த நோக்கும் போக்கும் நீண்டு செல்லும் என்று எதிர்பார்க்கலாம்! ஐயோ, சிறுபான்மை இனங்களே! உங்களால் என்னதான் செய்ய இயலும்....!

# ஒன்றுபட்டுச் செயற்படுவதன் மூலம் தமிழர் மனங்களை வெல்லலாம்

தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒன்றுபட்டு நின்று வென்று காட்டிய போது, மிரண்டு போன சிங்கள பௌத்த பேரினவாதச் சக்திகள் அமைச்சுப் பதவிக்கான மோதல் தொடங்கியதும் ஆறுதல் அடைந்தன. ஏனென்றால், இவர்கள் தமக்குள் மோதிக் கொண்டே காலத்தைக் கடத்தப் போகிறார்கள், உருப்படியாக எதையும் செய்யப் போவதில்லை என்ற எண்ணம் அவர்கள் மத்தியில்உருவானது. ஆயினும் இந்தக் குழப்பங்கள் இப்பொழுது சற்றுச் சுமுகமான நிலைக்கு வந்துவிட்டதாகத் தெரிகின்றது.



தொல்காப்பியன்

வடக்கு மாகாணசபைத் தேர்தலில் பெற்ற பிரமாண்டமான வெற்றிக்குப் பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள், ஏற்பட்டுள்ள முரண்பாடுகள்தான் அண்மை நாள்களில் முக்கியமாகப் பேசப்படும் விவகாரமாக அமைந்திருந்தன. அதற்குக் காரணம், இந்த முரண்பாடுகள், தமிழ் மக்கள் மத்தியில், விசனத்தையும், கவலைகளையும் ஏற்படுத்தியதால்தான்.

மேலதிக ஆசனப் பகிர்வில் தொடங்கிய இந்த இழுபறி, அமைச்சர்கள் நியமனத்தின்போது, உச்சக்கட்டமாக வெடித்தது. இதன் காரணமாக, ஒருவருக்கு ஒருவர், குற்றம்சாட்டிக் கொண்டனர். அறிக்கைகளாலும், ஊடகங்களில் செய்திகளைக் கசிய விட்டும், மோதிக் கொண்டனர். இவற்றையெல்லாம் பார்த்த போது, வடக்கு மாகாணத்தில் உள்ள மக்களிடம் மட்டுமன்றி, உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் மத்தியிலும், ஒருவித தவிப்பு ஏற்பட்டதை உணர முடிந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது, இலங்கையில் தமிழர்களின் அரசியல் பயணத்தில் ஒரு தவிர்க்க முடியாத சக்தியாக மாறியுள்ள போதிலும், அதற்குள் முரண்பாடுகள் வெடிப்பதும், இயல்பானதாகி விட்டது. பெரும்பாலும் தேர்தலுக்கு முன்னரும் தேர்தலுக்குப் பின்னருமான காலகட்டங்களில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் கலகம் வெடிப்பது வழக்கமானதே. தேர்தலுக்கு முன்னர், போட்டியிடுவதற்கான வேட்பாளர் ஒதுக்கீட்டில், முரண்பாடுகள் நிலவும். அதுபோலவே, தேர்தலில் வெற்றி பெற்றதும், இத்தகைய நெருக்கடிகள் எழும்பும். வடக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னர், முதலமைச்சர் வேட்பாளர் விடயத்தில் தொடங்கிய சர்ச்சை, வேட்பாளர் ஒதுக்கீடுவரை தொடர்ந்தது. தேர்தல் முடிந்த பின்னர், போனஸ் ஆசனங்களைப் பகிர்ந்து கொள்வதில் தொடங்கிய முரண்பாடு, ஓரளவுக்கு இலகுவாகத் தீர்க்கப்பட்டாலும், அமைச்சர்கள் நியமனத்தில் ஏற்பட்ட சிக்கல், பெரிதாக வெடித்தது. நான்கு அமைச்சுப் பதவிகளை, ஐந்து கட்சிகளுக்கு இடையில் - ஐந்து மாவட்டங்களுக்கு இடையில் - விருப்பு வாக்குகள், கட்சிகளின் விருப்பத் தெரிவுகள், என்பவற்றுக்கு அப்பால் திறமைக்கு முன்னுரிமை கொடுத்து பகிர்வு செய்வது மிகவும் சிக்கலான [illegible] சூத்திர அமைப்பின் மூலம் ஒரு போதும், அனைத்துத் தரப்பினரையும் திருப்திப்படுத்த முடியாது. இந்த உண்மையை, சாதாரண மக்களாலேயே உணர முடிந்த போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள கட்சிகளும், அவற்றின் தலைவர்களும், புரிந்து கொள்ளத் தவறியமை ஆச்சரியமானதே. இந்தப் புரிதல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களுக்கு இருந்த போதிலும், அரசியல் நலன் சார்ந்து அவர்கள் காய்நகர்த்த முற்பட்டதால் தான், நகைப்புக்கிடமான பல நிகழ்வுகள் நடந்தேறின.

### முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பின் சின்னம்

இந்த முரண்பாடுகளின் உச்சமாக, ஐந்து கட்சிகளும் பொதுவேட்பாளராக நிறுத்திய, முதலமைச்சர் விக்னேஸ்வரனும், தேவையற்ற விமர்சனங்களைச் சந்திக்க வேண்டிய நிலைக்குள்ளானார். அத்தகைய விமர்சனங்கள், ஒரு இலட்சத்து 32 ஆயிரம் விருப்பு வாக்குகளின் மூலம், தமிழ் மக்களால் அங்கீகரிக்கப்பட்ட, மரபு சாராத ஓர் அரசியல் தலைவருக்கு எத்தகைய அழுத்தத்தைக் கொடுத்திருக்கும் என்று உணர்ந்து கொள்வது சிரமமானதல்ல.

பொதுவேட்பாளராக, நிற்கச் சம்மதித்த பின்னர், செவ்வி ஒன்றின் போது கருத்து வெளியிட்ட முதல்வர் விக்னேஸ்வரன், தனக்கு அரசியல் மூலம் நல்ல பெயர் கிடைக்காது என்றும், இருக்கின்ற பெயர் தான் கெட்டுப் போகும் என்றும் குறிப்பிட்டிருந்தார். அது உண்மை என்பதை அமைச்சர்கள் நியமனத்தை அடுத்து எழுந்த விமர்சனங்களின் மூலம் புரிந்து கொள்ள முடிந்தது. சொந்த அரசியல் நலன்களுக்கு அப்பால் வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகளை நகர்த்தியாக வேண்டும் என்ற தேவை இருந்த போதிலும், அதைப் பலரும் கருத்தில் எடுக்காதது நிச்சயம் கவலைக்குரிய விடயம். மாகாணசபையிடம் என்ன அதிகாரம் உள்ளது, என்று விமர்சித்தவர்களே, அமைச்சர் பதவிக்காக மோதிக் கொண்டது தான் ஆச்சரியம்.

அடுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் ஏற்பட்ட அதிகாரப் போட்டிக்காக, முள்ளிவாய்க்காலைப் பயன்படுத்திக் கொள்ள எடுக்கப்பட்ட முடிவு, ஒரு மோசமான முன்னுதாரணம். ஏனென்றால், முள்ளிவாய்க்கால் என்பது தமிழினத்தின் பேரவலத்தின் அடையாளம். அழிக்கப்பட்ட ஓர் இனத்தின் தேசிய சின்னம். குறுகிய அரசியல் நலனுக்காக, அதனைப் பயன்படுத்திக் கொள்ள எடுக்கப்பட்ட முயற்சியானது, முள்ளிவாய்க்காலில் சாவைத் தழுவிய ஆயிரக்கணக்கான மக்களை அவமதிக்கும் செயல். பதவிச் சண்டைக்காக, முள்ளிவாய்க்காலைப் பயன்படுத்திக் கொண்டமை தவறே.

மன்னார் ஆயரின் தலையீட்டினால், முள்ளிவாய்க்கால் இத்தகைய பெரும் அவப்பழியில் இருந்து தப்பியது, ஆனால் முழுமையாக அல்ல.

### சுமுகத்துக்குத் திரும்பியது நிலைமை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தேர்தலுக்குப் பிந்திய நிலைமைகளைக் கையாள்வதில், முடிவுகளை எடுப்பதில் மாற்று உபாயங்களைக் கடைப்பிடித்திருந்தால், இத்தகைய நெருக்கடிகளில் இருந்து - முழுமையாக இல்லாவிட்டாலும் ஓரளவுக்காவது தப்பியிருக்கலாம். குறிப்பாக, கட்சி ரீதியாக - மாவட்ட ரீதியாக அமைச்சர்களை நியமிப்பது குறித்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக, ஆராயாமல், பொருத்தமானவர்களை நியமிக்கும் பொறுப்பை, முதல்வரிடம் ஒப்படைத்திருந்தால், இந்தளவுக்கு கட்சி, பிரதேச ரீதியான விரிசல்கள் ஏற்பட்டிருக்காது. பொதுவேட்பாளராக அழைத்து வரப்பட்ட முதல்வரின் முடிவுகளை ஏற்கும் கடப்பாடு அத்தனை கட்சிகளுக்கும் உள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சிகள் இணைந்து அமைச்சர்களை முடிவு செய்ய முயன்றதால் - குழப்பங்கள் தான் மிஞ்சின.

> சொந்த அரசியல் நலன்களுக்கு அப்பால் வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகளை நகர்த்தியாக வேண்டும் என்ற தேவை இருந்த போதிலும், அதைப் பலரும் கருத்தில் எடுக்காதது நிச்சயம் கவலைக் குரிய விடயம். மாகாண சபையிடம் என்ன அதிகாரம் உள்ளது, என்று விமர்சித்தவர்களே, அமைச்சர் பதவிக்காக மோதிக் கொண்டது தான் ஆச்சரியம்.

எவ்வாறாயினும், தற்போது நிலைமைகள் ஓரளவுக்கு சுமுக நிலையை எட்டியுள்ளதாகத் தெரிகிறது.

ஆனால், இந்த சுமுகநிலை நிரந்தரமானதா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

இந்தளவுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்த மக்களுக்கு ஆறுதலளிக்கும் விடயம் என்ன வென்றால், கூட்டமைப்பின் சார்பில் தெரிவான எந்தவொரு உறுப்பினரும் தனித்து செயற்படப் போவதாக தீர்மானிக்கவோ, அறிவிக்கவோ இல்லை. கூட்டாகச் செயற்படுவோம், மாகாண நிர்வாகத்தை ஒன்றாக செயற்படுத்துவாம் என்றே, அனைவரும் கூறியுள்ளனர்.

இது ஒன்று தான், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலமும் பலவீனமும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள கட்சிகள் எல்லாவற்றுக்கும், அதற்கு வெளியே வந்து எதையும் சாதிக்க முடியாது என்பது நன்கு தெரியும். எனவே, எந்தக் கட்சியாலும் பிரிந்து போக முடியாது. இது கட்சிகள் அனைத்தினதும் பலவீனம். இந்தப் பலவீனம் இருப்பதால் தான், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் அரசியல் ரீதியாக பலமான நிலையில் இருக்க முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று போர்க்கொடி; இன்று பச்சைக் கொடி

# மஹிந்தவை தூக்கி வைக்க வருகிறார் கசினோ மன்னன் ஜேம்ஸ் பாக்கர்

மூலம்:மவ்பிம
தமிழில்-வீ.எஸ்.ரீ

"இது என்ன கேளிக்கை? கடந்த காலத்தில் கசினோ சூதாட்டம் ஒரு கேளிக்கையாக இருந்தது. கசினோ சூதாட்ட வர்த்தகர்களால் உயர்மட்ட அரசியல் வாதிகளுடன் புகைப்படம் எடுத்துக்கொள்ள முடிந்தது. ஜோசிம் என்ற அந்த கசினோ வர்த்தகருடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணிய அரசியல்வாதிகள் குறித்த விவரங்களை என்னால் வெளியிட முடியும். ஜோசிம் போன்ற சூதாட்ட வர்த்தகர்கள் இந்த நாட்டில் கசினோ சூதாட்டத்தை அறிமுகப்படுத்தி, தாய்லாந்திலிருந்து விலைமாதர்களை இங்கு கொண்டு வந்து விபசார விடுதிகளை நடத்தினார்கள். அவற்றின் மூலம் இந்த நாட்டு மக்களது பணத்தைக் கொள்ளையடித்து நாட்டைக் குட்டிச் சுவராக்கினார்கள். அரசியல்வாதிகளுடன் தொடர்பினைப் பேணி இவர்கள் இந்த நாட்டின் பிரஜா உரிமையைக் கூடப்பெற்றுக் கொள்ள முயன்றால் இந்த நாட்டுக்குப் பெரும் கேடு விளையும் என்பதை நினைவூட்ட வேண்டியுள்ளது. இத்தகைய நிலையில் எயிட்ஸ் போன்ற பயங்கர நோய்களைக்கூட இந்த நாட்டில் அவர்களால் பரப்ப இயலும்".

மேற்கண்டவாறு 1993 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம், 17 ஆம் திகதியன்று, அந்த வேளையில் எதிர்க்கட்சியாகச் செயற்பட்ட சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராகவிருந்த மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் உரையாற்றினார் என்று நாடாளுமன்ற நடவடிக்கைகள் குறித்த ஹன்சார்ட்டில் பதிவாகியுள்ளது.

அன்று அவ்விதம் கசினோ சூதாட்டத்தை ஐ.தே.கட்சி அரசு நாட்டில் அனுமதித்ததற்கு எதிராகக் குரல் எழுப்பிய சுதந்திரக்கட்சி அரசியல் வாதிகள் இன்று ஆஸ்திரேலியாவின் கசினோ சூதாட்ட மன்னன் ஜேம்ஸ் பாக்கரை இலங்கையில் கசினோ சூதாட்ட விடுதியை ஆரம்பிக்க அனுமதிக்க நிலபாவாடை விரிக்கிறார்களே என்று மனம் நொந்து கூறுகிறார் சுதந்திரக் கட்சியின் விசுவாசமான ஆதரவாளரொருவர்.

இந்த அரசு இன்னமும் கொஞ்சக் காலம் பதவியில் இருந்தால் என்றோ ஒருநாள், சுதந்திரக் கட்சி நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியாகச் செயற்பட நேரும் சமயத்தில் வாய்ப் பூட்டுப் போட்டுக் கொண்டுதான் இருக்க நேரிடும் என்று மனம் நொந்தார் சுதந்திரக் கட்சியின் அந்த விசுவாசி.

அவரது அந்தக் கருத்து முற்று முழுக்க உண்மையானதே.

**ஐ.தே.க. செய்த பாவத்தை இன்று வரை சுமக்க நேர்ந்துள்ளது**

1977 ஆம் ஆண்டு முதல் 1994 ஆம் ஆண்டுவரை ஐ.தே.கட்சி அரசு இந்த நாட்டுக்கு ஏற்படுத்திய நாசம் காரணமாகவே அது இன்று வரை ஆட்சி அதிகாரத்தைக் கைப் பற்ற இயலாது போயுள்ளது. ஆட்சி அதி காரத்தை இழந்து கடந்த 19 ஆண்டுகளாக எதிர்க்கட்சியாகவே இயங்க வேண்டிய நிலை ஐ.தே.கட்சிக்கு ஏற்பட்டுள்ளமைக்கான காரணம் இந்த நாட்டுக்கு ஏற்படுத்திய நாசத் தின் பாவத்தை ஐ.தே.கட்சியினால் கழுவிக் கொள்ள இயலாது போயுள்ளமையே ஆகும். அந்த வகையில் இன்றைய அரசு ஆட்சி அதிகாரத்தை இழக்க நேருமானால் நாற்பது ஆண்டுகள் கடந்தாலும் கூட சுதந்திரக் கட்சியால் நாட்டின் ஆட்சி அதிகாரத்தை மீண்டும் கைப்பற்ற இயலாது போய்விடும். ஏனெனில் இன்றைய அரசின் பாவத்துடன் ஐ.தே.கட்சி அரசின் பாவத்தை ஒப்பிட்டால் அது மலைக்கும் மடுவுக்குமுள்ள வேறுபாடு போன்றதாகும்.

ஐ.தே.கட்சி அரசின் ஆட்சிக் காலத்தில் இந்த நாட்டில் கசினோ சூதாட்டத்தை அறிமுகப்படுத்தியவர் ஜோசிம் என்பவரே. 1980 களில் வேறு துறை வர்த்தக நோக்கில் இலங்கையில் கால் பதித்த ஜோசிம், ஜனாதிபதி பிரேமதாசாவின் ஆட்சிக் காலத்திலேயே இந்த நாட்டில் கசினோ சூதாட்ட வர்த்தகத்தில் கால் பதித்தார்.

இந்த நாட்டில் ஜோசிம் போன்ற இயமன்களை வரவழைத்து இந்த நாட்டை ஒரு சூதுக்களியாட்ட பூமியாக ஆக்குகிறார்கள் என அன்றைய ஐ.தே.கட்சி அரசை அப்போதைய சுதந்திரக்கட்சி அரசியல்வாதிகள் விமர்சித்து வந்தனர்.

சுதந்திரக் கட்சி அரசியல்வாதிகள் அன்று கசினோ சூதாட்ட அபாயம் குறித்து நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தியதையடுத்து, அந்த வேளையில் ஜனாதிபதி பிரேமதாசவுடன் மிக நெருக்கமான உறவு பேணி வந்த பௌத்த மத பீடங்களின் தலைவர்களும், பௌத்த மத துறவிகளும் கசினோ அபாயம் குறித்து பிரேமதாசவுக்கு முறையிட்டனர்.

**சவாலைச் சாதுரியமாகச் சமாளித்த ஜனாதிபதி பிரேமதாச**

அது மட்டுமன்றி இந்தச் சூதாட்டக் கலாசாரத்தை நாட்டிலிருந்து அப்புறப்படுத்திவிடுமாறும் ஜனாதிபதி பிரேமதாசவுக்கு அந்தத் தரப்பினர்கள் அழுத்தம் கொடுக்க ஆரம்பித்தனர். அதேவேளை-பௌத்த மத பீடங்களின் தலைவர்களது அழுத்தத்துக்குச் சற்றும் குறையாத அளவுக்கு, வெள்ளை உடை உடுத்தி பக்திபூர்வமாக விகாரைக்கு புத்த பிரானை வணங்கச் செல்லும் வழக்கமுடைய பிரேமதாசவின் நற் பெயருக்கு களங்கம் கற்பிக்கும் வகையில், மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட சுதந்திரக்கட்சி அரசியல் தலைவர்கள் கசினோ சூதாட்ட மன்னன் ஜோசிமின் பெயரைப் பயன்படுத்தி பிரேமதாச மீது சேறு பூசத் தவறவில்லை.

நிலைமையின் தற்பாரியத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்ட ஜனாதிபதி பிரேமதாச உடனடியாக தனது அரசில் பாதுகாப்பு அமைச்சராகவிருந்த ரஞ்சன் விஜேரத்னாவை அழைத்து கசினோ சூதாட்ட மன்னன் ஜோசிமின் செயற்பாடுகள் குறித்த அறிக்கையொன்றைப் பெற்றுக் கொண்டதுடன், உடனடியாக ஜோசிமை இலங்கையிலிருந்து நாடு கடத்துமாறு ரஞ்சன் விஜேரத்னவுக்கு உத்தரவு பிறப்பித்தார்.

கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு தாமே நேரடியாகச் சென்று ஜோசிமை நாடு கடத்தும் செயற்பாடுகளைக் கண் காணித்து ஜோசிமை விமான மேற்றி அனுப்பிய பின்னர் அன்றைய தினம் நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற அவசர காலச் சட்ட நீடிப்பு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன "ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய நான் இன்று கசினோ மன்னன் ஜோசிமின் கசினோ சூதாட்ட நிலையங்களை மூடி ஜோசிமை நாடு கடத்தி விட்டு வந்துள்ளேன். சட்டவிரோத செயற்பாடுகளின்றி கொழும்பு நகரத்தை அமைதியாக இயங்க வைப்பதே அரசின் குறிக்கோளாகும்" எனத் தெரிவித்திருந்தார்.

**ஆஸ்திரேலிய பெரும் வணிகரான ஜேம்ஸ் பாக்கரால் கொழும்பு நகரில் அமைக்கப்படவுள்ள பெரியதொரு சூதாட்ட நிறுவனத்துக்கு வரி விலக்கு அளிப்பதை அறி விக்கும் வர்த்தமானி அறிவித்தலை நாடாளுமன்றம் விவாதித்து அங்கீகரிக்கவுள்ளது. (உதயன் 05-10-2013 செய்தி.)**


ஜேம்ஸ் பாக்கர்

அன்று ரஞ்சன் விஜேரத்னவின் அந்த நாடாளுமன்ற உரை மஹிந்த உட்பட்ட சுதந்திரக் கட்சித் தலைவர்களின் முகங்களைக் கறுத்துப் போக வைத்திருந்தது.

ஜோசிமை முன்னிலைப்படுத்தி தம்மால் முன்னெடுக்கப்பட்டு வந்த அரச எதிர்ப்புச் செயற்பாடுகளை பிரேமதாச சமயோசிதமாக முறியடித்து நற்பெயரைத் தட்டிக் கொண்டாரே என்ற ஏமாற்ற உணர்வே அதற்கான காரணமாகும். ஜோசிமின் விடயத்தை முன்னிறுத்தி பிரேமதாசவுக்கு இருந்த சிங்கள பௌத்த ஆதரவை நலிவடையச் செய்யும் அவர்களது அந்த முயற்சி தோற்றுப் போக நேர்ந்தது. ஜோசிம் நாடு கடத்தப்பட்டு சில காலம் கழியுமுன்னரே ரஞ்சன் விஜேரத்ன படுகொலை செய்யப்பட்டார். அவரின் படுகொலை தொடர்பாக அந்த வேளையில் ஜோசிமுடைய பெயரும் அடிபட்டது.

ஜோசிமை நாடு கடத்தியதுடன் மஹிந்த தரப்பினர் பிரேமதாசவுக்கு எதிரான பரப்புரைகளை நிறுத்திக் கொள்ளவில்லை. பிரேமதாசவும் ஜோசி மும் இணைந்து தோன்றும் நிழற் படங்களை பத்திரிகைகளில் பிரசுரித்து பிரேமதாசவுக்கு முடிந்த அளவுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தினர். அத்தகைய மஹிந்த வின் அரசு இன்று ஆஸ்திரேலியாவின் கசினோ சூதாட்ட மன்னன் ஜேம்ஸ் பாக்கர் இலங்கையில் கசினோ சூதாட்டத்தை மேற்கொள்ள வழியேற்படுத்திக் கொடுப்பது குறித்து சுதந்திரக் கட்சியின் உண்மையான அபிமானிகள் வெட்கமடைவதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

**கசினோவை அனுமதிக்க படிப்படியான நடவடிக்கைகள்**

இலங்கையில் கசினோ சூதாட்டத்தை அனுமதிக்க 2010 ஆம் ஆண்டிலேயே அரசு சட்ட விதிக ளில் இருந்த இறுக்கமான விதிகளை அரசு தளர்த்திக் கொண்டது. அந்த வேளையிலேயே கசினோ சூதாட்டத்தை நாட்டில் அனுமதிக்க சமிக்ஞை கொடுத்தாயிற்று. அதன் பின்னர் வெளி நாட்டவர்களுக்கு காணிகளைக் கொள்வனவு செய்ய வாய்ப்பாக சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட்டன. அது வெளி நாட்டவர்கள் இலங்கையில் கால் பதிப்பதற்கான இரண்டாவது சமிக்ஞையாகக் கொள்ளத்தக்கது. தற்போது ஜேம்ஸ் பாக்கர் இலங்கையில் கசினோ சூதாட்டத்தை ஆரம்பிக்க உரிய சகல ஏற்பாடுகளும் முன்னெடுக் கப்படுகின்றன. இலங்கையில் கசினோ சூதாட்டம் ஆரம்பிக்கப் பட்டதும், ஆசிய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள சூதாட்ட ஜாம்பவான்களை இலங்கைக்கு வரவழைக்க முடியுமென ஜேம்ஸ் பாக்கர் தரப்பினர் கூறி வருகின்றனர்.

**ஆஸ்திரேலிய வர்த்தகர் ஜேம்ஸ் பாக்கர் தாம் 384 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் இலங்கையில் ஐந்து நட்சத்திர தரம் கொண்ட சூதாட்ட விடுதியொன்றை நிறுவத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (டெயிலிமிரர் 19-10-2013 செய்தி.)**


ஜோசிம்

அப்படியானால் இலங்கை அரசு கூறி வரும் ஆசியாவின் அதிச யம் இந்தக் கசினோ சூதாட்டம் தானா என்ற வினாவுக்கு எவராலும் இன்று விடையளிக்க இயலாதுள்ளது.

ஒருவேளை அமெரிக்கா, பிரிட்டன் உட்பட மேற்குலக நாடுகளின் முதலீட்டாளர்களை இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள வைக்க இலங்கை அரசால் இயலாது போயுள்ளமையாலேயே, கேளிக்கைகள் தொடர்பான சட்ட திட்டங்களை இலகுபடுத்தி நாட்டை சூதாட்டக் குகையாக்க அரசு முயல்கிறதா என எண்ணத் தோன்றுகிறது.

அப்படியானால் அந்தச் சிறிய மனிதரின் கிராமிய மட்ட அரசின் நிர்வாகத்துக்கு வழுக்கல் , சறுக்கல் ஏற்படுகிறதா? என்ற சந்தேகமும் கூடவே எழுவதும் நியாயமே.

எது எப்படியோ, பதினேழு ஆண்டு காலமாக ஐ.தே.கட்சி அரசைத் தலைதூக்க இயலாத அளவுக்கு நலிவுபடுத்தி நாசப்படுத்திய மனிதரல்லவா அவர்?

இதைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் 1993 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதியன்று நாடாளுமன்ற நடவடிக்கைகள் குறித்த பதிவேடான ஹன்சார்ட்டில் இடம்பெற்றுள்ள மஹிந்தவின் கருத்து வெளிப்பாட்டின் ஒரு பகுதியை நினைவுபடுத்திப் பார்ப்பது அவசியமாகும்.

"உள்நாட்டு உற்பத்தி, உள்நாட்டு மூலப் பொருள்களைப் பயன்படுத்தாது வேறு வகையான வர்த்தக முயற்சிகளை ஆரம்பித்தால் இந்த நாட்டுக்கு நாசமே விளையுமேயொழிய அபிவிருத்தி ஏற்படப் போவதில்லை. அது மட்டுமல்ல இதனை விடப் பயங்கரமான விடயமொன்றும் உள்ளது. இந்த நாட்டின் அரசியல் சூழ லின்படி கடந்த காலங்களில் இந்த நாட்டின் அரசியல் தலைவர்கள், படைகளின் தளபதிகள், அமைச்சர்கள் படுகொலை செய்யப்பட நேர்ந்துள்ளது. இத்தகைய நிலைமை நிலவும் வேளையில் சிலவேளை கொலைகாரர்கள், கறுப்புச் சந்தைக்காரர்கள், சட்டங்களை மீறித் தவறான வர்த்தக முயற்சிகளில் ஈடுபடுவோர் நாட்டுக்குள் பிரவே சித்து கடைசியில் இந்த நாட்டின் அரசியல் அரங்கில் தலையிட்டு அரசியல் படுகொலைகளை மேற்கொள்ளவும், வாய்ப்பு ஏற்படக் கூடும். நாட்டில் அரசை வீழ்த்து தல், புதிய அரச நிர்வாகத்தை ஏற்படுத்தல், அரச தலைவர்களைப் படுகொலை செய்தல் போன்ற செயற்பாடுகளைக்கூட அவர்கள் மேற்கொள்ள இடமுண்டு. ஆதலால் கசினோ போன்ற இத்தகைய பயங்கரமான சூது விளை யாட்டுக்களுக்கு இந்த நாட்டில் அனுமதி அளிக்கக்கூடாது" என்பன போன்ற தனது முன்னைய உரைகளை இரைமீட்டிப் பார்ப்பாரா ஜனாதிபதி?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனைக்கு செல்லாத பஸ்கள்

கிளிநொச்சி அக்கராயன் வீதியால் சேவையில் ஈடுபடும் இ.போ.ச., தனியார் பஸ்கள் எவையும் அக்கராயன் பிரதேச மருத்துவமனை பகுதிக்குச் செல்வதில்லை. இதனால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கிளிநொச்சி அக்கராயன் வீதியால் சேவையில் ஈடுபடும் பஸ்கள் அம்பலப் பெருமாள் சந்தி வரையயே சேவையில் ஈடுபடுகின்றன.

இதனால் முறிகண்டி வீதியில் அமைந்துள்ள மருத்துவமனைக்குச் செல்லும் நோயாளர்களும், பார்வையாளர்களும் ஒரு கிலோமீற்றர் தூரம் வரை நடந்தே செல்லவேண்டியுள்ளது.

இந்த விடயம் குறித்து பல தடவைகள் சுட்டிக் காட்டியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே இந்த விடயத்தில் தனியார் மற்றும் இ.போ.ச. உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-18)




தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கோண்டாவில் பொது நூலகத்தால் முன்பள்ளி மாணவர்களுக்கான பல்வேறு போட்டிகள் கடந்த வாரம் நடத்தப்பட்டன. இதில் 50 இற்கும் மேற்பட்ட முன்பள்ளி மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர். (வ-14)

# நீண்டதூரம் கால்நடையாக பாடசாலை வரும் மாணவர்கள்



அக்கராயன், ஒக்.23

கிளிநொச்சி அழகாபுரம் வித்தியாலயத்துக்கு வரும் மாணவர்களில் பெரும்பாலானோர் நீண்ட தூரங்களில் இருந்து கால்நடையாக வருகின்றனர். மாணவர்களின் சிரமங்களை நீக்க சம்பந்தப்பட்டோர் கவனம் செலுத்த வேண்டும் என்று பாடசாலைச் சமூகத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். 242 வரையான குடும்பங்கள் இந்தக் கிராமத்தில் வாழ்ந்து வருகின்றன. 114 மாணவர்கள் குறித்த பாடசாலையில் கல்வி பயிலுகின்றனர். இந்தக் குடும்பங்கள் பெரும்பாலும் கூலித் தொழிலை அடிப்படையாகக் கொண்டவை. இதன் காரணமாக அநேகமான பிள்ளைகள் பாடசாலைக்கு நீண்ட தூரங்களில் இருந்து கால்நடையாகவே வருகின்றனர். எனவே குறித்த மாணவர்களது எதிர்காலம் கருதி சம்பந்தப்பட்டவர்கள் உரிய உதவிகளை வழங்க வேண்டும் என பாடசாலைச் சமூகத்தினர் கோரியுள்ளனர். (ஐ-18)

# பாலங்கள் அமைக்கப்படாமல் வீதி அபிவிருத்திப் பணிகள்

## முறிகண்டி- அக்கராயன் வீதியில் வெள்ள ஆபத்து

கிளிநொச்சி, ஒக்.23

கிளிநொச்சி, முறிகண்டியில் இருந்து அம்பலப்பெருமாள் சந்தி வரையான வீதியில் முறைப்படி பாலங்கள் அமைக்கப்படாது வீதி அபிவிருத்திப் பணிகள் நடைபெற்று வருவதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

குறித்த வீதியில் பல இடங்களில் பெரிய, சிறிய ஆறுகள் குறுக்கறுக்கின்றன. இவை மழை காலங்களில் பெருக்கெடுத்து ஓடும். நீண்ட காலமாக வீதி புனரமைக்கப்படாமையால் வீதிகளைக் குறுக்கறுத்தும் வெள்ள நீர் பாய்வது வழமை.

இந்த நிலையில் தற்போது இந்த வீதி புனரமைக்கப் பட்டு வருகின்றது. இதன்போது பாலங்கள் அமைய வேண்டிய இடங்களில் சிறிய மதகு களும், கிட்டங்கிகள் அமைய வேண்டிய இடங்களில், நீர் வழிந்தோடும் குழாய்களும் அமைத்து வீதி புனரமைக் கப்படுவதாக மக்கள் தெரி விக்கின்றனர்.

அக்கராயன்குளம் வான்பாயும் போது வெளியேறும் வெள்ள நீர் வீதியைக் கடக்கும் இடத்தில் பெரும் பாலம் அமைக்கப்பட வேண்டும் என 2010 ஆம் ஆண்டு கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால், குறித்த பாலம் தற்போது சிறியதாகவே அமைக்கப்பட்டுள்ளது. இதனால் மழைகாலங்களில் வெள்ள அபாயம் ஏற்ப டும் சாத்தியம் உள்ளதாக மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர். (ஐ-18)

குறித்த பாலம் தற்போது சிறியதாகவே அமைக்கப்பட்டுள்ளது. இத னால் வெள்ள அபாயம் ஏற்ப டும் சாத்தியம் இருப்பதாக மக்கள் சுட்டிக் காட்டுகின்ற னர்.

## தருவது வித்தியா

# இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?



**மேடம்:** கடந்த 2 தினங்களாக இருந்த மன உளைச்சல் நீங்கி தெளிவு பிறக்கும். புதியவர்களின் நட்பால் உற்சாகமடைவீர்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். செலவுகளைக் குறைக்கத் திட்டமிடுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்



**இடபம்:** பழைய கசப்பான சம்பவங்களைப் பற்றி யாரிடமும் விவாதிக்க வேண்டாம். குடும்பத்தில் உள்ளவர்கள் யாரும் உங்களைப் புரிந்துக் கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள். சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும்.



**மிதுனம்:** உணர்ச்சிவசப்பட்டு அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். திடீர்ப் பயணங்கள் உண்டு. வியாபாரத்தில் லாபம் கணிசமாக உயரும். உத்தியோகத்தில் மறைமுகத் தொந்தரவுகள் வந்து நீங்கும்.



**கடகம்** : நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.



**சிங்கம்:** உங்களுடைய ஆலோசனைகளை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். வேற்றுமதத்தவர் உதவுவார். அலுவலகத்தில் மரியாதை கூடும்.



**கன்னி:** எதையும் உற்சாகத்துடன் செய்யத் தொடங்குவீர்கள். உறவினர்கள் உங்களைப் புரிந்து கொள்வார்கள். பழைய பிரச்சினைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**நாளை**

ஐப்பசி-07 வியாழக்கிழமை 24.10.2013

திதி: பஞ்சமி மு.ப.10.48 வரை

நட்சத்திரம்: மிகசீரிடம் மு.ப.10.58 வரை

சுபநேரம்: 07.32 - 09.02 வரை

இராகுகாலம்: 01.32 - 03.02 வரை



**துலாம்:** வேலைச்சுமையால் பதற்றம் அதிகரிக்கும். சிலரின் தவறுகளைச் சுட்டிக்காட்டுவதன் மூலம் சச்சரவுகளில் சிக்குவீர்கள். யாரையும் முழுமையாக நம்ப வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.



**விருச்சிகம்:** தன்னம்பிக்கை பிறக்கும். உங்களின் பலம் பலவீனத்தை உணருவீர்கள். வேற்றுமதத்தவர் அறிமுகமாவார். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள்.



**தனுசு:** தொட்ட காரியங்கள் துலங்கும். எதிர்பாராத பணவரவு உண்டு. அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்குமாறு நடந்து கொள்வீர்கள்.



**மகரம்:** சிக்கனமாகச் செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் புதிய முயற்சிகள் பலிதமாகும்.



**கும்பம்:** எடுத்த வேலைகளை முடிக்காமல் ஓயமாட்டீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள்.



**மீனம்:** கம்பீரமாகப் பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் புதிய [illegible] உத்தியோகத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | | 1 | | | | 3 |
| | | 8 | | | | | 1 | 4 |
| | 5 | 3 | 2 | | 4 | 7 | 9 | |
| 8 | 4 | | | 5 | 2 | | | |
| | 3 | | | 9 | | | 5 | |
| | | | 3 | 7 | | | 6 | 8 |
| | 9 | 2 | 1 | | 3 | 6 | 8 | |
| 5 | 1 | | | | | 9 | | |
| 3 | | | | 2 | | | 4 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 5 | 1 | 3 | 8 | 4 | 2 | 9 | 6 |
| 6 | 4 | 2 | 7 | 1 | 9 | 3 | 5 | 8 |
| 8 | 9 | 3 | 2 | 6 | 5 | 7 | 1 | 4 |
| 1 | 3 | 8 | 6 | 2 | 7 | 9 | 4 | 5 |
| 2 | 6 | 4 | 9 | 5 | 8 | 1 | 3 | 7 |
| 5 | 7 | 9 | 1 | 4 | 3 | 8 | 6 | 2 |
| 9 | 8 | 7 | 5 | 3 | 6 | 4 | 2 | 1 |
| 3 | 2 | 6 | 4 | 7 | 1 | 5 | 8 | 9 |
| 4 | 1 | 5 | 8 | 9 | 2 | 6 | 7 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனம் நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லாகம் லயன்ஸ் கழகத்தின் 16ஆவது பதவியேற்பு

வலி. வடக்கு, ஒக். 23
தெல்லிப்பழை மல்லாகம் லயன்ஸ் கழகத்தின் 16 ஆவது பதவியேற்பும், பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கு உதவி வழங்கும் நிகழ்வும் கடந்த சனிக் கிழமை தெல்லிப்பழை லயன்ஸ் கழக தொழிற் பயிற்சிக் கட்டடத்தில் லயன் ரி.ஜெயராஜ் தலைமையில் நடைபெற்றது.





இந்த நிகழ்வில் பிராந்திய ஆளுநர் லயன். என்.ஞானராசா மற்றும் மாவட்டத் தலைவர் லயன் ஆர்.சுந்தரேஸ்வரன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டதுடன் புதிய உறுப்பினர்களுக்கான சத்தியப் பிரமாணத்தையும் செய்து வைத்து பதவிகளை வழங்கினார்கள்.
இதனையொட்டி வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட முதியவர்கள் மற்றும் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த 30 பேருக்குதலா இரண்டாயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் உட்பட பண உதவிகளும் வழங்கப்பட்டன.
இந்த உதவிகளை லயன் சி.விக்கினராசா, லயன் ஆர். சுந்தரேஸ்வரன், லயன் என்.ஞானராசா மற்றும் லயன் எஸ். ஆறுமுகநாதன் ஆகியோர் வழங்கினர். (ந-86)

# வைத்தீஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டு விழா இன்று

யாழ்ப்பாணம், ஒக். 23
யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டு விழா இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.
இரு அமர்வுகளாக நடைபெறவுள்ள நூற்றாண்டு விழா நிகழ்வில் காலை அமர்வு நாகமுத்து அரங்கில் காலை 8 மணிக்கு பாடசாலை அதிபர் மு.மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலர் சி.சத்தியசீலன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா, யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன், யாழ்.கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுமார் ஆகியோர் கலந்து கொள்வர். இதன்போது சிறப்பு விருந்தினர்கள் உரையும் பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் நடைபெறும்.
மாலை அமர்வு பிற்பகல் 2 மணிக்கு விபுலானந்தர் அரங்கில் நடைபெறவுள்ளது.
பேராசிரியர் மா.சின்னத்தம்பி தலைமையில் நடைபெறும் இந்த அமர்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்து கொள்வார்.
சிறப்பு விருந்தினர்களாக தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி ச.அமிர்தலிங்கம், யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ.வரதாஜமூர்த்தி, யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் சிமாணிக்கராசா ஆகியோர் கலந்து கொள்வர்.
நிகழ்வில் 20 வருடங்களுக்கு மேல் சேவையாற்றியோர் கௌரவிப்பும், விருந்தினர்கள் உரைகள், 'வைத்தீஸ்வரம் நூற்றாண்டு மலர் வெளியீடு என்பனவும் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ந)

# அன்பு வாரம் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 23
வட பிராந்திய சத்தியசாயி நிறுவனத்தின் இணைப்புக் குழு வருடந்தோறும் ஒக்ரோபர் மாதத்தின் இறுதி வாரத்தை அன்பு வாரமாகக் கடைப்பிடித்து வருகின்றது.
அன்புவாரத்தில் நமது குடும்பத்தில், பணிபுரியும் வேலைத்தளங்களில், சமூகத்தில் என ஒவ்வொன்றிலும் மற்றவர்கள் மீது அன்புணர்வைக் கடைப்பிடித்து அன்பின் சக்தியை உணரக் கூடிய விதத்தில் ஒவ்வொரு வரும் நடந்து கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.
நேற்றுமுன்தினம்திங்கட்கிழமை ஆரம்பமாகிய இந்த வாரம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை கடைப்பிடிக்கப்படும் என இணைப்புக் குழுவின் தலைவர் மருத்துவர் ககணேசமூர்த்தி தெரிவித்துள்ளார். (ந)

# பிள்ளைகளில் பெற்றோர் தங்கி வாழ்வதால் பின்னாளில் பிரச்சினைகள் உருவெடுக்கும்

குருநகர், ஒக்.23
பெற்றோர் பிள்ளைகளில் தங்கி வாழ முற்படுவதனால் பெற்றோர்கள் என்று வயதான காலத்தில் பிரச்சினைகளை அனுபவிக் கிறார்கள்.
கைதடி அரச முதியோர் இல்லத்தில் நடைபெற்ற முதியோர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய கத்தோலிக்க மத குரு வண.பிதா எஸ்.பிரான்சிஸ் அடிகளார் தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-
ஒரு குழந்தையானது பல விதமான சவால்களுக்கு முகம் கொடுத்து எதிர்நீச்சல் போட்டு இயற்கையை வெற்றி கொள்கிறது. பெற்றோர் அயலவர்களது உதவியுடன் இது நடைபெறுகிறது. இதுவே மனித வாழ்வின் ஆரம்பப் போராட்டம். குழந்தை. குழந்தைப் பருவத்தில் இருந்து இளமைப் பருவத்துக்கு வருகிறது. வளர்ந்தும், கல்வியில் போராட்டங்களை எதிர்கொள்கிறார்கள். சவாலை வெற்றி கொண்டு குடும்ப வாழ்க்கைக்குச் செல்கின்றனர். மனைவியை, கணவனை, வீட்டை, சொத்துக்களை, தேடிப் பாதுகாப்பை ஏற்படுத்தி வாழ முற்படுகிறார்கள்.
வாழ்வை சுவைக்க முற்படுகிறார்கள். முதியோர் பலவித சவால்களை எதிர்கொள்கிறார்கள். பலவித ஏமாற்றங்களைச் சந்திக்கிறார்கள். முதியவர்கள் தமது பிள்ளைகளை நம்பி ஏமாந்து போகிறார்கள். முதியவர்களுக்கு எமது சமுதாயத்தில் ஏன் பாதுகாப்பில்லை. 18 வயதை யடைந்த பிள்ளைகள் சுதந்திரமான வாழ்வை முன்னெடுக்க முற்படுகிறார்கள். வெளிநாட்டில் கணவன்- மனைவி புரிந்துணர்வுடன் இணைந்து வாழ்கிறார்கள். இங்கு அப்படி இல்லை. பிள்ளைகளில் பெற்றோர் தங்கி வாழ முற்படுவதனால் இங்கு பிரச்சினைகள் உருவாகுகின்றன. பிள்ளைகள் தமது குடும்ப வாழ்வை ஆரம்பிக்க முற்பட முதியவர்கள் பிள்ளை களால் கைவிடப்படும் நிலை உருவாகுகிறது. இதனால் தான் முதியோர் இல்லங்கள் உருவாகுகின்றன. முதியோர் இல்லங்கள் அவர்களுக்கு நம்பிக்கை கொடுக்கும் இல்லங்களாக உள்ளன.
முதியோர் இல்லங்களுக்கு அமைப்புகள் உதவ வேண்டும்- என்றார். (ந-51)

# கை தவறியது சுடுநீர்ப் பாத்திரம் கைக் குழந்தையும், சிறுமியும் காயம்

வலி. வடக்கு, ஒக். 23
சுடு தண்ணீரை எடுத்துவர முயன்ற சிறுமியின் கையில் இருந்து சுடுநீர்ப் பாத்திரம் கைதவறியமையால் பத்து மாதக் குழந்தையும், பத்து வயதுப் பிள்ளையும் படு காயங்களுக்கு உள்ளாகிய சம்பவம் தெல்லிப்பழை கொல்லாபுரத்தில் இடம் பெற்றுள்ளது.
இந்தச் சம்பவம் சனிக்கிழமை இடம் பெற்றது.
தனது பத்துவயதுள்ள மூத்த பிள்ளை குழந்தையை வைத்திருந்த போது தாயார் சுடுநீரை எடுத்து வரும் படி அறிவுறுத்தியுள்ளார். இதனால் மூத்த பிள்ளை சுடுநீர் எடுக்க முற்பட்ட வேளையில் கைதவறிசுடு நீர்ப் பாத்திரம் கீழே விழ்ந்தது. இரு பிள்ளைகளின் மீதும் சுடு நீர் சிந்தியது. கடும் பாதிப்புக்கு உள்ளான இருவரும் தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டி மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ந-86)

# அன்பு வாரத்தை முன்னிட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக்.23
வடபிராந்திய சத்தியசாயி நிறுவனங்களின் இணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் அன்பு வாரத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே போட்டிகள் நடத்தப்படவுள்ளன.
முதலாம் பிரிவில் தரம் 5 தொடக்கம் தரம் 7 வரையான மாணவர்கள் "அம்மாவின் அன்பு", "குரு பக்தி" ஆகிய ஏதாவது ஒரு தலைப்பிலும், இரண்டாம் பிரிவில் தரம் 8 தொடக்கம் தரம் 10 வரையான மாணவர்களும், மூன்றாம் பிரிவில் தரம் 11 தொடக்கம் தரம் 13 வரை யான மாணவர்களும், "அன்பு ஒரு மகா சக்தி", 'அன்பே மனித இயல்பு', "எனது வாழ்வில் அன்பின் அனுபவம்', 'இலங்கை யில் அன்பு" ஆகிய தலைப்புக்களில் கட்டுரையொன்றை எழுதலாம்.
கவிதை, சித்திரப் போட்டிகளில் மூன்றாம் பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் பங்கு பற்றலாம். ஆர்வமுடைய மாணவர்கள் அதிபரின் உறுதிப்படுத்த லுடன் தமது ஆக்கங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னதாக கே.வி. சிவனேசன், சத்தியசாயி மனிதமேம்பாட்டுக்கல்வி, இணைப்பாளர் "சாயி தர்சன்" கொக்குவில் என்றமுகவரிக்குஅனுப்பி வைக்கலாம். (ந-14)

# 'மனிதம்' இதழ் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக்.23
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சேவைக் கழகத்தின் 22 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் 8 ஆவது மனிதம் இதழ்வெளியீடும்இன்று முற்பகல் 11 மணிக்கு குமாரசுவாமி மண்டபத்தில்இடம்பெறவுள்ளது. சோ.திரியம்பகசர்மா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் சட்டத்தரணி வி.திருக்குமரன் பிரதம விருந்தினராகக்கலந்துகொள்ளவுள்ளார். (ந-5)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை சுன்னாகம் 2014ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லக்குட்பட்ட மரக்கறிச் சந்தைகள், மீன் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், மீன் வெட்டுமிடம் என்பவற்றை 01.01.2014 தொடக்கம் 31.12.2014ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம். | கேள்வி வைப்பு | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வற் வரி தவிர) | மாத வாடகை (வற் வரி தவிர) |
|---|---|---|---|---|---|
| | **சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| 1. | சுன்னாகம் மத்திய மரக்கறிச் சந்தை (வாகனத் தரிப்பிடம் உட்பட) | 2000.00 | 30000.00 | 7374000.00 | |
| 2. | சுன்னாகம் சந்தை மீன் வெட்டுமிடம் | 1000.00 | 10000.00 | 56100.00 | |
| 3. | சுன்னாகம் மீன் சந்தை | 1000.00 | 10000.00 | 901000.00 | |
| 4. | உடுவில் கீளிச் சந்தை | 1000.00 | 10000.00 | 165100.00 | |
| 5. | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை இல. 01 | 1000.00 | 10000.00 | 454500.00 | 250.00 |
| 6. | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை இல. 02 | 1000.00 | 10000.00 | 245000.00 | 250.00 |
| 7. | கருவாட்டுக் கடை இல. 03 | 750.00 | 7500.00 | 36500.00 | 250.00 |
| 8. | முட்டைக் கடை இல. 04 | 750.00 | 7500.00 | 45100.00 | 250.00 |
| 9. | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை இல. 05 | 1000.00 | 10000.00 | 1121100.00 | 250.00 |
| 10. | கோழிக்கடை இல. 06 | 750.00 | 7500.00 | 176800.00 | 250.00 |
| 11. | கோழிக்கடை இல. 07 | 750.00 | 7500.00 | 152000.00 | 250.00 |
| 12. | கோழி உரித்தல் | 750.00 | 7500.00 | 55000.00 | 250.00 |
| 13. | பொது மலசல கூடம் (சுன்னாகம் பஸ்தரிப்பிடத்திற்கு அருகில்) | 750.00 | 7500.00 | 33300.00 | |
| | **உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 1. | மருதனார் மடம் சந்தை (வாகனத் தரிப்பிடம் உட்பட) | 2000.00 | 30000.00 | 15422000.00 | |
| 2. | இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை (கொத்தியாலடி கொல் களத்தில் ஆடுகள் வெட்டப்படுதல் வேண்டும்) | 500.00 | 5000.00 | 74500.00 | 250.00 |
| 3. | இணுவில் சந்தை | 500.00 | 1000.00 | 13750.00 | |
| 4. | மல்வம் சந்தை | 500.00 | 1000.00 | 16500.00 | |
| 5. | மல்வம் மாட்டிறைச்சிக் கடை (கொத்தியாலடி கொல் களத்தில் மாடுகள் வெட்டப்படுதல் வேண்டும்) | 1000.00 | 10000.00 | 167200.00 | |
| 6. | மருதனார் மடம் சந்தை பொது மலசலகூடம் | 750.00 | 7500.00 | 50000.00 | |
| | **ஏழாலை உப அலுவலகம்** | | | | |
| 1. | ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 5000.00 | 152900.00 | |

1. கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் 24.10.2013 07.11.2013 பி.ப 2.00 மணி வரை
2. கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளுதல் 08.11.2013 நண்பகல் 12.00 மணி வரை
3. கேள்விப் பத்திரம் திறக்கப்படுதல் 08.11.2013 பி.ப 2.00 மணிக்கு
4. கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை **'தவிசாளர், வலிகாமம் தெற்குப் பிரதேசசபை, சுன்னாகம்'** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். இரண்டாவது பிரதியை **'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்'** என முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.
5. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன், தாம் வதியும் இடத்தின் கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. உள்ளூராட்சி மன்றங்களினால் 'தவறுநராகக்' கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம்வழங்கப் படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
7. கேள்விப் படிவக் கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு 12% பெறுமதி சேர் வரியும் 2% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியும் காலத்திற்குக் காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரியும் செலுத்தப்பட வேண்டும்.
8. தெரிவு செய்யப்படும் மருதனார்மடம், சுன்னாகம் சந்தைகளுக்கான சித்திகரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/3 பங்குத் தொகையை 2013.12.05ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவதுடன் மிகுதி 2/3 பங்குத் தொகைக்கு வங்கியில் தங்கள் பெயரில் வைப்புச் செய்தமைக்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்து ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். ஏனைய சந்தைகள், இறைச்சி, கருவாட்டுக் கடைகளுக்குரிய சித்திகரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/2 பங்கு தொகையை 2013.12.05ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
9. சந்தையைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர்கள் கொண்டு வரும் பொருள்களின் விற்பனை விலையில் 4% இற்கு மேல் வரி அறவிடக் கூடாது.
10. இறைச்சிக்காக கன்று ஈனக் கூடிய பசுக்களையோ, மறியாடுகளையோ அறுப்பது தடை செய்யப்படும். எனினும் கன்று ஈன முடியாத பிரயோசனமற்றது என மிருக வைத்தியர் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கும் பட்சத்தில் மாடு, ஆடுகளை அறுப்பதற்கு அனுமதி வழங்க முடியும்.
11. பொது மலசல கூடத்தைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேல் வரி அறவிடக் கூடாது.
12. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ தவிசாளருக்குப் பூரண அதிகாரம் உண்டு.
13. ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக் கடைக்குக் கேள்வி விண்ணப்பம் சமர்ப்பிப்பவர் குறிப்பிட்ட இடத்தில் காணி உரிமையாளர்களின் சம்மதக் கடிதம் இணைக்கப்படுதல் வேண்டும்.
14. கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப் படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
15. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்
16. கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**தி.பிரகாஷ்**
**தவிசாளர்,வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.** (33703)(12.5.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார விழிப்புணர்வு போட்டி முடிவுகள்

தென்மராட்சி, ஒக்.23

பாடசாலை சுகாதார மேம்பாட்டுச் செயற்றிட்டத்தின் கீழ் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளி டையே சாவகச்சேரி இந்துக் கல் லூரியில் கடந்த திங்கட்கிழமை நடத்தப்பட்ட சுகாதார விழிப்பு ணர்வு கலை நிகழ்வுப் போட்டி களின் முடிவுகள் அறிவிக்கப்பட் டுள்ளன.

வடமாகாண கல்வி, சுகாதார அமைச் சுக்களுடன் இணைந்து தென்ம ராட்சி கல்வி வலயத்தினால் இந்த விழிப்புணர்வு கலை நிகழ்வுப் போட்டி கள் நடத்தப்பட்டன.

தெரிவு செய்யப்பட்ட 10 பாடசாலை களிடையே நடத்தப்பட்ட போட்டி களில் முதலிடத்தை சாவகச்சேரி இந்துக் கல்லூரியும், இரண்டாம், மூன்றாம் இடங்களை முறையே மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாட சாலையும், சாவகச்சேரி மகளிர் கல்லூரியும் பெற்றுக் கொண்டன. வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில் வடமாகாண கல்வி பண்பாட்டலு வல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்திய சீலன், வடமாகாண சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் மருத் துவர் திருமதி எஸ்.ஆர்.யூட், கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன், சாவகச்சேரிப் பிரதேச சபைத் தலைவர் சி.துரை ராஜா ஆகியோர் கலந்து கொண் டனர்.

(ந-9)

# கலைஞர் கௌரவிப்பும் விருது வழங்கலும்

வடமராட்சி, ஒக்.23

வடமராட்சி வடக்குப் பிரதேச செய லகத்தின் கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் வருடாந்தம் நடத்தப் படும் கலை இலக்கியப் பெருவிழா வின் இந்த வருடத்துக்கான நிகழ்வு எதிர்வரும் 27 ஆம் திகதி பருத் தித்துறை ஸ்ரீ பர்வதவர்த்தனி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் 2013 ஆம் ஆண் டுக்கான கலைஞர்களின் கௌரவிப் பும், விருது வழங்கும் நிகழ்வும் பிரதேச செயலர் ஆர்.ரீ.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி வடக்கு கலாசாரப் பேரவையினால் இந்த வருடத்துக் கான விருதுபெறும் கலைஞர்களாக பின்வரும் துறைசார்ந்த மூத்த கலைஞர்கள் தெரிவு செய்யப்பட் டுள்ளனர் என்று கலாசாரப் பேரவை யின் செயலர் செல்வசுகுணா தெரி வித்துள்ளார்.

**சமூக நாடகம்**- ஜோசப் இருதய ராஜா (பருத்தித்துறை), **பாரம்பரி யக் கலைகள்**- அப்பாத்துரை சித்திரவேலாயுதம் (வல்வெட்டித் துறை), **ஊடகத்துறை**- சின்னத் துரை தில்லைநாதன் (புலோலி), **சிற்பம், ஓவியம்**- மாரிமுத்து ஆச் சாரி ஜெயானந்தன் ஆச்சாரி (தும் பளை), **இலக்கியம்**- கந்தையா சின்னராஜா (அல்வாய்) ஆகிய கலைஞர்களுக்கே விருதுகள் வழங் கப்படவுள்ளது.

இந்த விருது வழங்கும் நிகழ்வில் மாணவர்களினதும், கலை இலக் கிய மன்றங்களினதும் கலை நிகழ்ச் சிகளும் இடம்பெறவுள்ளன. (ந-8)

# ஒரே தடவையில் 3 உர வகைகள்

மீசாலை, ஒக்.23

சாவகச்சேரி கமநல சேவை நிலையம் விவசாயிகளுக்கு 3 வகையான உர வகைகளையும் ஒரே தடவையில் வழங்கி வருகின்றது. கடந்த காலங்களில் இந்த உர வகைகள் ஒரே தடவையில் வழங்கப்படாமல் கட்டம் கட்டமாக 3 தடவைகளிலேயே வழங்கப்பட்டு வந்தன. இந்தமுறை யூரியா, ரீஎஸ்பீ, எம்ஓபீ ஆகிய மூன்று உர வகைகளும் ஒரே தடவையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. (ந-122)

## தேவை

**லண்டனில் 72 வயதான ஆரோக்கியமான ஒரு வரைக் கவனிப்பதற்கு 40 வயதிற்கு மேற்பட்ட பெண் (பயிற்றப்பட்ட/பயிற்றப்படாத தாதி) விரும்பத்தக்கது விண்ணப்பங்களை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவும்.**

**தவம்** ***68, Burges Road East Ham London E6 2BH England.*** (32798)(7.6.3)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கோப்பாய் தெற்கு.றோ.க.த.க பாடசாலை




ஜெ.சச்சின்
**புள்ளி-173**

ச.நிலுஸ்ரிகா
**புள்ளி-166**

2013 தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களையும், 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற ஏனைய 8மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு, அர்ப்பணிப்புடன் கற்பித்த **திருமதி வி.சிவானந்தன்** ஆசிரியரையும் நெறிப்படுத்திய அதிபர் **திருமதி கு.அசோக்குமார்** அவர்களையும் ஏனைய ஆசிரியர்களையும் மனதார வாழ்த்துகின்றோம்.

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.**

## கிட்டங்கி வாவியில் முதலைகள்; வருடத்தில் ஏழு உயிர்கள் சாவு



அம்பாறை,ஒக்.23

அம்பாறை, சேனைக்குடியிருப்பு கிட்டங்கி வாவியில் முதலைகளின் பெருக்கம் அதிகரித்துள்ளன.

அதனால், வருடந் தோறும் சுமார் 7 மனித உயிர் கள் காவு கொள்ளப்படுகின்றன என்று கல்முனை பொலிஸ் நிலைய தலைமை பொலிஸ் பரிசோதகர் ஏ.டபிள்யூ.கபார் தெரிவித்தார்.

இந்த முதலைகளால் உயிர்கள் காவு கொள்ளப்படுவதை தடுத்து நிறுத்தும் பொருட்டு கல்முனை பொலிஸ் நிலையமும், சேனைக் குடியிருப்பு கிராம அபிவிருத்தி சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்த விழிப்புணர்வு வேலைத் திட்டம் கிட்டங்கி பிள்ளையார் ஆலய முன்றலில் திங்கட்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது கிட்டங்கி வாவிக்கு அருகில் மக்கள் நீராடுவதற்கு பொருத்தமற்ற இடம் என்று குறிக் கப்பட்ட பெயர்ப்பலகை காட்சிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)



நாட்டின் சமாதான சூழ்நிலையையடுத்து யாழ்ப்பாண கல்விச் சமூகத்தினர் திங்கட்கிழமை கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு பயணம் செய்தனர். இதன்போது சம்மாந்துறை முஸ்லிம் மகளிர் வித்தியாலயத்துக்குச் வருகை தந்த யாழ்.மாவட்டத்தின் வலிகாமம் வலயத்தை சேர்ந்த உதவிக் கல்விப் பணிப்பாளர், கோட்டக்கல்வி அதிகாரிகள், ஆசிரிய ஆலோசகர்கள்,அதிபர்கள் ஆகியோர் உள்ளடங்கிய குழுவினர் அங்குள்ள அதிகாரிகளுடன் இணைந்து நிற்கின்றனர்.

## குளிர்பான விற்பனைக்கு சென்றோர் மீது தாக்குதல்

மட்டக்களப்பு, ஒக்.23

காத்தான்குடி, காங்கேய னோடை கிராமத்தில் குளிர் பானம் விற்பதற்காக சென்ற மூவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று காத்தான் குடிப்பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் இருவர் காயமடைந்துள்ளனர். அத்தோடு அவர்கள் பயணித்த வாகனமும் சேதமாகியுள்ளது.

காங்கேயனோடை கிராமத்தி லுள்ள கடைகளுக்கு குளிர் பானப் விற்பதற்காக வாகனமொன்றில் மூன்று பேர் சென்றுள்ளனர்.

அதன் போது அங்கு மோட்டார் சைக்கிளில் வந்த மூவர், இந்த குளிர்பான வாகனம் தமது போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருப்பதாகக் கூறி வாகனத்தில் பயணித்த விற்பனையாளர்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். (ச)

# மாநாட்டை முன்னிட்டு பொலிஸார் சோதனை





கொழும்பு,ஒக்.23

கொட்டாஞ்சேனை பகுதியில் படி வங்களை கொடுத்து வதிவிட மக்களின் விவரங்களை இனந்தெரியாதோர் சேகரித்தனர் என செய்தி வெளியாகியிருந்த நிலையில், வெள்ளவத்தையிலும் பொலிஸார் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இதனால் மக்கள் பீதியடைந்துள்ளனர்.

அதேவேளை இந்த விடயம் தொடர்பாக ஜனநாயக மக்கள் முன்னணியின் உதவிச் செயலாளரும் கொழும்பு மாநகரசபை உறுப்பினருமான சண் குகவரதன் மற்றும் கட்சியின் ஊடகச் செயலாளரும், கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான சி.பாஸ்கரா ஆகி யோர் வெள்ளவத்தை பொலிஸ் நிலையம் சென்று பொறுப்பதிகாரிகளுடன் உரையாடினர்.

இதன்போது,குறித்த சோதனை நடவடிக்கைகளை உறுதிப்படுத்திய பொலிஸார், இச் சோதனை நடவடிக்கைகள் பொதுநலவாய மாநாட்டு பாதுகாப்பு முன்னேற்பாடாக மேற்கொள்ளப்பட்டது. சோதனை நடவடிக்கையில் வெள்ளவத்தை பொலிஸார் சீருடையிலும் உளவுப் பிரிவினர் சிவில் உடையிலும் செல்கின்றனர் என்று தெரிவித்தனர்.

அதேவேளை, அண்மைக் காலத்தில் பொலிஸார் எனக் கூறி வந்தோரால் வெள்ளவத்தையில் நடத்தப்பட்ட கொள்ளைச் சம்பவத்தை நினைத்து மக்கள் பீதியடைவதை சுட்டிக்காட்டிய ஜ.ம.மு.மாநகரசபை உறுப்பினர்கள். அடையாளத்தை உறுதிப்படுத்தி பொலிஸார் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டு அதனை பொலிஸார் ஏற்றுக் கொண்டனர். அதேவேளை, மக்களும் பொலிஸாரின் அடையாளத்தை உறுதிப்படுத்திய பின்னரே தகவலை வழங்கவேண்டும் ஜ.ம.மு. மாநகரசபை உறுப்பினர்களான குகவரதன், பாஸ்கரா ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

குழந்தையாய் மண்ணில்
11 - 02 - 1940

தெய்வமாய் விண்ணில்
03 - 11 - 2012



காது,மூக்கு,தொண்டை சத்திர சிகிச்சை நிபுணர்

**அமரர் Dr.சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம்**

ஓராண்டு கடந்தாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் நெஞ்சங்களில் நீங்காமல் நிலைத்துள்ளன.
தெய்வமாய் நின்று எம்மை வழிநடத்திய எமது குடும்பத்தலைவனே
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
உங்கள் நினைவுகள் நிலைத்திருக்கும்

96, முதலாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (33213)(5.6.3)

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி

### கதிரேசு மார்க்கண்டு

(ஸ்தாபர்- Woodlands Company, Woodlands Hotel, Colombo - 11)



உறங்காத உன் விழிகள்
இன்று உறங்கியது ஏனோ!
ஓயாத உன் சமூக சேவை அலைகள்
இன்று ஓய்ந்தது ஏனோ
கணீர் என ஒலிக்கும் உன் மணிக்குரல்
இன்று மௌனித்தது ஏனோ
ஒன்றுமே புரியாது தவிக்கின்றோம்
எங்கள் ஐயா!

அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

S.முருகானந்தம், லவன் ரேடர்ஸ்,
21A, ஒல்கொட் மாவத்த, காலி. (சி13162) (12.6.3)

## மரண அறிவித்தல்

### திருமதி நாகேஸ்வரி வேலாயுதபிள்ளை



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகேஸ்வரி வேலாயுதபிள்ளை நேற்று (22.10.2013) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வேதநாயகி, சிவலோகநாதன், தயானந்தன் மற் றும் பரமேஸ்வரன் (Rtd. BOC - Staff), சத்தியபாமா (இத்தாலி), தளையசிங்கம், மங்களேஸ்வரி, பத்மநாதன் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ் சென்ற நடராசா மற்றும் மகேஸ்வரி (கனடா), மகேஸ்வரி, காலஞ்சென்ற கலாமதி மற்றும் லிங்கமூர்த்தி (இத்தாலி), செல்வநாதன் ஆகியோரின் மாமியும், றமேஸ்-ஜெயந்தி (ஜேர்மனி) ஜெயகாந்தன் (யா/மாநகரசபை)- தர்ஜினி, பிரகாஸ், செந்தூரன், மயூரன் (இத்தாலி), பிரதீபன், பிரியா, பிரசாந்த், தயாலினி, தயானி, தயானா (கனடா), விமல், நிவிதா, சசி கரன், கார்த் திகா (ஜேர்மனி), பாமதி ஆகியோரின் பேர்த்தியும், லவ்றா, லியோனா, மிதுஷன் (ஜேர்மனி), கஸ்விகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2013) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நடேஸ்வரி, ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு,கொக்குவில். (33214) (10.6)

தகவல்:
பரமேஸ்வரன் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 வருடங்களுக்குள் வீடுகளை அமைத்துக் கொடுக்க வேண்டும்

## கொம்பனி வீதி குடியிருப்பு தொடர்பில் நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, ஒக்.23

நகர விரிவாக்கல் காரணமாக எதிர் வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் கொம்பனி வீதியில் அமைந் திருந்த தமது வீடுகளில் இருந்து வெளியேறுபவர் களுக்கு இரண்டு வருடங்களுக்குள் வீடுகள் அமைத்து கொடுக்கப்பட வேண்டும் என்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

**தற்காலிக குடியிருப் புகளில் குடியேறுவோ ருக்கு உரிய வாடகைக் கொடுப்பனவுகளை அளவையியல் திணைக் களம் வழங்க வேண்டும்.**

நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு இந்த உத்தரவு திங்கட்கிழமை பிறப்பிக் கப்பட்டுள்ளது. இந்தநிலையில் வீடுக ளில் இருந்து வெளியேறி தற்காலிக குடியிருப்புகளில் குடியேறுவோருக்கு உரிய வாடகைக் கொடுப்பனவு களை அளவையியல் திணைக்க ளம் வழங்க வேண்டும் என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

புதிய வீடுகள் தேவையில்லை என்று நட்டஈட்டை கோருவோருக்கு அளவை யியல் திணைக்களம் ஒரு வருடத்துக் குள் உரிய நட்டஈட்டை வழங்க வேண்டும்.

குறித்த நட்டஈட்டைப் பெற்றுக் கொண் டவர்கள் ஒரு வருடத்துக்குள் தமது தீர்மா னத்தை மாற்றி புதிய வீடுகள் வேண்டும் என்று கோரும்போது அதனை அமைத்துக் கொடுக்க வேண் டும் என்றும் உயர்நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது. (ச-10)

# பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட மூவர் பொலிஸாரால் கைது

மட்டக்களப்பு, ஒக்.23

அக்கரைப்பற்று பிரதேசத்தில் நீதிமன்ற பிடிவிறாந்து பிறப்பிக் கப்பட்ட மூன்று பேரை நேற்று செவ்வாய்க்கிழமை காலை அக்கரைப்பற்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த மூன்று பேரும் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்பு பட்ட நிலையில் கைதுசெய்யப் பட்டு நீதிமன்றத்தில் முன்னி லைப்படுத் தப்பட்டு பின்னர் பிணையில் வெளிவந்துள்ளனர்.

இந்தநிலையில் நீதிமன்றத்தில் முன்னிலையாகாமல் தலை மறைவாகி வந்த நிலையிலேயே நேற்று அவர்கள் கைது செய்யப்பட் டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை அக்கரைப்பற்று நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# 'நான் இந்துவாக வாழ்வேன்' ஆலயங்கள் ஊடாக பரப்புரை

## மட்டக்களப்பில் ஆரம்பம்

மட்டக்களப்பு, ஒக்.23

நாம் இந்துக்கள் அமைப்பின் மூலம் 'நான் இந்துவாக வாழ்வேன்' என்ற பரப்புரை நடவடிக்கைகள் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆலயங்கள் ஊடாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பரப்புரை நடவடிக்கைகள் கேதார கௌரி விரதம் நடைபெ றும் ஆலயங்கள் தோறும் முன் னெடுக்கப்பட்டு வருகின்றன.



சித்தாண்டி, மாவடிவேம்பு பத்திர காளியம்மன் ஆலயத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில், நாம் இந்துக் கள் அமைப்பின் நிறை வேற்றுக் குழு உறுப் பினர் பூ.பிரசாந் தன், ரி.யோகவேள், எஸ்.சுதாகரன் உட் படபலர்கலந்து கொண் டனர். (ச)



# 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு
23.10.1959

இறப்பு
23.09.2013

திருமதி
A.அல்விறெட் லீலாவதி
(பரிசாரகர்-யாழ் போதனா வைத்தியசாலை)

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக இன்று (23.10.2013) புதன்கிழமை காலை 6.00 மணிக்கு நாவாந்துறை புனித நிக்கோ லாஸ் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கும் இரங்கற் திருப்பலியில் பங்கு கொண்டு இவருக்காக பிரார்த்திக்கவும் தொடர்ந்து அவரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் பங்கு பற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மரணச் சடங்கில் பல வழிகளில் உதவி புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின் றோம்.

4ஆம் வட்டாரம்
வேலணை மேற்கு, வேலணை. (33204)(10.6.3)

இவரின் பிரிவால் துயருறும்:
கணவர்.

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி குலத்துங்கம்

### (நீதிமன்ற ஒய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர்)



கோப்பாய் வடக்கைப் பிறப்பிட மாகவும், உடுவில் கிழக்கை வசிப் பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி குலத்துங்கம் (19.10.2013) சனிக் கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லம்மா தம்பதி யரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ் சென்றவர்களான கதிரிப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மரு மகனும், காலஞ்சென்ற நீலாம்பிகை யின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான காமாட்சி, விசா லாட்சி, மீனாட்சி, புவனேஸ்வரி, விஸ்வநாதன், வேலாயுதம், விநா சித்தம்பி, காசிநாதன் மற்றும் பர மேஸ்வரி, ஞானேஸ்வரி ஆகி யோரின் சகோதரரும், ஈஸ்வரி, ஜெயஸ்ரீ, கௌரி, வசந்தன், தேவகி, பாஸ்கரன், காலஞ்சென்ற ஸ்கந்த ராசா மற்றும் றேனுகா ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், காலஞ் சென்ற குணசிங்கம் மற்றும் நித்தி யானந்தன், நந்தகுமார், அம்பிகா தேவி, மகிழ்ராஜசிங்கம், சிவரஞ் சினி ஆகியோரின் மாமனாரும், அனோஜன், அபிநா, பிருந்தா, கும ரன், வதுசன், யதீசன், மௌழிகா, மாளவிகா, சானுஜா, சானுஜன், திவ்யா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.10.2013) வியாழக் கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கே.கே.எஸ்.வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம். (33132)(12.6.3)

தகவல்:
குடும்பத்தினர்
021 320 1944

# மரண அறிவித்தல்கள்

## கனகசபை தேவராசா(தேவண்ணை)



புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் காங்கேசன் துறையை வசிப்பிடமாகவும் தற்பொழுது சங்கரத்தை வட்டுக் கோட்டையில் வசித்தவருமாகிய கனகசபை தேவராசா (தேவண்ணை) (21.10.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை- சின்னம்மா தம் பதியரின் அன்பு மகனும், காலஞ்செனறவர்களான கார்த்திகேசு -தங் கம்மா (உசன்) தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற லில்லி நேசமலரின் (தேவராசா ரீச்சர்) அன்புக் கணவரும், ஜெயக் குமாரன்(கனடா), ஜெயமதி (ஜேர்மனி), ஜெயநிதி(கனடா), ஜெய ரதி (கனடா), ஜெயசுதன் (திட்ட இணைப்பாளர்-அமெரிக்கன் இலங்கை மிஷன் திருச்சபை -யாழ்), ஜெயவதி ஆகியோரின் அன் புத் தந்தையும், கலாமதி(கனடா), மோகன் சாந்தனன் (ஜேர்மனி), நீதிராஜா(கனடா), டிரேன் ஜேசுதாசன் (கனடா), ஜலஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் மங்கையர்க்கரசி, சிவ பாக் கியம், தெய்வேந்திரம், மல்லி காதேவி, விகாரமாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெபேன், பிறேமிக்கா, றாஜேன், எஸ்தர், டிலாந்தி, ஷிராந்தி, ஜெனிலியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2013) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 11.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக நவாலி வழுக்கை யாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி வீதி, சங்கரத்தை, வட்டுக்கோட்டை.
தொ.பே.077 361 2249 (32811)(3.6.4)

தகவல்:
பிள்ளைகள்.

## திருமதி சொரூபராணி சிவக்கொழுந்து



சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சொரூப ராணி சிவக்கொழுந்து நேற்று (22.10.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந் தின் அன்பு மனைவியும், இந்திராதேவி (ஜேர் மனி), சத்தியசீலன் (லண்டன்), ரவீந்திரா தேவி, குணசீலன், வரதசீலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், அரிய நாயகம், நகுலேஸ்வரி, இராஜசுந்தரம் இந்தி ராதேவி, மாலினி ஆகியோரின் அன்பு மாமி யாரும், தாட்சாயினி, நிசங்கர் (பிரான்ஸ்), சிவ சங்கர், சங்கீரணி, துவாரகா, கபிலன், தேனுஜா, சயங்கரியா, அருண்யா, விதுசன் ஆகியோ ரின் அன்புப் பேர்த்தியும், சோபிதன், நேகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2013) புதன்கிழமை காலை9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குருந்தடிப்பிள்ளையார் கோயிலடி,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய். (33206)(12.3-6)

தகவல்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரிக்கு குடிதண்ணீர் விநியோகம் சீரற்றநிலை

## ஊழியர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை

வலி.தென்மேற்கு, ஒக்.23

பூநகரிப் பிரதேசத்தில் குடிதண்ணீர் விநியோகத்தில் அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்த ஊழியரை இடமாற்றம் செய்த தவிசாளர், சம்பந்தப்பட்டவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முன்வந்துள்ளார்.

பூநகரி பிரதேசத்தில் கடற்கரையை அண்டியுள்ள ஞானிமடம், கறுக்காய்த்தீவு, செட்டியார் குறிச்சி போன்ற கிராமங்களுக்கு வருடத்தின் 12 மாதங்களும் தொடர்ந்து குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்தப் பணியில் ஈடுபட்டு வந்த ஊழியர் குடிதண்ணீரை தகுந்த முறையில் உரிய நேரத்தில் வழங்காமல் அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்ததால் குடிதண்ணீரை நம்பியிருந்த சுமார் நானூறுக்கும் அதிகமான குடும்பங்கள் சிரமங்களுக்குள்ளாகின.

இந்த நிலை குறித்துப் பாதிக்கப் பட்ட மக்கள் தவிசாளரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததை அடுத்து குடிதண்ணீர் விநியோகத்தில் ஈடுபட்டு வந்த ஊழியரை இடமாற்றம் செய்த தவிசாளர் அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார். (வ-115)


**கார் விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள வோக்ஸ் வகன் (VW) கார் மலிவான விலையில் விற்பனைக்கு உண்டு.

(33222) (10,14) **தொடர்பு: 077 9987024**

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வீதியில் கோப்பாய் சந்திக்கு அருகில் 2 பரப்பு 2.08 குழி காணியும், 3 பரப்பு 7.19 குழி காணியும் உடன் விற்பனைக்குள்ளன. (33212) (6,3,4)

**தொடர்பு: 077 699 0696**

**உதயன்**

விளம்பரத் தொடர்புகளுக்கு

advt@uthayan.com

0215671111


# தற்காலிக வீடுகள் சேதமடைந்தன

## மழை காலத்தில் இடம்பெயர நேரிடும் என்கின்றனர் மக்கள்



இடைத்தங்கல் முகாம்களில் இருந்து மீளக்குடியமர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்ட தற்காலிக வீடுகள் 4 வருடங்கள் கடந்த நிலையில் சேதமடைந்து விட்டதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் வரப்போகும் மழை காலத்தில் தாம் நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் உள்ளிட்ட மாவட்டங்களில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு முதல் கட்டமாக பல்வேறு நிறுவனங்களும் தற்காலிக வீடுகளை வழங்கின.

இதில் அரை நிரந்தர வீடு களை அமைத்துக் கொள்ள வென அநேகமானவர்களுக்கு, மரத் தள பாடங்களும், தறப்பாளும் மட்டுமே சில நிறுவனங்களால் வழங்கப் பட்டன. இவற்றைக் கொண்டு அமைக்கப்பட்ட வீடுகள் நான்கு வருடங்கள் கடந்த நிலையில் பாவனைக்கு உதவாதவையாக மாறியுள்ளன.

மழை காலங்களில் தற்காலிக வீடுகளுக்குள் வெள்ளம் புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் தமது அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படுவதுடன், இடம் பெயர வேண்டிய நிலையே ஏற்படும் என மக்கள் கவலை வெளியிடு கின்றனர்.

நிரந்தர வீட்டுத் திட்டம் கிடைக்கும் என்று வருடக் கணக்கில் காத்திருந்தது வீணாகிவிட்டதாகவும் அந்த மக்கள் கவலை வெளியிடுகின்றனர். (ஐ-18)

# வவுனியாவில் தொடர்ச்சியாக பயிர்ச் சிகிச்சை முகாம்

வவுனியா,ஒக்.23

வவுனியா மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பயிர்ச்சிகிச்சை முகாம்கள் நடத்தப்படவுள்ள தாக மாவட்டப் பிரதி விவசாயப் பணிப்பாளர் திருமதி அ.சகிலாபானு தெரிவித்துள்ளார்.

இதன்படி மாதத்தின் முதல் செவ்வாய்க் கிழமை பாவற்குளம் கமநல சேவைத் திணைக்களத்திலும், இரண்டாவது செவ் வாய்க் கிழமை கனகராயன் குளம் கமநல சேவைத் திணைக்களத்திலும், மூன்றாவது செவ்வாய்க்கிழமை மடுக்கந்த கமநல சேவை நிலையத்திலும், முதலாவது வியாழக்கிழமை கோவிற்குளம் கமநல சேவைத் திணைக் களத்திலும், மூன்றாவது வியாழக் கிழமை ஈரப் பெரியகுளம் கமநல சேவை திணைக்களத்திலும், முதலாவது வெள்ளிக்கிழமை பம்பை மடு கமநல சேவைத் திணைக்களத்திலும், இரண்டாவது வெள்ளிக் கிழமை நெடுங்கேணி கமநல சேவை திணைக்களத்திலும், மூன்றா வது வெள்ளிக்கிழமை உளுக்குளம் கமநல சேவை திணைக்களத்திலும், நான்காவது வெள்ளிக்கிழமை ஓமந்தை கமநல சேவைத் திணைக்களத்திலும் நடத்தப்படவுள்ளன.

காலை 8.30 மணி தொடக்கம் 10.30 மணி வரை நடைபெறும் இந்த பயிர்ச் சிகிச்சை முகாமில் பயிர் களுக்கு ஏற்படும் நோய்களுக் கான சிகிச்சை முறைகள் குறித்தும், பயிர் களில் நோய்கள் வருமுன் காக்கும் நடை முறைகள் குறித்தும் விளக்கமளிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-402)

# பாலிநகர் உப தபாலகத்துக்கு நிரந்தர இடத்தில் புதிய கட்டடம்

கிளிநொச்சி,ஒக்.23

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பாலிநகர் உபதபாலகத்துக்கு 20 லட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

மாங்குளம் பிரதான தபாலகத்தின் கீழ் உள்ள மாந்தை கிழக்கு பாலிநகர் உபதபாலகத்தின் நிரந்தரக் கட்டடம் போர் காரணமாகச் சேதமடைந்த நிலையில் தற்போது இந்த புதிய கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

1999 ஆம் ஆண்டு இடம் பெற்ற போர் காரணமாக இந்த உபதபாலகம் இடம்பெயர்ந்து யோகபுரம் உபதபாலகத்தில் தற்காலிகமாக இயங்கி வந்தது. பின்னர் மீளவும் கடந்த 2001 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை சொந்தக் கட்டடத்தில் இயங்கி வந்தது. மீண்டும் போர் காரணமாக இடம்பெயர்ந்த நிலையில் 2010 ஆம் ஆண்டு சொந்த இடத்தில் தனியார் ஒருவரின் வீட்டில் பல சிரமங்களின் மத்தியில் இயங்கி வருகின்றது.

இந்த நிலையில் தற்போது சுமார் இருபது லட்சம் ரூபா செலவில் குறித்த தபாலகத்துக்கான நிரந்தரக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-6)

# 'முஸ்லிம் எயிட்' நிறுவனத்தால் 21 குடும்பங்களுக்கு உதவி

கிளிநொச்சி, ஒக்.23

முல்லைத்தீவு கேப்பாபுலவு, ஹிஜ்ராபுரம் ஆகிய பகுதிகளில் மீள்குடியமர்ந்த, கடற்றொழிலை மேற்கொள் ளும் 21 குடும்பங்களுக்கு கடற்றொழில் உபகரணங்கள் முஸ்லிம் நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள கேப்பாபுலவு மாதிரிக் கிரா மம் மற்றும் முள்ளியவளை ஹிஜ்ராபுரம் ஆகிய பகுதிக ளில் மீள்குடியமர்ந்து வசித்து வரும் 21 குடும்பங்களுக்கே 10 லட்சம் ரூபா பெறுமதியான 20 குல்லாக்களும் ஒரு தெப்பமும் வழங்கப்பட்டுள்ளன.

கேப்பாபுலவு மாதிரிக் கிராமத்தில் 18 மீனவக் குடும்பங்களுக்கு 17 குல்லாக்களும் ஒரு தெப்பமும் வழங்கப்பட்டன. இதேபோன்று ஹிஜ்ராபுரம் கிராமத்தில் மூன்று குடும் பங்களுக்குக் குல்லாக்கள் வழங்கப் பட்டுள்ளன.

முஸ்லிம் எய்ட் நிறுவனத்தினால் கடந்த வாரம் இவை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-6)


**சுஜித் என்ரபிறைஸஸ் மட்டக்களப்பு தேவை**

எமது கிளையில் கடமையாற்றக் கூடிய விற்பனைப் பிரதிநிதிகள், பணம் வசூலிப்பாளர் தேவை.

பணம் வசூலிப்பாளருக்கு சிங்களம் தெரிந்திருத்தல் வேண்டும்.

மாதாந்தம் ரூபா 30,000/- தொடக்கம் 40,000/- வரை சம்பாதிக்கலாம்

(சி/2768) (18,14) **தொடர்பு: 075 4732984**

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**





Congratulation

செல்வி சாம்பவி கணேசலிங்கம் (184)

யா/ சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை

செல்வன் தனுர்ஷன் தவராசா (165)

மன்/ சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி

எமது கலாசாலையின் சக ஆசிரியர்களான **திருமதி க.பவானந்தி, ச.தவராசா** ஆகியவர்களின் பிள்ளைகள் 2013 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்ததைப் பாராட்டுவதோடு பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

**கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்கள்**

(கணித/விஞ்ஞானப்பிரிவு)

**மணிவிழா வாழ்த்து**



யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் நலச் சேவைகள் கிளை சிரேஷ்ட உதவிப் பதிவாளரும் எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்க செயலாளருமாகிய

**யோ.ஜெயக்குமார்**

அவர்களுக்கு மணிவிழா வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்

இந்துவின் வளர்ச்சியை சிந்தையில் கொண்டு
முந்தியே நின்று முனைப்போடு பணிசெய்து
அருமருந்தன்ன ஆலோசனைகள் பல நல்கி
அன்பினால் அனைவர் அகங்களையும் வென்றீர்
அகவை அறுபதில் அகமகிழ்ந்தும்மை
இறை ஆசிகள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

**யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி. பழைய மாணவர் சங்கம்.**

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



யா/ கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2013

எமது பாடசாலையில் 173 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்து பாடசாலைச் சமூகத்துக்குப் பெருமை தேடித் தந்த

செல்வன்

**இராசலிங்கம் அஜந்தன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற செல்வி மோ.சஞ்சிகா (145), செல்வி ப.திலோத்தினி (136), செல்வன் க. திவ்வியன் (99), செல்வி வி.மதனா(84), செல்வி இ. அபிராமி (75) ஆகிய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்

(33218)(10.14) யா/கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்.

**Nothern Central Hospital**

இங்கிலாந்தில் கடமையாற்றும் இருதய சத்திர சிகிச்சை நிபுணர் Dr. ரவிப்பிள்ளை FRCS அவர்கள் எதிர்வரும் சனிக்கிழமை (26.10.2013) மு.ப 10.00 மணிக்கு இருதய சத்திர சிகிச்சைக் கிளினிக், 342, பலாலி வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள நொதன் சென்றல் வைத்தியசாலையில் நடத்தவுள்ளார்.

அவருடைய ஆலோசனை மற்றும் சிகிச்சை பெற விரும்புபவர்கள் முன்கூட்டியே பதிவு செய்ய பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**தொ.பேசி : 077 1819988** (சி/13163) (10,14) **நிர்வாகம்.**

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**





யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம்

Congratulations

த. டனுசியா (164) வி. பமிஷா (161)

3) க.கிருபானந்தி 124, 4) ஜெ.வாரணன் (123) 5) மோ.ஆதீஸ் (122), 6) க. சுலக்ஷன் (117) 7) இ. கம்ஷத்வனி (113), 8) ஸ்ரீ. சதுர்ஷன் (106)

2013 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் வழிநடத்திய ஆசிரியர்களையும் மற்றும் ஊக்கம் தந்து வழிபடுத்திய அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள் உட்பட அனைவரையும் மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்

(சி/13164)(10.14) யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார சேவைகளுக்கு ரூ.15, 000 கோடிகள்

## ஒதுக்கவுள்ளது அரசு

கொழும்பு, ஒக்.23
அடுத்த ஆண்டின் சுகாதாரச் சேவைகளை மேற்கொள்ள 15, 000 கோடி ரூபாவை ஒதுக்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.
இவ்வாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் பாலித்த மஹிபால தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கடந்த ஆண்டு சுகாதார சேவைகளுக்காக 12, 500 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது.
இந்த நிதி ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்படுவதன் மூலம் வைத்திய நிபுணர்களில் இருந்து சுகாதார சேவையின் கனிஷ்ட ஊழியர்கள் வரையிலான மனித வளங்களை அபிவி



ருத்தி செய்வதே முக்கிய குறிக்கோளாகும்.
இந்த நிதி ஒதுக்கீடுகளில் இருந்து உலகில் வளர்ச்சி கண்டுள்ள தொழில்நுட்ப சேவைகள் மற்றும் நவீன உபகரணங்களை சுகாதார சேவைப் பிரிவுகளுக்குப் பெற்றுக் கொடுக்கவும், தரத்தில் உயர்ந்த மருந்துகளை விநி

வைத்திய நிபுணர்களில் இருந்து சுகாதார சேவையின் கனிஷ்ட ஊழியர்கள் வரையிலான மனித வளங்களை அபிவிருத்தி செய்வதே முக்கிய குறிக்கோளாகும்.

யோகிப்பதற்கும் நிதி செலவிடப்படும்-என்றார். (ச-22)

# கொழும்பு அதிவேகப் பாதையை பொதுமக்கள் பார்வையிட வசதி

## 27 இல் திறந்து வைக்கிறார் ஜனாதிபதி

கொழும்பு,ஒக்.23
பொதுமக்கள், கொழும்பு கட்டுநாயக்க அதிவேக மார்க்கத்தைப் பார்வையிடுவதற்கு நேற்று செவ்வாய்க்கிழமை முதல் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது என்று பெருந்தெருக்கள் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.
எதிர்வரும் மூன்று நாள்களுக்கு பல்வேறு களியாட்ட நிகழ்வுகள் கொழும்பு கட்டுநாயக்க அதிவேக மார்க்கத்தில் இடம்பெறவுள்ளன என்று பெருந்தெருக்கள் அமைச்சின் செயலர் ரஞ்ஜித் பிரேமசிறி தெரிவித்தார்.
கட்டுநாயக்க, ஜா-எல, பேலியகொடை மற்றும் களனிப் பாலத்தை அண்மித்த நுழைவாயில்களின் ஊடாக அதிவேக மார்க்கத்துக்குள்



பிரவேசிக்க முடியும் என்று அவர் கூறினார்.
இதேவேளை கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை எதிர்வரும் 27 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்படவுள்ளது.
எதிர்வரும் 27ஆம் திகதி முதல் கட்டுநாயக்க நெடுஞ்சாலையில் இலங்கை போக்குவரத்துச் சபையின் அதி சொகுசு பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று போக்குவரத்து அமைச்சு தெரிவித் துள்ளது.
ஆரம்பத்தில் 12 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. தனியார் சொகுசு பஸ்களுக்கு இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ச)

# பாகிஸ்தானில் இருந்து சிமெந்து இறக்குமதி

கொழும்பு, ஒக்.23
இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் விற்பனைக்காக பாகிஸ்தானிலிருந்து 53 ஆயிரத்து 200 மெட்ரிக் தொன் சிமெந்தை இறக்குமதி செய்ய அரசு தீர்மானித்துள்ளது.
மெட்றிக் தொன் ஒன்றின் விலை 71.5 அமெரிக்க டொலர் வீதம் மொத்தமாக 3.8 மில்லியன் டொலர் இந்த இறக்குமதிக்காகச் செலவிடப்படவுள்ளது.
பாகிஸ்தானிலுள்ள டெவான் சிமெந்து நிறுவனம் தனது இலங்கை முகவரான கிரெசென்டோ நிறுவனத்தின் ஊடாக இந்த சிமெந்தை விநியோகிக்கும்.
இதற்கான பிரேரணையை அமைச்சர் தயாசிரித்த திசேரா அமைச்சரவைக்குச் சமர்ப்பித்துள்ளார்.
பாகிஸ்தானின் ஓ.ஜீ. கான் நிறுவனத்திலிருந்து சிமெந்தை இறக்குமதி செய்வதற்கான அமைச்சரவை அனுமதி 2013 ஆம் ஆண்டு காலாவதியாக இருக்கிறது. அதனால் புதிய அனுமதிக்கான பிரேரணை இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (ச)





ஹோமாகம, பிட்டிபன பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள நெனோ தொழில்நுட்பப் பூங்காவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திறந்து வைத்துப் பார்வையிட்டார்.

தபால் விநியோகப் பணியாளர்களின்

# வேலைப் பளுவை குறைக்கத் திட்டம்

## விநியோக முறையில் புதிய அணுகுமுறை

கொழும்பு,ஒக்.23
தபால் விநியோகப் பணியாளர்களின் வேலைப் பளுவைக் குறைக்கும் வகையில் விசேட தபால் விநியோக முறைகளைக் கையாள்வதற்கான சாத்தியக் கூற்று அறிக்கையை தபால் திணைக்களம் தயாரித்து வருகிறது என்று தபால் மா அதிபர் ரோஹன அபயரட்ண தெரிவித்தார்.
தபால் வலயங்களுக்குட்பட்ட குடியிருப்புக்கள் அதிகரித்துள்ளமையால் குறித்த வலயத்துக்குப் பொறுப்பான தபால் விநியோகப் பணியாளர்களின் வேலைப்பளு அதிகரித்துள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.
தொடர்மாடி வீடுகள் மற்றும் வீடமைப்புத் தொகுதிகள் என்பவற்றின் உருவாக்கத்தால் தபால் வலயத்துக்குட்பட்ட ட்டுக்கள் தொகை அதிகரித்துள்ளது.
இதற்கு ஈடாக தபால் விநியோ



கப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது சாத்தியமாகாது.
எனவே தபால் விநியோகத்தை இலகுபடுத்தும் வகையில் பல புதிய மாற்று வழிகளை அறிமுகப்படுத்தவுள்ளோம் என்று அவர் குறிப்பிட்டார். (ச)

# மேல், தென் மாகாணங்களுக்கான தேர்தல்கள் குறித்து விளக்கம்

கொழும்பு. ஒக்.23
மேல் மாகாண.மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை அடுத்த வருடம் நடத்த அரசு தீர்மானித்துள்ள நிலையில், தேர்தல் செயற்பாடுகள் தொடர்பாக இந்த இரு மாகாணங்களைச் சேர்ந்த அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு தெளிவுப்படுத்த தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தயாராகி வருகிறார்.
இந்த அரசியல் பிரதிநிதிகளுக்கு தெளிவுபடுத்தும் கலந்துரையாடல்கள் அடுத்த மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார். வாக்கெண்ணும் நடவடிக்கைகள் தொடர்பாக இதன் போது முக்கியமாக கலந்துரையாடப்படவுள்ளது.
கடந்த மாகாணசபைத் தேர்தலில் புத்தளம் மாவட்ட வாக்கெண்ணும் மத்திய நிலையத்தில் கைவிடப்பட்ட நிலையில், எண்ணப்பட்ட வாக்கு சீட்டுக்கள் மீட்கப்பட்டமை தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சையை அடுத்தே தேர்தல்கள் ஆணையாளர் அரசியல் கட்சி பிரதிநிதிகளுக்குத் தெளிவூட்டவுள்ளார். (ச)



# 4,000 கிராம சேவையாளர்கள் ஜனவரியில் நியமனம்

கொழும்பு, ஒக்.23
எதிர்வரும் ஜனவரி மாதத்தில் நாலாயிரம் கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்படும்.
இந்தத் தகவலை நிர்வாக சேவைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யூ.டி.ஜே.செனவிரத்ன தெரிவித்தார்.
கிராம சேவை உத்தியோகத்தர்களை தெரிவு செய்யும் பரீட்சையில் உச்சப் புள்ளிகளைப் பெற்றுள்ள 8.000 பேர் ஏற்கெனவே குறித்த



வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களின் நேர்முகத் தேர்வுகள் முடிந்த பின்னர் நியமனம் வழங்கப்படும்.

பதவிக்கான நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.
மாகாண சபைத் தேர்தல் இடம்பெற்ற வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களின் நேர்முகத் தேர்வுகள் நடைபெற்று முடிந்த பின்னர் இந்த நியமனம் வழங்கப்படும் என்று அவர் கூறினார். (ச-22)

# பத்து வயது மாணவர்களுக்கு புலமைப் பரிசில் பரீட்சையா?

## பொருத்தமாவென ஆராய்கிறது மனித உரிமைகள் ஆணைக்குழு

கொழும்பு, ஒக்.23
தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை.10 வயதுக்குரிய மாணவர்களுக்கு பொருத்தமானதா என்பது குறித்தும்,பரீட்சை நடத்தப்படும் முறைமை தொடர்பிலும் விசாரணை நடத்த மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.
இது தொடர்பில் முன்னெடுக்கப்படவுள்ள விசாரணைகளுக்காக எதிர்வரும் இரண்டு வாரங்களில் சிறுவர்கள் தொடர்பில் செயற்படும் நிபுணர்கள் அழைக்கப்பட்டு அவர்களுடன் கலந்துரையாட தீர்மானிக்கப்பட் டுள்ளது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. புலமைப் பரிசில் பரீட்சையின் ஊடாக பிள்ளைகள் பாராட்டப்படுகின்றார்கள், ஊக்கவிக்கப்படுகிறார்கள்.
எனினும், இந்த முறைமை எந்தளவுக்கு சிறந்தது? வினாத்தாள் தயாரிக்கப்படும் முறை பிள்ளைகளுக்கு பொருத்தமானதா? புள்ளியிடும் முறை சரியானதா? என்பது தொடர்பில் விரிவாக ஆராயப்படவுள்ளது என்று மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாயுக்கசிவால் மூச்சுத்திணறல் 72 பேர் வைத்தியசாலையில்

## பிலியந்தலை தொழிற்சாலைக்கு 'சீல்' வைப்பு

கொழும்பு, ஒக்.23

பிலியந்தலை, படகெத்தர பகுதியில் இடம்பெற்ற எரிவாயுக்கசிவால் 72 இற்கும் அதிகமானோர் வைத்திய சாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இரசாயனத் தொழிற்சாலையில் நேற்று அதிகாலை 2.45 மணியளவில் எரிவாயுக்கசிவு இடம்பெற்றுள்ளது என்றும் இதன்போது அங்கு பணியாற்றிக் கொண்டிருந்தவர்களுக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டு சுவாசிப்பதற்கு சிரமப்பட்ட நிலையில் அவர்கள் களுபோவில மற்றும் பிலியந்தலாவை வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

களுபோவில வைத்தியசாலையில் 22 பேரும், பிலியந்தலை வைத்தியசாலையில் 42 பேரும் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். அத்தோடு, 3 பேர் சிகிச்சை முடிந்து நேற்று வைத்திய சாலையிலிருந்து வெளியேறியுள்ளனர் எனவும் தெரிய வந்துள்ளது.

குறித்த விஷவாயுகசிவு நிலைமை தற்போது கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது என்று தெஹிவளை, கல்கிஸை மாநகரசபை தீயணைப்பு பிரிவின் பொறுப்பாளர் ரொஷான் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குறித்த தொழிற்சாலையின் அனுமதிப்பத்திரம் மத்திய சுற்றாடல் அதிகார சபையால் தற்காலிக மாக இரத்துச் செய்யப்பட்டுள்ளது. அதனால் குறித்த தொழிற்சாலை யின் அனைத்து நடவடிக்கை களும் நிறுத்தி வைக்கப்பட் டுள்ளன. வாயுக்கசிவு தொடர்பில் இது வரை மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணைகளின்படியே அனுமதிப்பத்திரம் தற்காலி கமாக இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தமிழ்

ஐயனார் கோயிலடிப் பகுதியில் அமைந்துள்ள புதுக்குடியேற்றத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

நாவற்குழியில், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் காணியில் குடியேறியுள்ள சிங்கள மக்கள் அங்கு நிரந்தர வீடுகளை அமைத்துள்ளனர். இந்தக் குடியேற்றத்தில் 3 குடும்பங்கள் மட்டுமே நிரந்தரமாகத் தங்கியுள்ளன.

இந்த நிலையில் சிங்கள மக்கள் தங்கியுள்ள காணிகளை அளவீடு செய்து அவர்களுக்கு பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் கடந்த ஒரு வாரகாலமாகச் சீருடையினரின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்டன.

3 குடும்பங்கள் அங்கு நிரந்தரமாகத் தங்கியுள்ள நிலையில் 136 குடும்பங்களுக்குக் காணிகள் பங்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்த புதுக்குடியேற்றத் திட்ட தமிழ் மக்கள், கடந்த 4 வருடங்களாக தங்கியுள்ள தமக்கு இன்னமும் காணி அளவீடு செய்து தரப்பட வில்லையென்று குற்றஞ்சாட்டியுள்ளனர்.

"எங்களைக் காணிகளைத் துப்பரவு செய்யுமாறும் சிங்கள மக்களுக்குக் காணிகள் அளந்து முடிந்ததும் எங்களுக்கு அளந்து தரப்படும் என்றும் இராணுவத்தினர் தெரிவித்திருந்தனர். ஆனால் சிங்கள மக்களின் காணிகள் அளந்து வழங்கப்பட்டு விட்டன. எங்கள் காணிகளை அளப்பதற்கு யாரும் வரவில்லை. இதனால் கடந்த ஒரு வாரமாக நாங்கள் தொழிலுக்குச் செல்லாமல் காத்திருக்கின்றோம்" என்று கூறினார்கள் அந்த மக்கள்.

இதே வேளை சிங்கள மக்கள் பிடித்துள்ள காணிகளுக்கு அருகில் தங்கியுள்ள 98 தமிழ்க் குடும்பங்களையும் வெளியேற்றுவதற்கு இராணுவம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக மக்கள் தெரிவித்தனர்.

" எங்களுக்கான காணி உறுதிகள் இன்னமும் கிடைக்காமையால் எதுவித உதவிகளும் இல்லாமல் அந்தரித்த வாழ்வு வாழ்கின்றோம். தற்போது மழை தொடங்கிவிட்டது. ஓலைக் கொட்டில்களின் ஒழுக்கினால் நாம் வீட்டில் இருக்க முடியாமல் சிரமப்படுகிறோம்.

இரவில் பாம்புத்தொல்லை என்பதால் மின்சாரத்துக்கு விண்ணப்பித்தோம் காணி உறுதி இல்லாததால் எங்களுக்கு மின்சாரம் வழங்க மறுக்கின்றனர். இதனால் சட்ட விரோத மின்சாரம் எடுக்க வேண்டி ஏற்படுகிறது. இவ்வாறு செய்தால் நாங்கள் கைது செய்யப்படுகிறோம். சிங்கள மக்கள் சட்டவிரோத மின்சாரம் பெறுவதை யாருமே கண்டு கொள்வதில்லை" என்று தமிழ் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.'

" நாங்கள் எங்கள் சொந்த மண்ணில் அடிப்படை வசதிகளின்றி வாழ, சிங்களவர்கள் எங்கள் மண்ணில் குடியேறி எல்லா வசதிகளையும் பெற்றுக் கொண்டுள்ளனர். ஏன் இந்தப் பாகுபாடு காட்டப்படுகின்றது" என்றும் அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இதேவேளை இந்த விடயங்கள் தொடர்பில் தென்மராட்சி பிரதேச செயலருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, மக்களுக்குக் காணி உறுதி வழங்கப்படாமல் எங்களால் உதவிப் பொருள்கள் வழங்க முடியாது என்று தெரிவித்தார். (த-5)

### பாடசாலை

கடத்தப்பட்டு பின்னர் மீட்கப்பட்டுள்ளான்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:

குறித்த மாணவன் வீட்டில் இருந்து பாடசாலைக்கு சென்ற போது இனந்தெரியாதவர்கள் இடைமறித்து வாகனத்தில் ஏற்றிச் சென்றுள்ளனர். " வாகனத்துக்குள் இன்னுமொரு மாணவன் வெள்ளைச் சீருடையுடன் இருந்தான். உள்ளே இருந்தவர்கள் அந்த மாணவனின் ரையைக் கழற்றி எனது வாயையும் எனது ரையால் கை, கால்களையும் கட்டினர். பின்னர் ஒரு புகைப்படத்தை எடுத்து என்னுடன் ஒப்பிட்டுப் பார்த்து விட்டு எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு அருகில் உள்ள பகுதியில் பற்றைக்குள் என்னை வீசி விட்டுச் சென்றுவிட்டனர். பின்னர் அந்தப் பகுதிக்கு குழை வெட்ட வந்த ஒருவர் என்னைக் கண்டு மீட்டார்" எனப் பாதிக்கப்பட்ட சிறுவன் தெரிவித்துள்ளான்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று தெரிய வருகிறது.

இந்தச் சம்பவத்தால் நேற்று வடமராட்சிப் பகுதியில் பெரும் பதற்றநிலை ஏற்பட்டது.

"இரு மாணவர்கள் கடத்தப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்ற போதும், ஒரு மாணவன் மாத்திரமே மீட்கப்பட்டுள்ளான். எனினும் தம்முடைய பிள்ளையை காணவில்லை என்று பெற்றோர் எவரும் இதுவரை எம்மிடம் வந்து முறையிடவில்லை. அதனால் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் மற்றைய மாணவன் யார் என்பது குறித்து தெரியவரவில்லை" என்று உடுப்பிட்டி அ.மி. கல்லூரி அதிபர் 'உதயனு'க்கு நேற்றிரவு தெரிவித்தார். (ஐ-4-35)

### வடக்கின்

யில் குறிப்பிடப்பட்டுள்ளதா? இந்த விடயங்கள் தொடர்பில் எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று ஊடகவியலாளர்கள் பாக்கியசோதி சரவணமுத்துவிடம் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த அவர்,

வடக்கு மாகாண சபைத் தேர்தலின் பின்பாக, வடக்கில் இடம்பெற்று வருகின்ற வன்முறைச் சம்வங்கள் மற்றும் அதனோடு இணைந்த சம்பவங்கள் தொடர்பில் பல தரப்பட்டவர்களிடமிருந்தும் அறிக்கைகள் எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவற்றைத் தொகுத்து எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது - என்றார். (த-5)

### கூட்டமைப்பின்

றப்பட்டுள்ளது.

சபையின் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் சபையின் இந்த மாதத்துக்குரிய கூட்டம் நேற்று மு.ப. 10 மணியளவில் ஆரம்பமான போது சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் ஞா.கிஷோர் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்தார். இன்னொரு ஆளுங்கட்சி உறுப்பினரான அ.பாலமயூரன் வழிமொழிந்தார்.

தீர்மானத்தை முன்வைத்து கிஷோர் உரையாற்றும் போது வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்கள அனைவரும் பெருவாரியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே வாக்களித்து அமோக வெற்றி பெறச் செய்துள்ளனர். அபிவிருத்தி மாயைக்காட்டி அடாவடி மூலம் மக்களை ஏமாற்ற முயற்சித் தவர்களை மக்கள் நிராகரித்துள்ளனர். இதைத்தாங்கிக்கொள்ள முடியாதவர்கள் எமது ஆதரவாளர்களுக்கு பல வழிகளிலும் இம்சை கொடுத்து வருகின்றனர். பல இடங்களிலும் தாக்கி வருகின்றனர். எமது மாகாணசபை உறுப்பினரான பா.கஜதீபனுடன் தீவுப் பகுதி மக்களைச் சந்தித்து நன்றி கூறச்சென்ற போது அவரையும் என்னையும் கற்கள் வீசித்தாக்கினார்கள். நாங்கள் மயிரிழையில் தப்பினோம். அதன் பின்பும் பல ஆதரவாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர். ஆதரவாளர் ஒருவர்ஊர்காவற்றுறையில் கடுமையாகத்தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தேர்தலுக்குப் பின்னான எமது ஆதரவாளர்கள் மீதான இவ்வாறானதாக்குதல்களை வன்மையாகக் கண்டிப்பதுடன், இவ்வாறான கோழைத்தனமான தாக்குதல்கள் மூலம் மக்களின் தேசிய உணர்வை அடாவடியாக அடக்க முடியாது எனவும் கூறிக் கொள்கிறோம் - என்றார்.

பின்னர் பிரேரணை சபையினரின் ஏகமனதான ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது. (5)

### புதிய

காலை 6 மணி முதல் காலை 7.26 மணி வரையிலான சுப நேரத்தில் கட்டடத்தில் பால் காய்ச்சப்பட்டது.

கைதடிப் பிள்ளையார் கோயிலில் இடம்பெற்ற விசேட பூசையைத் தொடர்ந்து சுவாமிப் படங்கள், கும்பம் என்பன அங்கிருந்து எடுத்துவரப்பட்டு வடக்கு மாகாணசபை அலுவலகத்தில் வைக்கப்பட்டன.

இதன் பின்னர் வடமாகாண சபை அலுவலகத்தில் விசேட பூசைகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வுகளில் வடமாகாண முதலமைச்சர், மாகாண சபை உறுப்பினர் சி.வி.கே.சிவஞானம், வடக்கு மாகாணப் பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், திணைக்களத் தலைவர்கள், அமைச்சின் செயலாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (த-5)

### பொதுநலவாயத்தில்

டுக்கு வந்தால், அவருடைய வருகை, அவர் அவர்கள் மத்தியில் கூறுகின்ற கருத்து, இலங்கையினுடைய நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்று சொல்லப்படுவது பரவலான - பொதுவான இலங்கைத் தமிழர்களின் கருத்தாக நான் கருதவில்லை.

மேலும், இந்தியா செய்யும் உதவிகள் ஈழத்தமிழர்களை முழுமையாகச் சென்றடையவில்லை. இந்தியாவால் 13 ஆவது திருத்தத்தில் மாற்றம் செய்யும் முயற்சி தடுக்கப்பட்டுள்ளது. எனினும் 13 ஆவது திருத்த விவகாரத்தை இலங்கை முற்றிலுமாகக் கைவிடவில்லை. இலங்கை தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க இந்தியா தொடர்ந்து உதவ வேண்டும் -என்றார்.

ஈழத்தமிழர்களுக்காக இலங்கை அரசு ஆக்கப்பூர்வமாக எதையும் செய்யவில்லை எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (த-5)

### மாகாண

கட்டடத்தில், சபை அமர்வுகளை நடத்தும் ஒரு பகுதியின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு நேற்றையதினம் சம்பிரதாய நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்தக் கட்டடத் தொகுதியின் திறப்பு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடக்கு மாகாணத்தின் இரு மத்திய அரசின் அமைச்சர்களினதும் ஆளுநர்களினதும் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. எனினும் பின்னர் வடக்கு மாகாணசபையினால் அவை சீர்செய்யப்பட்டு வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநரால் கட்டடம் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து வடக்கு மாகாணசபையின் கன்னியமர்வு இடம்பெறவுள்ளது. இதனைச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய வடமாகாண ஆளுநரே ஆரம்பித்து வைக்க வேண்டும். அதனடிப்படையில் ஆளுநரின் உரையுடன் இந்த அமர்வு ஆரம்பித்து வைக்கப்படும். அத்துடன் வடக்கு மாகாணசபையின் தவிசாளர் மற்றும் பிரதித் தவிசாளர் ஆகியோர் சபையினால் தேர்வு செய்யப்படுவர். (த-5)

### சிவில்

மத்திய நிலையத்தின் நிறைவேற்று அதிகாரி பாக்கியசோதி சரவணமுத்து அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் பரப்புரைகளின் போது தேர்தல் தொடர்பான வன்முறைகளில் கடுமையான 27 சம்பவங்களையும், 57 சிறு சம்பவங்களையும், தேர்தல் தினத்துன்று கடுமையான 34 சம்பவங்களையும் 13 சிறு சம்பவங்களையும் பதிவு செய்துள்ளோம்.

#### இராணுவமயமாக்கல்

இராணுவ மயப்படுத்தல் வடக்கு மாகாணத்தின் சிவில், அரசியல் மற்றும் சமூக, பொருளாதார உரிமைகளை அனுபவிப்பதில் முக்கியமான தடையாக இருப்பதுடன், தொடர்ந்தும் அது இருக்கப்போகின்றது.

சிவில் பாதுகாப்புப் படை உட்பட பாதுகாப்புப் படை உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்படும் அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள், ஆளும் கட்சி வேட்பாளர்கள் நான்கு பேருக்குச் சார்பாக இராணுவம் செயற்பட்டமை ஆகியவற்றை நாமும் ஏனைய கண்காணிப்பாளர்களும் பதிவு செய்துள்ளோம்.

பொது மக்களின் நாளாந்த வாழ்க்கையில் இராணுவ மயப்படுத்தலின் அளவு அவர்கள் ஆற்றுகின்ற அரசியல் ரீதியான நோக்கங்களுக்கு, தேர்தல் பரப்புரைகள் மற்றும் வாக்களித்தல்கள் நடைபெற்ற சூழமைவில், ஊடுருவி நிலை நாட்டப்பட்டிருக்கின்றமையை வெளிப்படுத்தியது.

இராணுவ மயப்படுத்தல் தேர்தல் செயன்முறைகளுக்குத் தெளிவாகவே குந்தகம் ஏற்படுத்தியது. எனினும் மொத்த வாக்களிப்பு வீதமும் அதன் பெறுபேறும் இராணுவ மயமாக்கலுக்கு பணிய மறுத்தமையையே எடுத்துக்காட்டியது.

போருக்குப் பின்னரான நல்லிணக்கச் செயன்முறையில் முக்கிய அம்சமாகவும் முரண்பாட்டுக்கான மூலங்கள் நீடித்தல் கூடாது அல்லது மீள் உருவாக்கப்படலாகாது என்று வரையறுக்கப்பட்டவாறும் வடக்கிலிருந்து இராணுவம் அகற்றப்படவேண்டும் என்று அரசை வேண்டிக் கொள்கின்றோம்.

#### 18 ஆவது திருத்தம் நீக்கப்படவேண்டும்

தேர்தலின் போது அரச வளங்கள் அப்பட்டமாகத் துஷ்பிரயோகம் செய்யப்பட்டன. இது சட்டத்தின் மீதான மற்றொரு அதிர்ச்சி தரும் மீறல்.

இதற்குக் காரணம் 17 ஆவது திருத்தம் நீக்கப்பட்டு 18 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டதாகும். எனவே பொலிஸ் பொதுச் சேவை மற்றும் தேர்தல் ஆணைக்குழுக்கள் சுயாதீனமாகச் செயற்பட, 17 ஆவது திருத்தத்தை மீள நிலைநாட்ட வேண்டும் என்று அரசை நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

#### ஆளுநரின் தலையீடு

தேர்தல் பரப்புரைகளின் போது வடக்கு மாகாண ஆளுநர் பங்கெடுத்தமை தொடர்பில் கரிசனை கொள்கின்றோம். இது ஆளுநரின் வகிபாகம் மற்றும் அதிகாரங்கள் குறித்த ஒரு சர்ச்சையையும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு மீதும் பரந்த சூழமைவில் வடக்கு மாகாணத்தின் அதிகாரப் பகிர்வுகள் மீதும் தாக்கங்களை ஏற்படுத்துவதாக இருந்தது.

அரச அதிகாரிகள் சுயாதீனத்துடனும் பக்கச் சார்பில்லாமலும், பயமோ அல்லது விருப்புகளோ இல்லாமலும் நாட்டின் அரசயலமைப்பை நிலை நாட்டுவதற்கான ஒருபற்றுதியைச் சொல்லிலும் செயலிலும் வெளிக்காட்ட வேண்டும்.

இவ்வாறு செய்வதிலிருந்து தவறுபவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகளையும் முறையான செயன்முறைகளின் பின்னர் பதவியிலிருந்து அகற்றப்படுவதையும் ஏற்படுத்துவதாக அமைதல் வேண்டும்.

#### ஊடகங்கள் மீதான கட்டுப்பாடு

சில செய்தித் தாள்களுக்குத் தடையேற்படுத்தியமை மற்றும் தவறான தகவல்களைப் பிரசுரித்தமை, ஊடகங்கள் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் ஆகியன தொடர்பிலும் கரிசனை கொள்கின்றோம்.

தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட பின்னர், பரப்புரைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாக 'உதயன்' பத்திரிகையின் கிளிநொச்சி விநியோக நிலையம் அழிக்கப்பட்டதுடன், யாழ்ப்பாணத்தில் அதன் அச்சகமும் தாக்கப்பட்டது. கருத்துப் பரிமாற்றம் நிலை நிறுத்தப்படவேண்டும் மீளவும் 17 ஆவது திருத்தத்தை கொண்டுவர வலியுறுத்துகிறோம் - என்றார். (த-5)

### பாதுகாப்புக்கு

ஒதுக்குவதென அரசு மதிப்பிட்டுள்ளது. இது 2013 ஆம் ஆண்டுக்கு பாதுகாப்புக்கென ஒதுக்கப்பட்ட தொகையை விடவும் 2,674 கோடியே 36 இலட்சத்து 76 ஆயிரம் ரூபா அதிக மாகும்.

இது தொடர்பிலான நிதி ஒதுக்கீட்டு சட்டவரைவு சபை முதல்வரும் அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பித்தார். 2014ஆம் நிதியாண்டுக்கான அரச செலவினங்களுக்காக 1,54,225 கோடியே 25 இலட்சத்து 18ஆயிரம் ரூபாவை ஒதுக்குவதென அரசு மதிப்பிட்டுள்ளது. 2013ஆம் ஆண்டை விட இம்முறை 15,525 கோடியே 25 இலட்சத்து 18 ஆயிரம் ரூபா அதிகமாக ஒதுக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2013 ஆம் நிதியாண்டுக்காக 1,38,700 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

வழமையாக வரவு செலவுத் திட்டத்தில் அதிக நிதி ஒதுக்கப்படும் பாதுகாப்பு அமைச்சுக்கு 2014 ஆண்டுக் காக 25,390 கோடியே 29 இலட்சத்து 10 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை 2013 ஆம் ஆண்டை விட 3,559 கோடியே 96 இலட்சத்து 24 ஆயிரம் ரூபா குறைவாக இருக்கின்றது. பாதுகாப்பு அமைச்சினுள் பொலிஸ் துறை இம்முறை உள்வாங்கப்படாமையே ஒதுக் கீட்டு குறைவுக்குக் காரணமாகும்.

எனினும் சட்டம் மற்றும் ஒழுங்குகள் அமைச்சுக்குள் பொலிஸ் துறை உள்வாங்கப்பட்டு அதற்காக 5,234 கோடியே 33 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சுக்கும் சட்டம் ஒழுங்குகள் அமைச்சுக்கும் ஒதுக்கப்பட்ட தொகையை மொத்தமாகக் கூட்டினால் 30,624 கோடியே 62 இலட்சத்து 10 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது 2013 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட பாதுகாப்புக்கான தொகையை விடவும் 2,674 கோடியே 36 இலட்சத்து 76 ஆயிரம் ரூபா அதிகமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்வன்மை தொழில்நுட்ப அலுவலர்களாக ஆறு பேர்


பவானந்தன்


சசிகுமார்


சுரேந்தினி


விஜிதரன்



புருனு கார்த்திக்


எம்.அரபாத்

யாழ்ப்பாணம் ,ஒக் .23
சர்வதேச மெய்வன்மை சம்மேளனத்தினல் நடத்தப்பட்ட தொழில்நுட்ப அலுவலருக்கான தரம் 1 பரீட்சையில் வடக்கு கிழக்கைச்சேர்ந்த 6 பேர் சித்தி அடைந்துள்ளனர். அவர்களின் பெயர் விவரம் வருமாறு.

யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி அலகின் விரிவுரையாளர் சுரேந்தினி, கிண்ணியா மத்திய கல்லூரி உடற்கல்வி ஆசிரியர் எம்.அரபாத்,வவுனியா மாவட்ட மெய்வன்மை பயிற்றுநர் கதிவேல் விஜிதரன், நெல்லியடி இந்துக்கல்லூரி உடற்கல்வி ஆசிரியா ஆனந்தராசா பவானந்தன், முல்லைத்தீவு இரணைப்பாலை றோமன் கத்தோலிக்க மகாவித்தியால உடற்கல்வி ஆசிரியா கனகரெட்ணம் சசிகுமார் ,இலங்கை வங்கி அலுவலர் தெய்வேந்திரன் புருனு கார்த்திக். (த-23)

# ஹற்றிக் சாதனை படைத்தார் யூட்



மாங்குளம், ஒக்.23
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக்கழகம் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் கடந்த 19ஆம் திகதி நடைபெற்றது.

இதில் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது சென்.மேரிஸ் அணி. இதன் வெற்றிக்கு காரணமாக இருந்த யூட் ஆட்டநாயகன் விருது, தொடர் ஆட்ட நாயகன் விருது, அதிக கோல்களைப் போட்ட வீரனுக்கான விருதுகள் என ஹற்றிக் விருதுகளைக் கைப்பற்றினார். (த-422)



# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.23
முன்னாள் மாணவ முதல்வர் பொன். விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயது ஆண் பெண் இருபாலருக் குமான இந்தப் போட்டித் தொடரின், இன்று புதன்கிழமை யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டதிடலில் இடம்பெறவுள்ள அரையிறுதி ஆட்டங்களில் இதில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:
பிற்பகல் 3மணி
யாழ். இந்துக் கல்லூரி அணி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரிஅணி.
மாலை 4மணி
யாழ்.மத்தியகல்லூரிஅணி எதிர் சென்.பற்றிஸ் கல்லூரி அணி.
(த-23)

◆ ◆ ◆

யாழ்ப்பாணம், ஒக்.23
மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்டத்திலிருந்து அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் 7 பேர் பங்குகொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ளஅணிகளின் விவரம்வருமாறு.
மாலை 3.30மணி
ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் எதிர் கரவெட்டி கலட்டி விளையாட்டுக்கழகம்.
மாலை4.30மணி
வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் பொலிகை பாரதி விளையாட்டுக்கழகம். (த-23)

◆ ◆ ◆

யாழ்ப்பாணம்,ஒக்.23
யாழ்.உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங் களுக்கு இடையில்நடத்தும்'பி'பிரிவுஅணிகளுக்கான ஆட்டங் களில் இன்று புதன்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு.
மாலை 3.30மணி
குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகம் எதிர் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக்கழகம்.
மாலை 4.30மணி வளர்மதி விளையாட்டுக்கழகம் எதிர் பாரதி விளையாட்டுக் கழகம். (த-23)



வடமாகாண ரீதியில் நடத்தப்பட்ட டி.எஸ்.ஐ. வெற்றிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மாகாண சம்பியனான வசாவிளான் மத்திய மகாவித்தியாலய 16 வயதுப் பெண்கள் அணியினர். (த-400)

# வலைப்பாடு ஜெகமீட்பர் அபாரம் பணிந்தது ஊரெழு றோயல் அணி

யாழ்ப்பாணம், ஒக்.23
கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கிளிநொச்சி உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை உருத்திரபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

முதற்பாதி ஆட்டம் ஆரம்பமானபோது இரண்டு அணியினரும் தமது அணிக்கான கோல்களை பெற வேண்டும் என்ற எண்ணத்தோடு களம் இறங்கியதால் ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது இரண்டு அணியினரும் கோல்களை பெற வேண்டும் என்று எதிர் அணியினருடைய கோல் பரப்பினை ஆக்கிரமித்த வண்ணம் இருத்தனர்.

இதன் போது இரு அணியினருக்கும் கோல் அடிப்பதற்கான சந்தர்பங்கள் கிடைத்த போதும் அதனைத் தவறவிட்டனர். ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக அணி வீரன் தனக்கு கிடைத்த கோல் பெறும் சந்தர்ப்பத்தினைச் சரியான முறையில் பயன்படுத்தி முதலாவது கோலை அடித்தார். ஆட்டம் இடை வேளைக் காக நிறுத்தப்பட்ட போது ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமான போது எப்படியாவது தனது அணிக்கான கோல் பெற வேண்டும் என்று ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியினர் பல முயற்சிகளை மேற்கொண்டு எதிர் அணியின் கோல்பரப்பை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர்.எனினும் ஜெகமீட்பர் அணியின் தடுப்பாட்டத்தினால் அது தடுக்கப்பட்டது. ஆட்டமுடிவில் ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. (த-23)

# உடுவில் கோட்டத்தின் உதைபந்தாட்டம் ஆரம்பம்



வலி.வடக்கு, ஒக்.23
உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்ட போட்டிகள் இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணி முதல் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளன.

இன்றைய போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-
14 வயதுப் பிரிவு
ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் எதிர் சுன்னாகம் மயிலணி சைவ மகாஜன வித்தியாலயம்.
ஏழாலை மகா வித்தியாலயம் எதிர் ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம்.
16 வயதுப்பிரிவு
சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் சுன்னாகம் மயிலணி சைவ மகாஜன வித்தியாலயம்.
ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் எதிர் ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம். (த-86)

# 'வர்ண இரவு' நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஒக்.23
யாழ். பல்கலைக்கழகத்தின் 2012 ஆம் ஆண்டுக்கான 'வர்ண இரவு' நிகழ்வுகள் இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரெட்ணம் கலந்து கொள்ளவுள்ளார். (த-23)

# 3ஆம் இடத்தை பெற்றது மணற்காடு அன்ரனிஸ்

மாங்குளம், ஒக்.23
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக் கழகம் தமது 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டு வந்த உதைபந்தாட்டத் தொடரில் கடந்த 14 ஆம் திகதி நடைபெற்ற 3ஆம் இடத்துக்கான ஆட்டத்தில் மணற்காடு சென்.அன்ரனீஸ் வெற்றி பெற்றுள்ளது.

மூன்றாம் இடத்துக்கான போட்டியில் மணற்காடு சென்.அன்ரனீஸ் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதியது.

ஆட்டம் தொடங்கி முற்பாதியாட்டத்தில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்களல்ல என்பதனை நிரூபித்துக்கொண்டிருந்தனர். கலைமதி அணி வீரர்களின் முன்னேற்றத்தை சென்.அன்ரனீஸ் அணியின் பின்கள வீரர்கள் முறியடித்துக் கொண்டிருந்தபோது 14 ஆவது நிமிடத்தில் சென். அன்ரனீஸ் வீரர் றெஜினோல்ட் கோலைப் போட்டு [illegible] வேகத்தை துரிதப்படுத்திய கலைமதி அணியின் வாய்ப்புக்கள் தோல்வியில் முடிய 1:0 என்ற கோல் கணக்கில் முற்பாதியாட்டத்தில் சென். அன்ரனீஸ் அணி முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின்னர் பல வியூகங்களை அமைத்து இறங்கினர் கலைமதி அணியினர். இதனால் 40 ஆவது நிமிடத்தில் பின்கள வீரர்களையும் தாண்டி கலைமதி அணிவீரர் பாணு கோலைப் போட்டு கோல்களின் எண்ணிக்கையைச் சமப்படுத்தினார்.

இதனால் ஆட்டம் விறுவிறுப்பின் உச்சக் கட்டத்தை எட்டியது. அதன்பின்னர் சென்.




அன்ரனீஸ் அணிவீரர் 51 ஆவது நிமிடத்தில் பிரகாஷ் கோலைப் போட்டு முன்னிலைப்படுத்தினார்.

அதன்பின்னர் கலைமதி அணியினர் போராடிய போதும் கோலைப் பெற முடியாமல் போக இறுதியில் 2:1 என்ற கோல் கணக்கில் சென்.அன்ரனீஸ் அணி 3 ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (த-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரஹம் போர்டின் பணி தொடரப்படவேண்டும்



இலங்கை தேசிய அணியின் புதிய பயிற்றுவிப்பாளரை இலங்கை கிரிக்கெட் சபை தேடிக் கொண்டுள்ள நிலையில், புதிய பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்படவுள்ளவர் தற்போதைய பயிற்றுவிப்பாள ரான கிரஹம் போர்டின் பணியைத் தொடர்ந்தும் செய்ய வேண்டும் என இலங்கை அணியின் முன்னாள் வீரரும், தற்போதைய பிரதம தேர்வாளருமான சனத் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

2012ஆம் ஆண்டு ஜனவரியில் இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்ட கிரஹம் போர்ட் இற்கு இரண்டு வருடங்களுக்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. இதன்படி, அவரது ஒப்பந்தம் அடுத்த வருடம் ஜனவரியோடு நிறைவடையவுள்ளது. இந்நிலையில், தனது ஒப்பந்தத்தை நீடித்துக்கொள்ள விரும்பவில்லை என கிரஹம் போர்ட் இலங்கை கிரிக்கெட் சபைக்கு அறிவித்திருந்தார். தனது குடும்பத்தினருக்காக இந்த முடிவை எடுத்துள்ளதாக அவர் அறிவித்திருந்தார்.

இதனையடுத்து புதிய பயிற்றுவிப்பாளரை இலங்கை கிரிக்கெட் சபை தேடி வருவதுடன், 11 விண்ணப்பங்களைப் பெற்றிருந்தது. ஆனால் மேலதிக விண்ணப்பங்களை ஆராய்வதற்காக ரஞ்சித் பெர்ணான்டோ தலைமையில் செயற்குழுவொன்று அமைக்கப்பட்டதோடு, அக்குழுவில் சனத் ஜெயசூரியவும் காணப்படுகிறார்.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள சனத் ஜெயசூரிய, புதிய பயிற்றுவிப்பாளர் பதவியேற்றவுடன் அனைத்தையும் புதிதாக ஆரம்பிக்காமல், தற்போதைய பயிற்றுவிப்பாளர் கிரஹம் போர்ட் விட்டுச் சென்ற இடத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் கலாசாரத்தைப் புரிந்து கொள்ளக்கூடிய பயிற்றுவிப்பாளரொருவரையே தேடுவதாகக் குறிப்பிட்ட சனத் ஜெயசூரிய, அதன் காரணமாக உள்ளூர்ப் பயிற்றுவிப்பாளர்கள் குறித்தும் ஆராய்ந்து வருவதாகக் குறிப்பிட்டார். (த)




# ஆஷஸ் டெஸ்ட் தொடரை இங்கிலாந்தே வெல்லும்



ஆஷஸ் டெஸ்ட் தொடரில் ஆஸ்திரேலிய அணியை 5-0 என்ற ஆட்டக்கணக்கில் இங்கிலாந்து அணியால் வெற்றி கொள்ள முடியும்எனஇயன்பொத்தம் தெரிவித்துள்ளார்.

குளிர்கால ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடர் அடுத்த மாதம் பிறிஸ்பேனில் ஆரம்பமாகவுள்ள நிலையில், அவர் இதனைத் தெரிவித்துள் ளார். இவ்வாண்டு நடைபெற்ற கோடைகால ஆஷஸ் தொடரை 3:0 என்ற ஆட்டக்கணக்கில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றிருந்தது.

எனினும் பல வேகபந்து வீச்சாளர்கள் உபாதைக்கு உள்ளாகியுள்ளதால் இங்கிலாந்து அணி தற்போது பலவீனம டைந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த)

# முதல் 10 இடங்களுக்குள் முன்னேறினார் சானியா

மகளிர் ரென்னிஸ் போட்டியின் இரட்டையர் பிரிவு தரவரிசைப் பட்டியலில் முதல் 10 இடங்களுக்குள் மீண்டும் முன்னேறினார் இந்தியாவின் சானியா மிர்சா.

11ஆம் இடத்தில் இருந்த சானியா, 2 இடங்கள் முன்னேறி 9ஆம் இடத்தைப் பிடித்தார். கடந்த திங்கட்கிழமை வெளியிடப்பட்ட மகளிர் ரென்னிஸ் தரவரிசைப் பட்டியலில் இத்தகவல் தெரிய வந்தது.

கடந்த வாரத்தில் அவர் எந்த போட்டியிலும் விளையாட வில்லை. இருப்பினும், முதல் 10 இடங்களுக்குள் இருந்த வீராங்கனைகள் புள்ளிகளை இழந்ததால் சானியா 9ஆம் இடத்துக்கு முன்னேறினார்.

இம்மாதத்தின் தொடக்கத்தில் நடைபெற்ற சீன ஓபன், ஜப்பானில் நடைபெற்ற பான் பசிபிக் ஓபன் ஆகிய சம்பியன் பட்டங்களைச் சானியா கைப்பற்றினார்.

தற்போது, சானியாவுடன் இணைந்து விளையாடி வரும் சிம்பாப்வேயின் காரா பிளாக்கும் தரவரிசையில் முன்னேற்றம் கண்டார். அவர், 13ஆவது இடத்தில் உள்ளார்.

இத்தாலியின் சானா எர்ரானி மற்றும் ராபர்டா வின்சி ஆகியோர் முதலிடத்தில் உள்ளனர். (த)


# ஐ.பி.எல் போன்று உதைபந்தாட்டமும்

இந்தியாவில் பிரபலமான ஐ.பி.எல் (இந்தியன் பிறீமியர் லீக்), இந்தியன் பற்மின்ரன் லீக் (ஞாயஸி) போல இந்தியன் உதைபந்தாட்ட லீக் தொடர் அடுத்த ஆண்டு தொடங்க உள்ளது.

இப்போட்டியை ரிலையன்ஸ் மற்றும் ஐ.எம்.ஜி குழுமத்தார் இணைந்து ஆரம்பிக்க உள்ளனர். இது இந்தியாவில் முதன் முதலாக ஆரம்பிக்கப்படும் உதைபந்தாட்டப் போட்டி ஆகும். இதில் உலகளாவிய மற்றும் இந்திய உதைபந்தாட்ட வீரர்கள் விளையாட உள்ளனர்.

குறிப்பாக உலகின் மிகச் சிறந்த உதைபந்தாட்ட வீரர்களான தியரி ஹென்றி, ட்விக்ஹ்ட் யோற்கே, பிரெட்ரிக் லுசுன்க் பேர்க்,றொபேட் பிரெஸ், லூயிஸ் சாகா மற்றும் ஹேமன் கிறிஸ்போ போன்ற வீரர்கள் பங்கேற்க உள்ளனர்.

ஐ.எம்.ஜி குழுமத்தினர் இதற்கு தேவையான உரிமத்தை பெற்றுள்ள நிலையில், ஒவ் வொரு அணிக்கும் அடிப்படை விலையாக சுமார் ரூபா 75 கோடி நிர்ணயித்துள்ளனர்.



மும்பாய், கொல்கத்தா, சென்னை, டெல்லி, கவுகாத்தி, பெங்களூர், கொச்சி, கோவா, புனே உட்பட 9 இடங்கள் தெரிவு செய்யப்பட்டு உள்ளன. இந்த 9 இடங்களில் உள்ள அணிகளுக்கான ஏலத்தை அடுத்த மாதம் நடத்த உள்ளனர். இதில் ஐ.பி.எல் உரிமத்தை வைத்துள்ள சில அணிகள் ஆர்வம் காட்டுவதாக தெரிகிறது.

குறிப்பாக ஷாருக்கான் (கொல்கத்தா நைற் ரைடர்ஸ்), கலாநிதி மற்றும் தயாநிதி மாறன் (ஹைதராபாத் சன் ரைசாஸ்), ஜி.எம்.ஆர் குழு (டெல்லி டேர் டெவில்ஸ்) மற்றும் எமர்ஜிங் மீடியா (ராஜஸ்தான் றோயல்ஸ்) அணிகள் ஆர்வம் காட்டி வருகின்றன.

இவர்கள் தவிர பொலிவுட் நட்சத்திரங்களான ரன்பீர் கபூர், ஜான் ஆபிரகாம் மற்றும் அபிஷேக் பச்சன் என்று பலரும் ஆர்வம் காட்டுவதாக தெரிகிறது. (த)

# மீண்டும் வருகிறார் ரைடர்

ஊக்க மருந்து பயன்படுத்திய குற்றத்திற்காக தடை செய்யப்பட்டிருந்த நியூசிலாந்து வீரர் ஜெஸ்ஸி ரைடர் மீண்டும் களமிறங்க உள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் இந்தியா ஆகியவற்றுடன் கிரிக்கெட் தொடர்களில் நியூஸிலாந்து அணி விளையாட உள்ளது.

அதனால், இந்தத் தொடர்களில் விளையாடும் நியூஸிலாந்து அணியில் மீண்டும் இடம் பிடிக்க ரைடர் ஆர்வமாக உள்ளார்.

அதற்காக முதல் தர கிரிக்கெட் போட்டிகளில் ஒடாகோ வோல்ட்ஸ் அணிக்காக அடுத்த வாரம் முதல் ரைடர் விளை யாடுகிறார்.

இது குறித்து ரைடர் கூறுகையில், என்னுடைய பிரதான இலக்கு நியூஸிலாந்து அணியில் இடம் பிடிப்பதுதான். முதலில் மேற்கிந்தியத் தீவுகள் தொடரிலேயே இடம் பிடிக்க முயற்சிப்பேன். ஒருவேளை அது நடைபெறாவிட்டால், இந்தியாவுக்கு எதிரான தொடரில் கண்டிப்பாக இடம் பிடிப்பேன் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இடது கை வீரரான ஜெஸ்ஸி ரைடர், நியூஸிலாந்து அணிக்கு கிடைத்த பொக்கிஷமாகக் கருதப்படுகிறார். இவர் மீண்டும் கிரிக்கெட் விளையாட உள்ளதால் அவரது ரசிகர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் உள்ளனர். (த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
23/10/2013

# பயிற்சியை தொடங்கினார் சச்சின்

இந்திய நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் தீவிர பயிற்சியைத் தொடங்கியுள்ளார்.

அரியானா- மும்பை அணிகள் மோதும் ரஞ்சிக் கிண்ண ஏ பிரிவு லீக் ஆட்டம் அரியானா மாநிலம் லாஹ்லி, பன்சிலால் அரங்கில் எதிர்வரும் 27ஆம் திகதி தொடங்குகிறது.

மேற்கிந்திய தீவுகளுடனான தொடரில் தனது 200ஆவது டெஸ்ட் போட்டியுடன் ஓய்வு பெற உள்ள சச்சின் டெண்டுல்கர், அதற்குப் பயிற்சி பெறும் வகையில் இந்த ரஞ்சி போட்டியில் விளையாட உள்ளார்.

ரஞ்சியில் மும்பாய் அணிக்காக அவர் விளையாடுவது இதுவே கடைசி முறையாக இருக்கும். இந்த போட்டிக்காக சச்சின் நேற்று முன்தினம் பயிற்சியைத் தொடங்கினார். கடந்த 24 ஆண்டுகளாக சச்சின் விளையாடி வந்தாலும், சர்வதேச போட்டிகளில் அதிகமாக விளையாட வேண்டிய கட்டாயம் காரணமாக மும்பாய் அணிக்காக 37 ஆட்டங்களில் மட்டுமே களமிறங்கி உள்ளார்.

இந்த போட்டிகளில் அவர் 4197 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

அரியானா அணியுடன் மோதவுள்ள மும்பாய் அணியின் அணித்தலைவராக வேகப்பந்து வீச்சாளர் சகீர்கான் நியமிக்கப்பட்டுள்ளார். (த)




## HP i3 LAPTOP
மலிவு விற்பனை

56,500 மட்டுமே 2 வருட உத்தரவாதம்

FREE - HEAD PHONE / 8 GB PEN DRIVE

ST. ANTONY 'S
187 , KKS ROAD
JAFFNA TWON
021-222-4865/ 0750698608

## அலுவலக சிற்றூழியர் (பியோன்) தேவை

யாழ். நகரிலுள்ள முன்னணி நிறுவனம் ஒன்றுக்கு பியோன் தேவை. ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். (வயது-20-35) வரை 10ஆம் தரச் சித்தி அவசியம்.

தொடர்பு:- 0217904941

## வாகனம் விற்பனைக்கு

52-XXXX குறூகப்(Crew Cab) விற்பனைக்கு உண்டு. நிறுவன ஓட்டத்துடன் கூடியது.

தொடர்பு:- 0773222837

## Samsung கணினிகள் விற்பனைக்கு

3.0GHZ HT LGA
250GB Hard Disk
1 GB DDR II Ram
DVD Writer
Rs. 13,500/= only

PC MATE
Computer Sales & Repair
746B:Point pedro Road,Nallur.
(மாநகரசபை முன்பாக)
Mobile : 077 968 9043

## SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை A/L எழுதியோர்,தொழில் புரிவோர், இளைஞர் யுவதிகள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.

"எமது 3 மாத பயிற்சி நிறைவில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பிவழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்"

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 26.10.2013 சனிக்கிழமை

1. காலை 08.00-10.00 3. மாலை 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00(இடமில்லை)

வாரநாள் (செவ்வாய்,வியாழன்) பிரிவுகள் ஆரம்பம் 24.10.2013
1. காலை 09.00-11.00 2. காலை 11.00-01.00

குறிப்பு: பயிற்சியில் இணைந்துகொள்ள அடிப்படை ஆங்கில அறிவு அவசியமில்லை

SAAMSON Language School
279,ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 621 4567

## FRENCH LANGUAGE CENTRE
CENTRE FOR FRENCH
FRENCH CLASSES

France,Canada,Belgium செல்வோர், சிறுவர்கள்(9-3வயது) French கற்று International Certificates இனை பெற்றுக் கொள்ளலாம்..

ஆசிரியர்: Mr. V. Jegan (Teaching Training in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற்கொள்பவரும். 735 க்கும் மேற்பட்டோர் French கற்றுள்ளனர்.. வடக்கில் இருந்து எம் மாணவர்கள் மட்டுமே International French Diploma Exam இல் சித்தி...

ஆரம்பம் : 09.11.13 Sat at 8am. No. 23, Palaly Road, ஆரியகுளம். (அப்பலோ Hospital க்கு அண்மையில்).

11.11.13 Mon at 4.30pm. No. 181, 1st Floor, Main Street, Nelliady. (சோதி வீதி முன்பாக)

0779 789 456

Deutsch,IELTS,B1,Sinhala Classes உம் நடைபெறுகிறது...

## நெல்லியடியில் நாளை
காலை 9.30 முதல் 3.30 மணி வரை

Free (with certificate) COMPUTER HARDWARE WORK-SHOP

நமது கணினிகளில் பிழைகளைக் கண்டறிந்து திருத்தம் செய்து -பராமரித்துக் கொள்வதற்கு கணினியை அசம்பிள் செய்து கொள்வதற்கு OS Installation, Software installation Laptop சேவிஸ் செய்தல் போன்ற விடயங்கள்.

பதிவுகளுக்கு உங்கள் பெயரை 0777240707 க்கு SMS செய்யுங்கள்

DMI COMPUTER EDUCATION
M.M.V வீதி, நெல்லியடி (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel.:021-226 2470


# கிறிஸ்ரல் பலஸை வென்றது புல்ஹாம்




இங்கிலாந்து பிறீமியர் லீக் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்று முன் தினம் போட்டியில் புல்ஹாம் அணி வெற்றிபெற்றது. கிறிஸ்ரல் பலஸ் அணிக்கெதிரான இப்போட்டியில் புல்ஹாம் அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.செல்ஹேர்ஸ்ற் பார்க் மைதானத்தில் இப்போட்டி இடம்பெற்றது.

போட்டி ஆரம்பித்த 7ஆவது நிமிடத்திலேயே கிறிஸ்ரல் பலஸ் அணியின் அட்ரியன் ஜோசப் மரியப்பா கோலொன்றைப் பெற்றுக் கொடுக்க, அவ்வணி 1-0 என்ற முன்னிலையைப் பெற்றது.

எனினும் 19ஆவது நிமிடத்தில் புல்ஹாம் அணியின் பஜ்ரிம் கசாமி கோலொன்றைப் பெற்று கோல் எண்ணிக்கையைச் சமப்படுத்தினார். அத்தோடு முதற்பாதியின் இறுதி நிமிடத்தில் புல்ஹாம் அணியின் ஸ்டீவ் சிட்வெல் கோலொன்றைப் பெற்றுக் கொடுக்க, முதற்பாதி முடிவில் அவ்வணி 2-1 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியில் மேலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய புல்ஹாம் அணி, போட்டியின் 50ஆவது நிமிடத்தில் டிமிற்றர் பேர்பட்டோவின் கோலின் உதவியுடனும், 55ஆவது நிமிடத்தில் பிலிப்பே சென்டரோஸின் கோலின் உதவியுடனும் 4-1 என்ற முன்னிலையைப் பெற்றது.

அதன் பின்னர் இரு அணிகளும் கோல் எதனையும் பெற்றுக் கொள்ளாது போக, இப்போட்டியில் ஃபுல்ஹாம் அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த)



## பணியாளர்கள் தேவை

1. தொலைத் தொடர்பு நிறுவனம் ஒன்றில் பணிபுரிவதற்குகு பெண் பணியாளர்களும்
2. நிறுவனம் ஒன்றுக்கு கணக்கு எழுதுநரும் (பெண்) தேவைப்படுகின்றனர்.

மாநகர எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு:- 0771254894


# 18 மாத ஊக்கமருந்து தடை கடுமையானது




ஐ.பி.எல் 20/20 கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா அணியில் இடம் பெற்று இருந்த பிரதீப் சங்வான் இந்த ஆண்டு நடந்த ஐ.பி.எல். போட்டியில் தடை செய்யப்பட்ட ஸ்டோனா சோலோல் எனும் ஊக்கமருந்து பயன்படுத்தியது தெரியவந்தது.

இது குறித்து கிரிக்கெட் சபையின் ஊக்க மருந்து தடுப்பு தீர்ப்பாயம் அவரிடம் விசாரணை நடத்தியது. கொழுப்பைக் குறைப்பதற்காக ஊக்க மருந்து பயன்படுத்தியதாக அவர் விசாரணையின்போது ஒப்புக் கொண்டார்.

இதைத் தொடர்ந்து பிரதீப் சங்வானுக்கு 18 மாதம் தடை விதிக்கப்பட்டது. ஏற்கனவே 6 மாதம் முடிந்துவிட்டதால் ஒரு ஆண்டு தடையில் இருப்பார். அதாவது அடுத்த ஆண்டு நவம்பர் வரை அவரது தடை இருக்கும். இந்தக் கால கட்டத்தில் அவர் எந்தவிதமான போட்டிகளிலும் விளையாட முடியாது.

இந்நிலையில் தனக்கு 18 மாதம் தடை விதிக்கப்பட்டது மிகவும் கடுமையானது என்று பிரதீப் சங்வான் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், எனக்கு விதிக்கப்பட்ட தடை காலம் மிகவும் கடுமையானது. இதை நான் எதிர்பார்க்கவில்லை. 6 முதல் 12 மாதம் வரைதான் தடை விதிக்கப்படும் என்று கருதினேன். இதே விவகாரத்தில் சர்வதேச வீரர்களான வோர்னுக்கு ஒரு ஆண்டும், ரைடருக்கு 6 மாதமும் தடை விதிக்கப்பட்டது இதனால் எனக்கு விதிக்கப்பட்ட தடை அதிகமானது என்றும் இது தொடர்பாக எனது சட்டத்தரணியுடன் ஆலோசனை செய்து தடையை குறைப்பது பற்றி மேன்முறையீடு செய்வேன் எனவும் கூறியுள்ளார்.

டில்லியை சேர்ந்த 23 வயதான பிரதீப் சங்வான் 2008ஆம் ஆண்டில் நடந்த 19 வயதுக்குட்பட்ட உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய அணியில் இடம் பெற்று இருந்தார். 38 முதல் தரபோட்டியில் 123 விக்கெட்டுகளை கைப்பற்றி உள்ளார். (த)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



நெஞ்சம் மகிழ
12 . 08 . 1955

நெஞ்சம் நெகிழ
24 . 09 . 2013

அமரர்
## அப்பாக்குட்டி சிங்கராஜா
(இலங்கை மின்சார சபை)

கடந்த 24.09.2013 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை 24.10.2013 வியாழக்கிழமை முற்பகல் 10 மணியவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், இறுதிக் கிரியை வரை உதவிபுரிந்த யாழ் நகரப்பணிமனை மின் அத்தியட்சகர், உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய பிரிவு மின்சாரசபை உத்தியோகத்தர்களுக்கும், கோப்பாய் பிரதேச வைத்தியசாலை அத்தியட்சகர், வைத்தியர்கள், ஏனைய உத்தியோகத்தர்களுக்கும், இலங்கை வங்கி ஊர்காவற்துறை சகல உத்தியோகத்தர்களுக்கும், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டப்பணிப்பாளர் அலுவலக உத்தியோகத்தர்களுக்கும், தொலைபேசி, மலர் வளையம், துண்டுப்பிரசுரம் மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்துகொள்ளவும்

0772718760 90,அபுபக்கர் வீதி யாழ்ப்பாணம் மனைவி, பிள்ளைகள்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்கள் புகழ்வதும் சீக்கிரம்; இகழ்வதும் சீக்கிரம். ஆதலால் மற்றையோர் உன்னைப் பற்றிச் சொல்லும் வார்த்தைகளைக் கவனிக்காதே.
-இராமகிருஷ்ண பரமஹம்சர்

# புதன் பொய்கை

A

உதயன் | ஒக்ரோபர் 23 2013 புதன்கிழமை | பக்கங்கள்: எட்டு

# ஆணாதிக்கம் ஒழிந்து போகட்டும்

ராஜராஜன்



பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களுக்கும், அவர்கள் எதிர்கொள்கின்ற இன்னல்களுக்கும் ஆணாதிக்கமே முக்கிய காரண மெனக் கூறலாம்.

இந்த உலகிலே எவ்வளவுதான் மாற்றங்கள் ஏற்பட்டுள்ள போதிலும் ஆண்களின் மனங்களைப் பொறுத்தவரையில் பெண்கள் மீதான அவர்களின் பார்வையில் மாற்றங்கள் எதனையும் காண முடியவில்லை. மாறாக சமீப காலமாக ஆண்களால் பெண்கள் பாதிக்கப்படும் சம்பவங்கள் அதிகளவில் பதிவாகியுள்ளன.

இதற்கு ஆண்கள் எப்போதுமே பெண்களை ஒருபடி கீழே வைத்துக் கருதும் மனப்பாங்கு இன்றும் தொடர்வதை முக்கிய காரணமாகக் கூறலாம். உடல் ரீதியில் பெண்கள் பலவீனமானவர்கள் என்றதொரு காரணத்தைக் காட்டியே ஆண்கள் இந்த மனப்பான்மையை வளர்த்து வருகின்றனர்.

பெண்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான புதிய புதிய சட்டங்கள் இயற்றப்பட்டும் குற்றங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டும் வருகின்றனர். இந்தியாவிலுள்ள டில்லியில் மருத்துவக் கல்லூரி மாணவியொருவர் கொடியவர்கள் சிலரால் பாலியல் வன்முறைக்காளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் உலக அளவில் மிகப்பெரிய தாக்கத்தையும் கோபத்தையும் ஏற்படுத்தியது. குறிப்பாக இந்தியா முழுவதும் பெரியளவில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றதுடன் குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டுமென்ற நெருக்குதல்களும் மத்திய அரசுக்குக் கொடுக்கப்பட்டன.

இதன் விளைவாக இந்திய மத்திய அரசு இத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களைக் கடுமையாகத் தண்டிக்கும் விதத்தில் சட்டங்களைக் கடுமையாக்கியது. இதன் விளைவாகவே மருத்துவக் கல்லூரி மாணவியின் கொடூரச் சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதன் மூலமாகப் பெண்களுக்குஎதிரானவன்முறைகள்குறைந்துவிடுமெனஎவரும்எதிர்பார்க்கமுடியாது. ஏனென்றால் ஆண்களின் மனங்களில் மாற்றங்கள் ஏற்படும் வரை இது சாத்தியமாகப் போவதில்லை.

இந்த ஆணாதிக்க மனப்பாங்கு சிறுவயதிலேயே ஆண்களிடத்தில் தோன்றி வருகின்றது. ஆண்களுக்கெனவே சில விளையாட்டுக்கள் ஒதுக்கி வைக்கப்படுகின்றன. பெண்கள் அவற்றில் ஈடுபட முடி யாது. தற்போது இதில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ள போதிலும் அதனை முழுமையாகக் கொள்ள முடியாது.

பெண்கள் வயதுக்கு வந்ததும் பெற்றோர்களால் அவர்களுக்குக் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கும் வழக்கம் பல ஆண்டுகளுக்கு முன்னர் காணப்பட்டது. ஆண்களால் பெண் பாதிக்கப்படக் கூடாது என்பதே இதன் பிரதான நோக்கமாக இருந்தது. கிராமங்களைச் சேர்ந்த இத்தகைய பெண்கள் பாடசாலைகளில் இருந்து கூட இடைநிறுத்தி வைக்கப்பட்டனர். சில இடங்களில் வீட்டு வேலிகள் கூட உயரமான வகையில் அமைக்கப்பட்டன. ஆண்களைப் பற்றிய நம்பிக்கையீனமே இவையெல்லாவற்றுக்கும் அடிப்படைக் காரணங்களாக அமைந்திருந்தன.

காலப் போக்கில் இந்த நடைமுறைகளில் தளர்வு ஏற்பட்டது. பெண்கள் தம்மைக் கவனித்துக் கொள்வார்கள் என்ற எண்ணத்தின் வெளிப்பாடாகவும் இதனைக் கொள்ள முடியும். ஆனால் இதற்கான வேளை இன்னமும் கனியவில்லை என்பதுதான் உண்மை நிலையாகும்.

தகவல் தொடர்பாடல் சாதனங்களின் அதீத வளர்ச்சி காரணமாக ஆண், பெண் இருபாலாருக்கும் இடையிலானதொடர்புகள்இலகுவாகி வருகின்றன. இதனால் தமது நோக்கத்தை நிறைவேற்றுவது ஆண்களுக்கு எளிதாக மாறியுள்ளது. என்னதான் தவறு ஏற்படுகின்ற போதிலும் பாதிக்கப்படுவது பெண்கள் தானே? எமக்கென்ன வந்தது என்ற ஆண்களின் வக்கிரமான சிந்தனையில் மாற்றம் ஏற்படும் வரையில் பெண்களுக்கு ஒருபோதுமே விமோசனம் கிடைக்கப் போவதில்லை.

பெரும்பாலான இஸ்லாமிய நாடுகளில் பெண்களுக்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருகின்றன. பெண்களை ஆண்களிடமிருந்து காப்பாற்றும் நோக்குடனேயே இவை ஏற்படுத்தப்பட்டுள்ள போதிலும், இன்றைய நிலையில் அந்தக் கட்டுப்பாடுகள் அதிக மென்றே கூறவேண்டும். மேலும் மத சம்பிரதாயங்களைக் காரணம் காட்டி இஸ்லாமிய கடும் கோட்பாளர்கள் பெண்கள் விடயத்தில் நடந்து கொள்ளும் முறையை முற்று முழுதாக ஏற்றுக் கொள்ள முடியாது. பெண்கள் பாதிக்கப்படக் கூடியவர்கள் என்ற வகையில் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்படத்தான் வேண்டும். ஆனால் அவர்களை அடிமைகளாக ஆக்கும் வகையில் இவை அமைந்திருப்பதுதான் வேதனை அளிக்கின்றது.

ஆனால் சில மதங்கள் கூட ஆண்களுக்குச் சார்பான விதிகளைக் கொண்டிருப்பதுதான் வேதனையளிக்கின்றது. பெண்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் ஆண்களைக் கட்டுப்படுத்துவதற்கு அவை தவறிவிட்டுள்ளன. இவ்வாறு ஆண்கள் கடுமையான கட்டுப்பாடுகளுக்குள் கொண்டு வரப்பட்டால் பெண்கள் அச்சமின்றி உலவ முடியும். கட்டுப்பாடுகளும் அவர்களுக்குத் தேவையில்லை.

திருமணத்தின் போது சீதனம் என்ற பெயரில் பெண்கள் மீதான ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் ஆண்கள் பின்னர் வாழ்நாள் முழு வதும் தனது வாழ்க்கைத் துணையாக வருகின்ற பெண் மீது அதனைத் தொடர்கின்றான். தனக்கும் தனது குடும்பத்துக்கும் ஏவல் புரிவதே தனது வாழ்க்கைத் துணைவியின் கடமையென ஓர் ஆண் எப்போது எண்ணுகின்றானோ அந்த வினாடியில் இருந்து வாழ்க்கையில் தோற்றவனாகவே அவன் மாறிவிடுகின்றான். 'தாய்க்குப் பின் தாரம்' என்பதை அவன் அறிந்திருந்தால் இந்தத் தவறு ஏற்பட் டிருக்க மாட்டாது. ஏனென்றால் ஒரு குடும்பத்தின் உயர்வும் தாழ்வும் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த பெண் ணின் கைகளிலேயே உள்ளது. இதனால்தான் 'ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே'' என்ற வரிகளும் உருவாகின.

ஆகவே ஆண்கள் தமது ஆதிக்க மனோ பாவத்தை உடனடியாகக் களைந்து எறிய வேண்டும். ஆணும் பெண்ணும் சமம் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். தேவையற்ற வகையில் பெண்களைத் துன்புறுத்துவதை நிறுத்திக் கொள்ள வேண்டும். எந்தவொரு அந்நியப் பெண்ணை நோக்கும் போதும் தனது தாய், சகோதரி ஆகியோரின் நினைவை மீட்டுக்கொள்ள வேண்டும்.

எந்தவொரு ஆணும் பெண் துணையின்றித் தன்னால் வாழ முடியுமாவென ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தால் பெண் என்பவள் எவ்வளவு உயர்வானவள் என்ற எண்ணம் அந்தக் கணமே தோன்றிவிடும்.

ஆகவே ஆண்களே, உங்களின் மனங்களில் படிந்துள்ள அழுக்குகளை முற்றாகச் சுத்தம் செய்யுங்கள். அங்கே பெண் என்பவள் இழிவானவள் என்ற எண்ணம் தலைதூக்குமாயின் அதைத் துடைத்து எறியுங்கள். அப்போது தான் பெண்மையின் பெருமைகள் உங்களுக்குப் புரிய வரும்.

> தகவல் தொடர்பாடல் சாதனங்களின் அதீத வளர்ச்சி காரணமாக ஆண், பெண் இருபாலாருக்கும் இடையிலான தொடர்புகள் இலகுவாகி வருகின்றன. இதனால் தமது நோக்கத்தை நிறைவேற்றுவது ஆண்களுக்கு எளிதாக மாறியுள்ளது. என்னதான் தவறு ஏற்படுகின்ற போதிலும் பாதிக்கப்படுவது பெண்கள் தானே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைப்படத்தை தானே இயக்கி நடிப்பில் மிளிர்ந்தவர் சப்ளின்




'இடுக்கண் வருங்கால் நகுக' என்ற திருக் குறளின் வரியை நாம் படித்திருப்போம். ஒரு சோகமான குடும்பப் பின்னணியில் உதித் தாலும் நகைச்சுவை என்ற ஆயுதத்தைக் கொண்டு பல்லாயிரக்கணக்கானோரின் சோகங்களை விரட்டி அடித்தவர் சாள்ஸ் ஸ்மென்ஸர் சப்ளின். இவரது குடும்பப் பின்னணி சரியாக இல்லா விட்டாலும் வானத்தை வசப்படுத்தலாம் என் பதை வாழ்ந்து காட்டியவர். வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும் என்பார்கள். அப்படிப் பார்த்தால் நம்மை வாய்விட்டுச் சிரிக்க வைப்பவர்களை மருத்துவர்களுக்கு சமன் என்று சொல்லலாம். உலகில் அதிக மக்களை சிரிக்க வைத்த நபர் யார் என்று கேட்டால் ஒரே ஒரு நபரைத்தான் வரலாறு புன்னகையுடன் உதிர்க்கும். அவர்தான் ஈடுஇணையற்ற ஆங் கில நகைச்சுவை நடிகரும் இயக்குநரும் தயா ரிப்பாளருமாகிய சப்ளின் ஆவார்.

இன்று திரைப்படங்களில் வசனங்களைக் கேட்டுச் சிரிக்கிறோம். ஆனால் ஊமைப் படங்கள் மட் டுமே வெளிவந்த ஒரு கால கட்டத்தில் மொழியின் துணை இன்றி வாயசைத்துப் பேசாமல் தன் உடல் அசைவுகளாலே ரசிகர்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைத்தார். பல்லாயிரக்கணக் கான திரை ரசிகர்களுக்கு நகைச்சுவை என்ற மருந்து தந்த இந்த மாபெரும் கலைஞனின் வாழ்க்கை எவ்வளவு சோகம் நிறைந்தது தெரியுமா? இயக்குநர், இசையமைப்பாளர், திரைக்கதை, படத்தயாரிப்பு ஆகியவற்றில் தனது சிறப்பான முத்திரைகளைப் பதித்து புகழ் பெற் றவர் சாள்ஸ் ஸ்பென்ஸர் சப்ளின்.

லொஸ் ஏஞ்சல்ஸின் திரைப்பட உலகம் இவரின் சாதனைகளைப் போற்றுகிறது. இவர் லண்டன் நகரில் 16.04.1889 இல் பிறந்தார். ஆரம்பக் கல்வி பெற்றதோடு இவரது கல்வி நின்று போனது. சிறுவயதில் சப்ளின் நன்றாகப் பாடும் திறன் பெற்றிருந்தார். சப்ளினின் தாய் ஹென்னா ஒரு மேடைப் பாடகி. இவர் ஒரு நாள் மேடையில் பாடிக் கொண்டிருந்த போது தொண் டை அடைத்து சத்தம் எழவில்லை. ரசிகர்கள் எழுப்பிய கூச்சல் குழப்பங்களைத் தவிர்க்க வேண்டி ஐந்து வயதில் சப்ளின் மேடை யேறினான். சப்ளினின் பாடல்களைக் கேட்ட ரசிகர்கள் மேடை மீது பணத்தை அள்ளி வீசினர். வறுமை காரணமாக பெற்றோரை சிறுவயதி லேயே சப்ளின் பிரிந்தான். வறுமையோடு லண்டன் நகர வீதியில் அநாதையாக அல்லல்பட்டான். நிரந்தர வேலை தேடியும் அலைந்தான். இவைகளை சப்ளின் தன் வரலாற்று நூலில் எழுதி இருக்கிறார். சப்ளின் 7 வயதில் 'த எயிட் லங்காஷ்யர் வாட்ஸ்' என்னும் திரைப்படத்தில் நடித்தான். பீட்டர்பான், ஜிம் அண்ட் ஷெர்லாக் ஹோம்ஸ் என்னும் நாடகங்களில் நடிக்க வாய்ப்புகள் கிடைத்தன. பிரபலமான ஃப்ரெட் கார்ணோ கம்பனி என்னும் நாடகக் குழுவில் சப்ளின் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அமெரிக்காவின் பல நகரங் களில் இந்தக் குழு நாடகங்களை நடத்திப் பிர பலம் ஆனது. 1913 இல் நாடகங்களில் நகைச் சுவை நடிகராகத் தோன்றினார் சப்ளின். திரைப்பட உலகம் இவரைக் கண்டறிந்து வரவேற்றது. ஒப்பற்ற நடிகராக திரைப்பட உலகில் காலடி வைத்தார். இவர் பெற்ற சம்பளம் வாரத்துக்கு 150 அமெரிக்க டொலராகும்.

1914 ஆம் ஆண்டு 'மேக்கிங் ஏ லிவிங்' என்னும் இவரது முதல் திரைப்படம் வெளியானது. தொடர்ந்து 35 திரைப்படங்களில் நடித்தார். இவர் நடிக்கும் திரைப்படங்களை இயக்கும் உரிமையும் இவருக்கு வழங்கப்பட்டது. 1915 இல் 'தி டிராம்ப்' என்னும் திரைப்படம் சாப்ளினை சிறந்த நட்சத்திரம் என்ற சிறப்புக்கு உயர்த்தியது. டிராம்ப் என்னும் கதாபாத்திரத்தில் தோன்றி நகைச் சுவை ததும்ப நடித்து மக்களின் மனங்களில் இடம் பிடித்தார். லண்டன் நகர வீதிகளில் தன் வறுமைக் காலத்தில் பார்த்த பல ஏழைக் குமாஸ் தாக்களின் தோற்றங்களைக் கவனித்துத் தன்னைப் புத்திசாலியாக நினைத்துக் கொண்டிருக்கும் அப் பாவிக் கிறுக்கனின் நடை, உடை பாவனையை தனதாக்கிப் படங்களில் புகுத்தினார்.

இதுதான் டிராம்ப் கதாபாத்திரத்தின் சாராம்சம். 1916 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இவரது வாரச் சம்பளம் 10,000 டொலர். போனஸாக 150,000 டொலர்கள் வழங்கப்பட்டன. இமிக்ரண்ட் என்ற திரைப்படம் சப்ளினின் ஆரம்பக் கால வாழ்க்கையைப் பற்றியது. லண்டனிலிருந்து அமெரிக்காவுக்குக் குடி பெயர்ந்தபோது இவர் பட்ட இன்னல்கள் "இப்போதைய சமூகப் பொறுப்பையும் நிதர் சனமாக உணரவைத்த படம் எனக் கூறப்படு கிறது. 1921 இல் 'த கிட்' என்னும் திரைப்படத்தைத் தயாரித்து இயக்கினார் சப்ளின். 'மை டிரிப் அப்ராடு' என்னும் புத்தகத்தை எழுதி வெளி யிட்டார். 1925 இல் 'த கோல்டு ரஷ்' என்னும் சப்ளினின் திரைப்படத்துக்கு 2 மில்லியன் டொலர்கள் இலாபம் கிடைத்தது.

இத்தகைய வருமானத் தால் சப்ளின் அமெரிக்க கோடீஸ்வரர்களில் ஒருவரானார். 1931 இல் 'சிட்டி லைட்ஸ்' என்ற திரைப்படத்தின் கதை, தயாரிப்பு, இசை, இயக்கம் ஆகிய பொறுப் புகளுடன் நடிக்கவும் செய்தார். கொலிவூட்டின் மிகச் சிறந்த முதல் தரமான படம் என்ற சிறப்பும் இந்தத் திரைப்படத்துக்கு கிடைத்தது. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது ஜேர்மனியின் சர்வாதி காரி அடால்ஃப் ஹிட்லர் உலக நாடுகள் பல வற்றை தன் வெறித்தனமான நடவடிக்கைகளி னால் மிரட்டிக் கொண்டிருந்தான். சப்ளின் மிகத் துணிச்சலுடன் ஹிட்லரை விமர்சித்து 1940 இல் ஒரு திரைப் படத்தை இயக்கி வெளியிட்டார். அது 'த கிரேட் டிக்டேட்டர்' என்னும் திரைப்படம். இந்தப் படம் தான் முதல் பேசும் படமுமாகும். 1956 இல் ஏ கிங் இன் நியூயோர்க் என்ற திரைப்படத்தை உருவாக்கி இங்கிலாந்தில் முதன்முதலாகத் திரையிட்டு பெருமை தேடிக் கொண்டார். இரண்டாவது எலிஸபெத் ராணி சப்ளினுக்கு மிகவும் உயர்ந்த விருதான 'நைட்டட்' பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார். சுவிட்ஸர்லாந்தின் கோஸியர் சர் லீவி என்னும் ஊரில் 1977 இல் கிறிஸ்மஸ் தினத்தன்று தமது 88 ஆவது வயதில் சப்ளினின் ஆங்கிலத் திரைப்பட நட்சத்திர சகாப்தம் முடிவுற்றது. யேசு பிரானின் பிறப்பைக் கொண்டாடும் நன்னாளில் உலக மக்களில் பலர் சாப்ளினை நினைவு கூரும் நிலைப்பாட்டுக்கு அவர் தன்னுடைய பங்கை ஆற்றி இருக்கிறார் என்பது பெருமைக்குரியது.

பார்வையாளன்



*1914 ஆம் ஆண்டு 'மேக்கிங் ஏ லிவிங்' என்னும் இவரது முதல் திரைப்படம் வெளியானது. தொடர்ந்து 35 திரைப்படங்களில் நடித்தார். இவர் நடிக்கும் திரைப்படங்களை இயக்கும் உரிமையும் இவருக்கு வழங்கப்பட்டது.*

# 'புதுமை'க்கு இலக்கணம் வகுக்க இயலுமா?

**கோப்பாய் சண்முகம்**

**கதையோடு செய்தி**

கடந்த சனிக்கிழமை மதியம் 12 மணி இருக்கும் யாழ். நகரை அண்மித்த ஹோட்டல் ஒன்றில் சாப்பிடுவதற்தாகச் சென்றிருந்தேன். அங்கே போடப்பட்டிருந்த மேசைகளில் கூடு தலாக இளம் பெண்கள் அமர்ந்திருந்து சாப் பிட்டுக் கொண்டிருந்தார்கள். எங்களில் நாலு பேர் ஒரு மேசையில் அமர்ந்திருக்கிறோம். என்ன சாப்பிடப் போகிறோம் என்று எங்களுக்குள் முடிவெடுத்துக் கொண்டதும் உணவுக்கான ஓடர் கொடுத்தோம். சுற்றும் முற்றும் பார்க் கிறேன். அங்கிருக்கும் பெண்கள் வகை வகை யான உணவு வகைகளைப் பெற்று ஆறுதலாக தங் களுக்குள் கதைத்துக் கொண்டு சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் கலகலப்பாக உரையாடியவாறு சந்தோஷமாக இருந்தார் கள்.

அவர்களைப் பார்த்து விட்டு நண்பர்களைப் பார்க்கிறேன். அவர்களில் ஒருவன் "என்ன சைற் அடிக்கப் பார்க்கிறியோ" என்று என்னைக் கேட்டான். நானோ "இல்லையடா" என்று சொல்லி வாய் திறக்க முற்பட்ட வேளை மற்ற நண்பர்கள் என்னை விட்டபாடில்லை. ஆளுக்கு ஆள் ஏதோ சொல்ல நான் காதுகளைப் பொத்திக் கொண்டேன். நண்பர்களில் ஒருவன் எனது கைகளைத் தட்டிவிட்டு "என்ன பார்க்கிறாய்" என்றான். நானோ அப்பாடா, எப்படியோ எனக்கும் வாய் திறப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கி விட்டார்களே என்ற பெரு மூச்சுடன் நண்பர்களைப் பார்த்து "வழக் கமாய் வீட்டிலை யார் சாப்பாடு சமைக்கிறது?" என்று கேட்டேன். நண்பர்களில் ஒருவன் "இப்பெல்லாம் பெரும் பாலும் ஆம்பிளையள் தான்" என்றான். நானோ "ஆம்பிள்ளையளும் பெரும்பாலும் ஹோட் டலில் தானே சாப்பிடுகிறார்கள்" என்றேன். அதற்கு அவனோ "அதனால் எதுக்காகச் சமைத்துக் கஷ்டப்படுவான் என்று பெண்களும் ஹோட்டலுக்கு வந்து விட்டார்கள் போலும்" என்றான். நானோ "அப்படி இருக்காது" ஏதாவது பார்ட்டியாக இருக்கும் என்றேன். அவனோ "இருக்கும். இருக்கும். பெடியளுக் கொண்டால் தண்ணிப் பார்ட்டி, பெண்களுக்கென்றால் இப்படி ஒரு பார்ட்டியாக இருக்குமோ? என்று இழுத்தான். நானோ எதற்கும் ஒருக்கால் அவர்களிடம் சென்று கதைத்துவிட்டு வருவம்" என்றேன். அவனோ "என்ன கதைக்கப் போறியோ? இப்பவே எங்களை ஒரு மாதிரிப் பார்க்கிறார்கள். கதைக்கப் போனால் என்ன நடக்கும் எண்டு யோசிக்கிறன் தெரியுமோ" என்றான். கதைக் கிறதுக்கு என்ன பயம்? என்று அவனுக்கு சொல்லி விட்டு அந்த இளம் பெண்கள் இருந்து சாப்பிடும் ஒரு மேசையின் அருகில் எனது கதிரையை தூக்கிக் கொண்டு சென்று வைத்தேன்.


தங்களுக்குள் சந்தோஷமாக கதைத்துக் கொண்டே சாப் பிட்டுக் கொண்டிருந்தவர்கள் சட்டென்று என் னைப் பார்த்ததும் பேய் அறைந்தது போல முழித்தார்கள். நானோ உடனே "உங்க ளோடை கொஞ்சம் கதைக்கலாமோ" என்று கேட்டதன் பின்புதான் அவர்கள் இயல்பு நிலைக்கு வந்தார்கள். அந்த யுவதிகளில் ஒருத்தி "ஓ அதற்கென்ன, கதைக்கலாமே" என்றாள். நானோ அனுமதி கிடைத்தது போல நான் கொண்டு சென்ற கதிரையில் அமர்ந்தேன். அதற் குள் ஒருத்தி "என்ன கதைக்கப் போறியள்?" என்றாள். நானோ "ஒன்றிரண்டு சந்தேகங் களைக் கேட்டால் அதற்குப் பதில் சொல்வீர்களா?" என்றேன். ஒருத்தி "எல்லாவற்றுக்கும் பதில் சொல்ல முடியாது. பதில் சொல்லுகிற மாதிரி கேள்வி இருந்தால் பதில் சொல்லுவம்" என்று ஒரு மிடுக்கான தொனியில் சொன்னாள். இதற் கிடையில் எனது நண்பர்களைத் திரும்பிப் பார்க்கிறேன். அவர்களோ பேச்சைத் தொட ருமாறு சைகை காட்டினார்கள். உடனே நான் "வீட்டில சாப்பாடு சமைக்கவில்லையோ" என்று கேட்டேன். அதற்கு ஒருத்தி "உங்கள் எல்லா ருடைய வீட்டிலும் இன்றைக்குச் சமையல் இல்லையோ" என்று திருப்பிக் கேட்டாள். நானோ "எங்களுடைய வீட்டிலை இன் றைக்குப் பெண்கள் இல்லாததால் ஹோட்டலுக்குச் சாப்பிட வந்துட்டம்" என்றேன். அதற்கு அவளோ "எங்கடை வீடுகளிலை இன்றைக்கு ஆண்கள் இல்லாத தால ஹோட்டலுக்கு சாப்பிட வந்திட் டோம்" என்றாள். நான் உடனே "என்ன சொல் லுறியள், வீட்டில் பெண்கள் தானே சமைக்க வேண்டும் " என்றேன்.

அவளோ "யார் சொன்னது அப்படி, ஆண்கள் சமைத்தால் என்ன?, பெண்கள் தான் சமைக்க வேண்டும் என்ற காலம் மலையேறி விட்டது. இப்பத்தைக் கால[illegible] களும் சமமாக [illegible] இப்படி இருக்க, பெண்கள்தான் சமைக்க வேண்டும் என்று என்ன நியதி இருக்கிறது" என்றாள். நானோ "குடும்பப் பெண் என்றால் அந்த குடும்பத்தைக் கட்டிக் காக்க வேண்டியவள். வீட்டில் என்ன செய்ய வேண்டுமோ பொறுப்பாக அதனை முன்னின்று செய்ய வேண்டும். வெளியிடத்து வேலைகளை ஆண்கள்தான் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் பெண் களுக்கு ஒரு மரியாதை இருக்கும்?" என் றேன். அவளோ " உது எந்தக் காலத்துக் கதை இப்பத்த காலம் பெண்ணியம் பேசிற காலம். இந்தக் காலத்தில் உது எல்லாம் எடுபடாது" என்றாள். நானோ "குடும்பப் பெண்களுக்கு சில கடமைகள் இருக்குது. அந்தக் கடமைகளைப் பெண் அடக்கு முறை என்று பேர் குத்தக் கூடாது என்றேன். அவளோ "குடும்பப் பெண்கள் என்றால் சமையல் செய்யத்தான் வேண்டுமா? இனிவரும் காலம் ஆண்கள்தான் சமையல், வீட்டு வேலைகளைப் பார்க்க வேண்டிவரும். அந்தளவுக்கு பெண்கள் தங்களுடைய காலில் நிற்கமுடியும் என்று நிரூபித்து விட்டார்கள்" என்றாள். நானோ "பெண்கள் தங்களுடைய காலில் நிற்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். ஆனால் பெண்கள் தங்களுடைய காலில் நிற்கிற இந்தக் காலத்தில் பெண்களுக்கு நிறைய பிரச்சினைகள் ஏற்படுகின்றனவே? இன்று விவாகரத்து வாங்கும் பெண்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. கணவன் மனைவிக்குள் ஏற்படும் குடும்பப் பிரச்சினை சிறு பிரச்சினையாக இருந்தாலும், அதைப் பெண்கள் தமது மானப் பிரச்சினையாக நினைத்து நீதிமன்றம் ஏறுகிறார்கள்.

இதற்கு என்ன காரணம் என்று பார்த்தால் தாங் கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். அதற்கு எவரும் தடை போடக்கூடாது என்று நினைக்கிறார்கள். இதனால்தான் 'சிறு பிரச்சி னையாக இருந்தாலும், பெண்கள் தான் முதலில் நீதிமன்றம் செல்கிறார்கள்" என்றேன். அவளோ "அது சரியான முடிவுதான். நாம் எமது காலில் நிற்கும் போது பிறகு யாருக்குப் பயப்பட வேண் டும். எம்மை யாருமே அடக்கி நடத்த முடியாது. நாம் சுதந்திரமாகச் செயற்பட வேண்டும்" என்றாள். நானோ "இப்படி இருப் பதால்தான் பெண்மைக்கு இருக்கிற குணம் இல்லாமல் போய் ஆண்மைத் தன்மை பெண் மைக்குள் புகுந்து விடுகிறது. இதனால் உருவம் பெண் ணாக இருந்தாலும், ஒரு ஆணுக்குரிய விதத்தில் செயற்பாடுகள் இருப்பதைக் காணக் கூடிய தாக இருக்கிறது" என்றேன். அவளோ "நீங்கள் சொல் லுறது ஒன்றும் புரியவில்லை. ஆண்மை, பெண்மை என்று ஏதோ வெல்லாம் பேசுறியள். பெண்மை என்றால் ஒரு தனிப் பண்பு இருக்கிறது. ஆண்மை என்றால் வேறானதொரு தனிப் பண்பு இருக் கிறது என்பது பழசுகளின் கருத்து. என்னைப் பொறுத்தவரை ஆண்மைக்கும் பெண்மைக்கும் வித்தியாசம் தெரியவில்லை" என்றாள்.

உடனே அந்த இடத்தில் இருந்து எழுந்து எனது கதிரையை தூக்கிக் கொண்டு போய் எனது நண்பர்களின் அருகில் போட்டு விட்டு அதில் அமர்ந்து கொண்டேன். எனது நண்பர்களில் ஒருவன் 'என்ன கதைச்சனீ, சந்தோஷமாக இருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்ததுகள் ஏதோ ஒரு மாதிரி யோசித்துக் கொண்டிருக்குதுகள்' என்றான். நானோ 'ஆண்மைக்கும், பெண் மைக்கும் அவர்களுக்கு வித்தியாசம் தெரிய வில்லை" என்றேன். எமது மேசைக்கு சாப்பாடு கொண்டு வந்த சேவகர் நான் சொன்னதைக் கேட்டு விட்டு" இதுகள் எங்களைப் படுத்து கிறபாட்டை ஆருக்குச் சொல்ல ஏலும்?" என்று சொல்லி விட்டுச் சென்றார். அவர் சொன்னது புரியாமல் அவர் போகும் வழியைப் பார்க்கி றேன். பெண்ணடிமை, ஆண் ஆதிக்கம் என் றெல்லாம் விமர்சனங்கள் பரவலாக முன் வைக்கப்படும் இந்தக் காலத்தில் எமது இனத்துக் கேயுரிய, பண்டைய பண்பாட்டு நடைமுறை களைத் தவறாகப் புரிந்து கொண்டு நாம் புதுமை என்று பெயர் சொல்லி வாழ்க்கையில் பிறழ ஆரம்பித்துள்ளோமா? என்ற சந்தேகம் இன் னமும் என் மனதைக்குடைந்து கொண்டே இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உண்ணாவிரதத்தின் மகத்துவம்

மது

உண்ணாவிரதம் இருப்பதன் பலன் மற்றும் மகத்துவம் குறித்து பல்வேறு மதங்களும் வற்புறுத்தி வருகின்றன. தங்கள் ஆரோக்கியம் காக்க விரும்புபவர்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் உண்ணாவிரதம் இருப்பது வழக்கமாகவும் உள்ளது. அரசியல்வாதிகள் மற்றும் தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி அகிம்சை வழியில் உண்ணாவிரதம் இருப்பதும் உண்டு.

ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்த்து மகாத்மா காந்தியடிகள் உண்ணாவிரதம் என்ற ஆயுதம் ஏந்தி போராடியது குறிப்பிடத்தக்கது. உண்ணாவிரதம் ஒரு மருத்துவ முறையாகவே இருந்து வந்திருக்கிறது. இது மிகப் புராதனமான இந்திய மருத்துவ முறை ஆகும். தற்போது நவீன அறிவியலும் உண்ணாவிரதத்தின் மகத்துவங்களை ஏற்றுக்கொண்டுள்ளது.

உண்ணாவிரதம் இருப்பது பல நோய்களுக்கான மருத்துவ முறையாக நீண்ட காலத்துக்கு முன்பே இந்தியா, எகிப்து, கிரேக்கம் ஆகிய நாடுகளில் பின்பற்றப்பட்டு வந்தது. வரலாற்றுக்கு முற்பட்ட பண்டைக் காலத்திலும் மக்கள் இந்த முறையைக் கடைப்பிடித்தனர் என்பதற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன.

சில விலங்குகள்கூட தமது உடல் நலம் கெட்டால் அது சீரடையும் வரை தாமாகவே உணவு உண்பதை நிறுத்தி விடுவது, ஆச்சரியத்துக்குரியது. இந்தியாவில் ஆயுள்வேத முறைப்படி உண்ணாவிரத சிகிச்சை பண்டைய காலத்தில் இருந்தே இருந்து வருகிறது.

உடலில் உள்ள நச்சுப் பொருள்களை முதலில் அகற்றுவதற்கான ஒரு வழிமுறையே உண்ணாவிரதம். அதைத்தொடர்ந்து, பின்னர் நோயைத் தீர்க்கப் பல்வேறு மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. உண்ணாவிரதம், யோகப் பயிற்சியிலும் ஓர் அங்கமாகும்.



18 ஆம் நூற்றாண்டில், ரஷ்யா, மொஸ்கோ பல்கலைக்கழகப் பேராசிரியர்களான பிவெனியானோவ், ஸ்ராஸ்கி ஆகியோர், பல்வேறு வகையானநோய்களைத் தீர்ப்பதில் பட்டினிச் சிகிச்சையின் பயன்கள் குறித்து ஆய்வுகள் நடத்தி நல்ல முடிவுகளை வெளியிட்டனர்.

வளர்சதைமாற்றக்கோளாறுகள் குறிப்பாக கொழுப்புப் பொருள்களின் வளர்சதை மாற்றம், பல்வேறு குருதி ஓட்ட மண்டல நோய்கள், நுரையீரல், ஆஸ்துமா, தோல் நோய்கள் ஆகியவற்றைக் குணப்படுத்துவதில், கட்டுப்படுத்தப்பட்ட உண்ணாவிரத முறை அளிக்கும் பயன்கள் குறித்து ரஷ்ய மருத்துவரான நார்பகோன் தனது ஆய்வுக் கட்டுரையில் விளக்க்மாக எழுதியுள்ளார்.

முன்சிறுகுடல் வளைவு, இரைப்பை ஆகியவற்றில் உள்ள புண்களை ஆற்றுவதில் உண்ணாவிரதச் சிகிச்சை முறையின் வெற்றிகள் பற்றி ஏ. பாகுலேவ் தனது ஆய்வுகளின் அடிப்படையில் தெரிவித்திருக்கிறார். பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ரஷ்யாவில் உண்ணாவிரத மருத்துவம் பெரிய அளவில் பின்பற்றப்பட்டு வருகிறது.

தோல் தொடர்பான நோய்களுக்கு முக்கியமாக இம்முறை பயன்தருகிறது. மத அடிப்படையில் பின்பற்றப்படும் பல வழக்கங்கள், உண்மையில் நமது உடல் நலனுக்கானவை என்பதை இப்போது புரிந்து கொள்ளலாம்.

இன்றைய இளைய சமுதாயம் குனிந்த தலை நிமிராமல் தங்களுடைய செல்போன் களையோ, டேப்லட்' என்று அழைக்கப்படும் கையடக்கக் கணினிகளையோ, மடிக் கணினி களையோ பயன்படுத்துவ திலேயே மூழ்கியிருக்கிறார்கள்.

# தப்புக்கணக்கு போட வேண்டாம்

உலகின் எந்தப் பகுதியில் எது நடந்தாலும், உடனுக்குடன் அதை விரிவாகத் தெரிந்துகொள்ளும் யுகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்; கடந்த 5 ஆண்டுகளாக சமூக வலைத்தளங்களின் உதவியால் எல்லோருமே தகவல் தொடர்புகளை வளர்த்துக்கொண்டு வருகின்றனர். எல்லோரிடமும் 'கைபேசி' என்று அழைக்கப்படும் 'செல்போன்' இருப்பதைப் போல பெரும்பாலான நடுத்தர வர்க்க வீடுகளில் இணையத்தள இணைப்புடன் கூடிய கணினிப் பயன்பாடு அதிகரித்துவிட்டது. எனவே எந்த ஒரு பொது விடயம் குறித்தும் தங்களுடைய கருத்து என்ன என்பதை எளிதில் தெரிவிக்க எல்லோருக்கும் வாய்ப்புக் கிடைத்து வருகிறது. இதனால் நம்முடைய வாழ்க்கை முறை எப்படி மாறிவிட்டது என்று நிபுணர் யாராவது ஆராய்ந்து தெரிவித்தால் சுவையாக இருக்கும்.



சமூக வலைத்தளங்களின் பரப்பு, செல்வாக்கு ஆகியவற்றை ஒப்புக்கொள்ளும் அதேவேளையில் அதன் சக்தி, தரம் குறித்து நாம் சிந்திக்கவே வேண்டும். இன்றைய இளைய சமுதாயம் குனிந்த தலை நிமிராமல் தங்களுடைய செல்போன்களையோ, டேப்லட்' என்று அழைக்கப்படும் கையடக்கக் கணினிகளையோ, மடி கணினிகளையோ பயன்படுத்துவதிலேயே மூழ்கியி ருக்கிறார்கள். நாம் எம்முடைய செய்தி அலைவரிசைகளை அடிக்கடி விமர்சனம் செய்கிறோம். ஏதாவது ஒரு பிரச்சினையைத் தொடுவது, அதை ஊதிப் பெரிதாக்குவது, மூன்று அல்லது நான்கு நாள்களுக்கு சலிக்கும் விதத்தில் அதையே பேசிக் கொண்டிருப்பது, பின்னர் அதைவிட்டுவிட்டு வேறொன்றுக்குத் தாவிவிடுவது என்பதே அவற்றின் வாடிக்கையாக இருக்கிறது. உடனடிச் செய்திகள், முக்கிய செய்திகள் என்றெல்லாம் தந்து அதில் திருப்தி அடையாமல், இப்போது எம்மைப் பாதிக்கும் அன்றாடப் பிரச்சினைகள் குறித்து நான்கு பேரைவிட்டு விவாதித்து அரசு நிர்வாகம் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லவும் ஆரம்பித்து விட்டனர். தகவல் தொழில் நுட்ப வேகத்துக்கு இணையாக அரசு நிர்வாகத்தை நடத்த முடியாது. செல்போன் பயன்பாடும் கணினிப் பயன்பாடும் அதிகரிப்பதாலேயே நாடு முன்னேறிவிட்டதாக தவறாக நினைத்துக்கொள்ளக்கூடாது என்பதை ஒவ்வொருவரும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

# நானூறு மில்லியன் வருட பழைமையான இயந்திரம்

யுரி குளோப் என்பவர் இது ஒருவகையான கியர் இயந்திரம்போல் இருப்பதாக தெரிவித்தார். இந்த இயந்திர படிமம் 400 மில்லியன் வருட பழைமை யானது.

ரஷ்யாவின் விலாடிவாஸ்டோவில் (vladi vostok) அலு மினியத்தாலான 400 வருட பழைமையான இயந்திரப் படிமம் கண்டுபிடிக்கப் பட்டது.

கம்ஷட்கா பெனின்சூலாவின் ஒதுக்குப்புறமான பகுதியில் அதாவது 150 மைல்கள் தொலைவில் உள்ள டைகில எனும் கிராமத்தில் புதைபொருள் ஆராய்ச்சியாளர்களுக்கு (செயின்ட் பீட்டர்பர்க் பல்கலைகழகத்தை சேர்ந்த) புதை படிமம் ஒன்று கிடைத்தது. அதுகுறித்து யுரி குளோப் (Yuri Golubev) என்பவர் அது ஒருவகையான கியர் இயந்திரம்போல் இருப்பதாக தெரிவித்தார். அந்த இயந்திர படிமம் (fossil) 400 மில்லியன் வருட பழைமையானது.

அந்த இயந்திர படிமத்தின் படமும் விக்கிபீடியாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி படிமம் பிரான்ஸில் கண்டறியப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.





யுரி குளோப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதர்களைப் போன்று உரையாடும் குரங்குகள்

மார்மோஸட் இனத்தைச் சார்ந்த குரங்குகள் மனிதர்களைப்போல உரையாடிக்கொள்கின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். உலகிலேயே மிகச் சிறிய குரங்கினமான மார்மோஸட்கள் 8 அங்குல நீளம் கொண்டவை. அவை 30 நிமிடங்கள் வரை தொடர்ந்து ஒன்றுக்கொன்று உரையாடிக்கொள்கின்றன என்று ஆராய்ச்சியாளர் கள் கூறுகின்றனர். இது குறித்து பிரின்ஸ்டன் பல்க லைக் கழகத்தைச் சேர்ந்த ஆசிஃப் காஸன்ஃபார் கூறும்போது, "இவற்றின் உரையாடல்கள் பறவை, தவளை போன்ற மற்ற விலங்கின ங்கள் எழுப்பும் குரலோசையில் இருந்து வேறுபட்டு மனித உரையாடல்களுடன் ஒத்துள் என. அதன் காரணமாகவே மார் மோஸட் குரங்குகள் சிம்பன்ஸி, மனிதக் குரங்குகள் போன்ற மற்ற குரங்கினங்களிலிருந்து வேறு பட்டு தனித்தன்மையுடன் விளங் குகின்றன. ஒன்றுக்கொன்று நட்புடன் பழகு வது, தகவல் தொடர்புகளுக்கு உரையாடல் சப்தங்களை எழுப்புவது ஆகியவற்றில் மனிதர்களுடன் ஒத்துள்ளன" என்று கூறுகின்றார். (ந)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரிப்பிட வசதியின்மையை போக்க வருகின்றது மடக்கும் கார்

நகரமயமாதலின் தவிர்க்க முடியாத பிரச்சினை வாகனப் பெருக்கம். கடன்கள் மிக எளிதாகக் கிடைப் பதால் சாமான்யர்கள் கூட எந்தவிதமான பெருமுயற்சி யும் இல்லாமல் கார்களை வாங்கிவிடலாம். வாக னங்களைத் தாங்க முடியாமல் வீதிகள் திக்கு முக்காடுகின்றன.

வீதிகளில் கார்களை ஓட்டிச் செல்வது மிகப்பெரிய சவால் என்றால் அதைவிடப் பெரிய சவால் அதை நிறுத்துவதற்கு இடத்தைப் பிடிப்பது. காரை நிறுத்த இடம் கிடைப்பது குதிரைக் கொம்புதான்.

அவற்றுக்குத் தீர்வு காண்பதற்காக தென்கொரியா வைச் சேர்ந்த ஒரு நிறுவனம் ஆரடில்லோ - டி என்ற காரை உருவாக்கியுள்ளது. நெரிசல் மிகுந்த இடங்களில் பாதியாக மடக்கி நிறுத்தும் வகையில் இந்தக் கார் வடிவமைக் கப்பட்டுள்ளது. மடங்கிய நிலையில் இதன் நீளம் வெறும் 5 அடிதான். காருக்கு வெளியே வந்த பிறகு கைத்தொலைபேசி மூலம் காரை மடக்கலாம். தாமாகவே மடங்கிக் கொண்டு, குறிப்பிட்ட இடத்தில் போய் நிற்கும் திறனும் இந்தக் காருக்கு உண்டு. மின்சாரத்தில் இயங்கும் இந்தக் காரில் இருவர் மட்டுமே செல்ல முடியும். 10 நிமிடம் மின்னேற்றி னால் 100 கி.மீற்றர் வரை பயணம் செய்யலாம். அரசின் அனுமதி கிடைத்துவிட்டால் வெளிவரத் தயாராக இருக்கிறது இந்தக் கார்.





## நீங்கள் வெற்றியாளர்

அர்ப்பணிப்புடனும், முயற்சியுடனும் வெற்றியை நோக்கி நீங்கள் முன்னகர்வதை நாம் மிகவும் மகிழ்ச்சியுடன் நோக்குகிறோம். நம்பகமான தோழனாக எம்மையும் இணைத்து நீங்கள் செல்லும் இந்த வெற்றிப்பயணத்தின் 25 ஆண்டுகள் நிறைவில் கொமர்ஷல் லீசிங் & பினான்ஸ் நிறுவனம் தனது மனமார்ந்த **நன்றிகளை** உங்கள் அனைவருக்கும் தெரிவிப்பதில் பெருமை அடைகின்றது.

25
1988 2013
நம்பகமான தோழன்

பெருமைக்குரிய 25 ஆண்டுகள் நிறைவு

CLC
கொமர்ஷல்
லீசிங் & பினான்ஸ்

இணைபிரியாத 10 வருடங்கள்

# நன்றி

## யாழ் மண்ணுடனான தசாப்த கால எமது உறவு மற்றும் சேவை என்றென்றும் நீடிக்கும்

சேவை நிலையத்திற்கு வருகை தந்து விஷேட கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளுங்கள்

இந்த விஷேட கொடுப்பனவு
ஒக்ரோபர் 26ஆ திகதி வரை மட்டுமே

எதிர்காலம் இன்றே.

(F/13324)

Dialog


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
23/10/2013

# இரட்டைக் குழந்தைகள் பெற்றால் தாய்க்கு நீண்ட ஆயுள்





ஒற்றைக் குழந்தையை பெற்ற தாயைவிட, இரட்டையர்களைப் பெற்ற தாய் நீண்ட ஆயுளுடன் ஆரோக்கியமாக வாழ்வார்கள் என்று கூறப்படுகிறது. இரட்டை குழந்தைகளைப் பெற்றெடுத்த தாய்மார்கள், ஒற்றை குழந்தையைப் பெற்றவர்களை விட இரண்டு மடங்கு அதிகமாக உயிர் வாழ்வார்கள் என்று வல்லுநர்கள் கூறுகின்றனர்.

30 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் இரட்டையர்களை பெற்றெடுக்கும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளன என்று கூறப்படுகிறது.

எனினும் 30 வயதுக்கு மேல் பெண்கள் குழந்தை பெற்றுக் கொண்டால், உடல் ரீதியாக கர்ப்ப காலத்தில் பல பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

குழந்தை பெற்றுக் கொள்வதே ஓர் ஆனந்தம். அதுவும் இரட்டைக் குழந்தைகள் என்றால் மிகவும் சந்தோஷம் ஏற்படும். அதற்குக் காரணம் இரட்டையர்களில் ஒரு குழந்தை தாயைப் போலவும், மற்றொரு குழந்தை தந்தையை போலவும் இருக்கும்.

சில நேரங்களில் இரட்டையர்கள் ஒரே மாதிரி வாழ்க்கையைத்தான் வாழ்வார்கள். வித்தியாசமான தோற்றம் கொண்ட இரட்டையர்களை விட ஒரே மாதிரியான இரட்டையர்கள் பொதுவாகக் குறைவு தான்.

இரட்டையர்களை பெற்றவர்களை சந்தித்து அவர்களிடம் கேட்டால், இரட்டைக் குழந்தைகளை பெற்றெடுத்து வளர்ப்பதை விட, வேறு எந்தச் சொர்க்கமும் இல்லை என்று கூறுவார்கள்.

எனினும் இரட்டையர்களுக்கு அவர்களுக்கென தனிப்பட்ட குணங்கள் இருக்கும் என்று வல்லுநர்கள் கூறுகின்றனர்.

# நகம் கடித்தால் மனநலப் பாதிப்பு




பலருக்கு நகம் கடிக்கும் பழக்கம் இருக்கிறது. அதனை நாம் சாதாரணமாகப் பார்க்கிறோம். ஆனால், அதுவும் மனநலப் பாதிப்புதான் என்று அமெரிக்காவில் மனோதத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

மனநிலைப் பாதிப்புகளில், நகம் கடிப்பதைச் சேர்க்க பரிந்துரை செய்துள்ளனர். உலகம் முழுவதும் பல லட்சம் பேர் நகம் கடிக்கும் பழக்கம் கொண்ட வர்களாக உள்ளனர். நகம் கடிப்பது மட்டுமல்ல, கையை அடிக்கடி கழுவுவது, முடியை பிடித்து இழுத்துக் கொண்டே இருப்பது ஆகியவையும் மனநல பாதிப்பின் வெளிப்பாடுதான். காரணமில்லாத அச்சம், தவறான எண்ணங்கள் மனதில் எழுவதால் சிலர் இதுபோலச் செய்கின்றனர். இதை மனநலப் பாதிப்பில் சேர்க்கலாம் என்று அமெரிக்க மனநலச் சங்கத்தைச் சேர்ந்த நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

**❛❛ உலகம் முழுவதும் பல லட்சம் பேர் நகம் கடிக்கும் பழக்கம் கொண்டவர்களாக உள்ளனர்.**

எப்போதாவது நகம் கடிப்பவர்களை மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் எனக் கூறிவிட முடியாது. இந்தப் பழக்கத்தால் வலி ஏற்படும் அளவுக்கு ஒருவர் நடந்துகொண்டால் அவரை மனநலம் பாதிக்கப்பட்டவர் எனக் கருதலாம் என்று கலிபோர்னியா பல்கலைக்கழக மனோதத்துவவியல் வல்லுநர் கரோல் மேத்யூஸ் தெரிவித்தார். நகம் கடிப்பதால் நோய்த் தொற்று ஏற்பட்டு அடிக்கடி சளிப்பிடிப்புச் சுகவீனம் ஏற்படுகிறது.

# 2000 அடிகள் உயரத்தில் சாதனை



நோர்வேயைச் சேர்ந்த வீரர் கடல் மட்டத்திலிருந்து 2000 அடிகள் உயரத்தில் சாதனை நிகழ்த்தியுள்ளார்.

தனது ஒரு கையை மட்டுமே பயன்படுத்தி நேரான குழாய் ஒன்றில் தலைகீழாக நின்று சாதனை நிகழ்த்தியுள்ளார்.



# மஞ்சள் பூசிக் குளித்தால் புற்றுநோய் ஏற்படாது

முகத்துக்குப் பூசுவதற்கு வித விதமாய் அழகு சாதனப் பொருள்கள் வந்த பின்னர், மஞ்சள் பூசிக் குளிப்பது இன்று மறந்தே போய்விட்டது.

ஆனால் மஞ்சள் பூசிக் குளிப்பவர்களுக்கு கருப்பை வாய் புற்றுநோய் பாதிக்கும் வாய்ப்பு குறைவு என்று ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

மஞ்சள் பூசிய முகத்துக்கென்று ஒரு தனி அழகு உண்டு. ஆனால், அது வெறும் அழகோடு நிற்காமல் அதில் ஏராளமான மருத்துவக் குணங்களும் உண்டு என்பது இன்றைய யுவதிகளுக்குப் புரிவதில்லை.





# குகையைக் குடைந்து அமைக்கப்பட்ட வீடு

அமெரிக்காவில் வசிக்கும் ஒருவர் குகையைக் குடைந்து அமைக்கப்பட்ட வீடு ஒன்றில் கடந்த 20 வருடங்களாக வாழ்ந்து வருகின்றார். இந்த வீட்டில் அவர் அனைத்து வசதிகளுடனும் வசித்து வருகிறார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மனமும் உடலும் தளராது கல்விக்கு உழைத்த அதிபர்



1995 ஆம் ஆண்டின் யாழ்ப்பாண இடப் பெயர்வின்போது அலை அலையாக மாண வர்கள் முல்லைத்தீவை அடைந்தபோது, யோன் பிள்ளை ஜோர்ஜ் தவராசா மாத்தளன் றோ.க. பாடசாலையில் அதிபராக இருந்து ஆற்றிய பணி பாராட்டத்தக்கது. வேலைப்பளு பலமடங்காக அவ் அசாதாரண சூழ்நிலையில் அதிகரித்த போதும், மனமும் உடலும் தளராது முன்னின்று உழைத்துக் கல்விப் பணியாற்றினார்.

நீத்தார் நயப்புரை

குறிப்பாக பருத்தித்துறை கிழக்குப் பிரதேச ஆசிரியர்கள், மாணவர் கள், தொண்டர் ஆசிரியர் இடம்பெயர்ந்து சொந்தப் பிரதேசத்தில் பணியாற்று வது போன்ற உணர்வுடன் பணியாற்ற தவராசா அதி பர் காட்டிய பரிவும் வழி நடத்தலும் இன்றும் பசுமையான நினைவுகளாக உள்ளன. அவ ருடன் பணியாற்றிய பலர் இன்று முன்னிலை அதிபர்களாகவும், ஆசிரியர்களாகவும் செயற்பட அவரது வழிகாட்டலும், முன்மாதிரியும் ஒரு காரணம் எனலாம்.

வன்னி மண்ணிற்கே உரித்தான வந்தோரை வரவேற்கும், வாழ வைக் கும் மனப்பாங் குடன், அவர் வந்தோரை அதிதி களாக அனுசரித்துப் போற் றியது இன்றும் மனதில் நிழலாடுகிறது.. அவரிட மிருந்து பல விடயங்களை நாம் கற்றுக் கொண்டோம். அதேவேளை நல்ல விடயங் கள் யார் கூறினும் அவற் றிற்கும் செவி சாய்த்து 'ஆசிரியன் என்பவன் எப்போதும் கற்றுக் கொண்டே இருப்பவன்' என்பதற்கு உதாரண மாகத் திகழ்ந்தார்.

முல்லைப் பிரதேச மற்றும் முல்லை வலய கல்வித் திணைக்களத்தின் ஒரு முன் மாதி ரியான அதிபராக விளங்கிய பெருமை இவ ரையே சேரும். அன்னாரின் ஆத்மா சாந்திய டையப் பிரார்த்திக்கின்றேன்.

செ.செல்வராஜா,முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர், முல்லைத்தீவு.

# இமயமலைக் காடுகளில் நடமாடும் அந்த 'பனிமனிதன்' யார்?

இமயமலைக் காடுகளில் நடமாடுவதாக ஆண்டாண்டு காலமாக நம்பப்பட்டுவரும் யெட்டி அல்லது பிக்ஃபூட் எனப்படும் இராட்சத பனிமனிதர்கள் உண்மையிலேயே விலங் குகள்தானா அல்லது அவை வெறும் கற்பனைத் தோற்றமா என்ற கேள்விகளுக்கு பிரிட்டன் விஞ்ஞானி ஒருவர் நவீன டிஎன்ஏ ஆய்வுகள் மூலம் விடை கண்டிருக்கிறார். இந்த இராட்சத பனிமனித விலங்கு துருவக் கரடி யினதும் பழுப்புநிறக் கரடியினதும் கூட்டுக் கலவையில் உருவாகியிருக்க வேண்டும் என்று ஒக்ஸ்ஃபர்ட் பல்கலைக்கழக மரபணுத் துறை பேராசிரியர் பிரையன் சைக்ஸ் நம் புகிறார்.

'இந்தக் கரடியை இதுவரை எவரும் உயிருடன் பார்த்ததில்லை. ஆனாலும் அவை உண்மை யில் இருக்கக்கூடும். பெரும்பாலும் துருவக்கர டியின் மரபணுக்கள் தான் இந்த விலங்கில் அதிகளவில் இருக்க வேண்டும்' என்றார் பேராசிரியர் பிரையன் சைக்ஸ்.

வடக்கு இந்தியாவில் இமயமலைத் தொடரின் மேற்கே லடாக் பகுதியிலிருந்தும் கிழக்காக பூட்டானிலிருந்தும் கிடைத்த அடையாளம் உறுதிசெய்யப்படாத இரண்டு விலங்குகளின் மயிர்களைக் கொண்டே விஞ்ஞானி பிரை யன் டி.என்.ஏ. ஆய்வு நடத்தியுள்ளார். 40 ஆயிரம் முதல் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ஆண்டு களுக்கு முந்தைய காலகட்டத்துக்குச் சொந்த மான நோர்வேயிலிருந்து கிடைத்த போலார் பியர் என்ற துருவக் கரடியினத்தின் தாடை எலும்பின் மரபணுக்களுடன் ஒப்பிட்டு ஆரா யப்பட்ட இந்த விலங்கு மயிர்களின் டி.என்.ஏ. தரவுகள் 100 வீதம் ஒத்துப் போயுள்ளன.

> இராட்சதப் பனிமனித விலங்கு துருவக் கரடியினதும் பழுப்புநிறக் கரடியினதும் கூட்டுக் கலவையில் உருவாகியிருக்க வேண்டும் என்று ஒக்ஸ்ஃபர்ட் பல்கலைக்கழக மரபணுத் துறை பேராசிரியர் பிரையன் சைக்ஸ் நம்புகிறார்.

இந்தியாவின் லடாக்கிலிருந்து கிடைத்த மயிர் கள் 40 ஆண்டுகளுக்கு முன்னர் வேட்டைக் காரர் ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்ட விலங் கொன்றிலிருந்தே பெறப்பட்டவை. மற்ற விலங் கின் மயிர் 10 ஆண்டுகளுக்கு முன்னர் மூங்கில் காடுகளில் ஆய்வுப் படப்பிடிப்பில் ஈடுபட்டிருந் தவர்களிடமிருந்து கிடைத்தவை.

## துருவக் கரடியின் வாரிசுகள்

'பழங்காலத்து துருவக்கரடியிலிருந்து ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் பிரிந்து உருவாகியதாக நம்பப்படும் பழுப்பு நிறக் கரடி வகையொன்றிலிருந்தே இந்த இமயமலை இராட்சதக் கரடிகளும் உருவாகியிருக்கக்கூடும்' என்ற கருத் துக்கு மரபணு நிபுணர் பிரையன் சைக்ஸ் வருகிறார். அல்லது அந்தப் பழங்காலத்து துருவக் கரடியின் வழிவந்த வாரிசுக்கும் பழுப்பு நிற கரடியினத்துக்கும் மிக அண்மையில் ஏற்பட்ட கலப்பில் இந்த இராட்சத விலங்குகள் பிறந்திருக்கக்கூடும் என்ற எடுகோளுக்கும் அவர் வருகிறார்.

இதன்படி இமயமலையை அண்டிய மக்கள் மத்தியில் செவிவழி நம்பிக்கையில் நீண்ட காலமாக இருந்துவரும் இந்த இராட்சத பனி மனித விலங்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய கரடியினத்தின் வாரிசு தான் என்ற உண்மை இப்போது தெரியவந்திருக்கிறது. இதற்கிடையே 2008 ஆம் ஆண்டில், இந்த இராட்சத பனிமனிதனின் மயிர் என்று கூறி வடகிழக்கு இந்தியாவின் மேகாலய மாநிலத் திலிருந்து பிபிசிக்குக் கிடைத்த விலங்கு மயிர்களை அமெரிக்காவைச் சேர்ந்த விஞ் ஞானிகள் ஆய்வுக்குட்படுத்தியிருந்தனர். அது இமய மலைக் காடுகளில் வாழும் ஒருவகை ஆட்டினத்தின் மயிர் என்பதை விஞ்ஞானிகள் உறுதிசெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# வாசகர் திருமுகம்

## வீதியைப் புனரமைப்பார்களா?

யாழ்.நகர் நாச்சிமார் கோயில் தேர் முட்டிக்கு வடக்குப் புறத்தில் இருக்கும் தலையாழி வைரவர் ஆலயத்துக்குச் செல்லும் வீதி சேதமடைந்து காணப்படுவதால் அந்த வீதியால் செல்லும் மக்கள் பெரும் சிர மங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த வீதியில் காமாட்சி முன்பள்ளி மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் இருப்பதால் மாணவர்கள் சிரமத்தின் மத்தியில் இந்தப் பாடசாலைகளுக்குச் சென்று கல்வி கற்று வருகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் அக்கறை எடுத்து இந்த வீதியை புனரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் கேட்டு நிற்கின்றனர்.

இந்த வீதியில் மழை காலத்தில் வெள்ளம் தேங்கி நிற்பது குறிப்பிடத்தக்கது.

நலன் விரும்பி.

## விவசாய அமைச்சரின் கூற்று முயற்சியாளர்களுக்குப் புத்துயிரளிக்கிறது

நடைபெற்று முடிந்த வடமாகாண சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி மக்களின் அமோக ஆதரவுடன் மகத்தான வெற்றி பெற்றதுடன், மிகச் சிறந்த அமைச் சரவையும் கடந்த 14.10.2013 ஆம் திகதி தத்தமது கடமைகளைப் பொறுப்பெடுத்துள் ளது. இவர்களுக்குத் தோள்கொடுத்து எமது இலக்கினை அடைவதற்கு அயராது உழைப் போம் என உறுதியளிக்கின்றோம்.

நலிவுற்றிருக்கும் எமது கைத்தொழில் துறையினை விருத்தி செய்வதற்கும், உள் ளூர் கைத்தொழில் முயற்சியாளர்களுக்கும் ஊக்கமளிக்க வேண்டும். தரம்மிக்க பல் வேறு உற்பத்திகளை எமது பிரதேசத்தி லிருந்து சர்வதேச அளவில் ஏற்றுமதி செய் வதற்கேற்ப நடைமுறைக்குச் சாத்தியமான முயற்சிகளை முன்னெடுத்து செயற்படுத்த வேண்டியது தற்போதைய அவசியமான ஒரு தேவைப்பாடாகும். அதற்கான காலம் தற்போது கனிந்துள்ளதென்றே கூறலாம்.

அந்த வகையில் அண்மையில் தமது கட மைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட வட மாகாண விவசாய அமைச்சரின் கூற்றானது நமது உள்ளூர் கைத்தொழில் முயற்சியாளர் களுக்கு புத்துயிரளிக்கும் ஓர் ஒளிக்கீற்று என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

"அமைச்சர்களின் நிகழ்வுகளிலோ, கூட் டங்களிலோ பெப்சி, கொக்கக்கோலா போன்ற வெளிநாட்டு மென்பானங்களை பயன் படுத்தக் கூடாதெனவும் உள்ளூர் பழ ரசங்களே பயன் படுத்தப்படவேண்டும் என தனது அமைச்சினைப் பொறுப்பேற்ற பின் னர் அதிரடியாக கூறியுள்ளார் அமைச்சர் பொ.ஐங்கரநேசன்.

அமைச்சரின் கூற்றிற்கிணங்க எமது பொரு ளாதாரத்தினை வெளிநாடுகளுக்கு தாரை வார்க்காது, அனைவரும் ஒன்றாகச் சிந்தித்து செயலாற்ற வேண்டும். கூட்டாக முன்னின்று உழைத்து சுயதேவை அடைவதற்கேற்ற வகையில் எமது பொருளாதாரத்தை அனைவரும் பிரமிக்கத்தக்க வகையில் மேம்படுத்துவதற்கு விரைந்து செயலாற்று வோம். அத்துடன் மேலைநாடுகளது உற் பத்திகளின் தரத்துக்கு நிகராக எமது உள்ளூர் உற்பத்திகளை மேற்கொள்ள வேண்டும். சுற்றாடலுக்கு நன்மையளிக்கும் வகையில் ஆரோக்கியமான ஓர் எதிர்காலத்தினை அடை வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதுடன் தொழில் துறையில் ஒரு புரட்சிகரமான மாற்றத்தினை ஏற்படுத்த முயல்வோ மாக.

ஆ.விமல்ராஜ், கொக்குவில்

## மக்களின் மனங்களை புண்படுத்தாதீர்கள்

வடமாகாண சபை உறுப்பினர்களுக்கு அன்பான வேண்டுகோள். வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றியைப் பெற் றதற்குக் காரணம் தமிழ் மக்கள் ஒற்று மையாக நின்று தமது வாக்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அளித்தமையே ஆகும். எனவே வெற்றி பெற்ற உறுப்பினர் கள் ஒற்றுமையாக இருக்க வேண்டியது அவர் களது தலையாய கடமையாகும். வட மாகாண சபையின் அமைச்சர்கள், உறுப் பினர்கள் பதவியேற்பு நிகழ்வில் 9 உறுப் பினர்கள் கலந்து கொள்ள வில்லை என்ற செய்தியானது மக்கள் ஏன் இவர்களுக்கு வாக்களளித்தார்கள் என்ற கேள்வியைத் தான் கேட்க வைக்கிறது. கடந்த 30 ஆண்டு களில் எமது சமூகம் அனுபவித்த துன்பங்கள் நீங்கி நற்சூழல் பொருந்திய கால கட்டத்தில் சத்தியப் பிர மாணத்தை அசட்டை செய்வது உங்களுக்கு ஆணை வழங்கிய மக்களின் மனங்களை புண்படுத்தும் செயலாகும். தயவு செய்து உங்கள் ஆசை என்னும் மாயையைத் தவிர்த்து சுயநலமற்ற மக்கள் சேவை என்பதை மனப் பூர்வமாக உணர்ந்து உலகம் பூராவும் வாழ் தமிழ்ச் சமூகம் அனைத்தும் எதிர் பார்க்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நோக்கத்தையும் செயலை யும் முழுமையாகப் பூர்த்தி செய்ய ஆவன செய்ய வேண்டும்.

க.முருகேசன், சாவகச்சேரி.

## பூம்புகார் வீதிகளுக்கு விமோசனம் கிடைக்குமா?

யாழ்.அரியாலை பூம்புகாரில் மக்கள் மீளக்குடியமர்ந்து 5 வருடங்களைப் பூர்த்தி செய்யும் நிலையில் வீதிகள் புனர்நிர்மாணம் செய்யப்படாமல் உள்ளன. இந்த வீதியால் பயணம் செய்யும் பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், நோயாளிகள், பாதசாரிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த வீதிகளானவை 1979 ஆம் ஆண்டு தார் ஊற்றிச் செப்பனிடப்பட்டன. அத்தி பூத்தாற் போன்று இடையிடையே சிலர் வாக னங்களில் வந்து பட மெடுப்பது போல் நின்று படம் காட்டி விட்டுப் போவார்கள்.

குச்சொழுங்கைகள் எல்லாம் காப்பெற்றாக மாறும் இந்த சூழலில் எமது பூம்புகார் செல்லும் வீதிகள் கல்லும் முள்ளும், மேடும் பள்ள முமாக காட்சி தருகின்றன.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எங்களின் வீதி களைப் பார்ப்பார்களா? புனரமைப்பு செய் வார்களா?

அன்ரனி சாள்ஸ், அரியாலை.

# சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம்




ஒட்டுசுட்டான் புளியங்குளத்தைச் சேர்ந்த கந்தையா பாலேந் [illegible] அகில இலங்கை சமாதான நீதி வானாக சத்தியப் பிரமாணம் செய்துள் ளார். இவர் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் காணி அலுவலராக பதவி வகித்து சமூகப் பணிகளில் ஈடுபட்டவர் என்பது குறிப்பிடத் தக்கது.

மக்கள் மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சி



இரண்டு மாணவர்கள் ஓர் ஆசிரியரிடம் தங்கள் பாடங்களைப் பயின்று வந்தனர். அதில் ஒருவன் தன்னுடைய பாடத்தை மிகவும் கவனத்துடன் படித்து வந்தான். மற்றவன் ஏனோதானோ என்று இருந்தான். அவன் அப்படி இருக்கக் காரணம், நாம் நல்ல ஆசிரியரிடம் பாடம் கற்றுவருகிறோமே! என்ற காரணம்தான். அந்த அலட்சியத்தினால் அவன் படிப்பில் மட்டமாக இருந்தான்.

ஆனால், அந்த ஆசிரியரோ எப்பொழுதும் அவர்களுக்குப் பாடம் தொடங்குமுன், "நீங்கள் முயன்றால் வெற்றியை இலகுவாக அடைவீர்கள்" என்று சொல்லியே தன்னுடைய பாடம் எடுத்தலைத் தொடங்குவார்.



இப்படி அவர் ஒவ்வொரு நாளும் பாடம் கற்பிக்க நன்றாகப் படிக்கும் மாணவன் தினமும் தன் வீட்டில் போய் ஆசிரியர் சொல்லித் தந்த பாடத்தைத் தினமும் திரும்பத் திரும்பப் படித்துப் பார்த்து தன் மனதில் பதிய வைத்தான். ஆனால் மற்ற மாணவனோ பாடத்தைக் கேட்பதோடு சரி! வீட்டில் போய்த் திரும்பத் தன் மனதில் பதிய வைப்பதே இல்லை.

கடைசியில் ஒரு நாள் அவர்களுக்கான பரீட்சை வந்தது. பாடத்தைக் கவனமுடன் படித்த மாணவன் மிகத் தைரியமாக பரீட்சை எழுதிவிட்டு எப்படியும் முதல் இடத்தில் தேறி விடுவேன் எனும் நம்பிக்கையுடன் பரீட்சை அறையை விட்டு வெளியேறினான். மற்ற மாணவன் சரியாகப் பரீட்சை எழுதாமல் தவித்தான். கடைசியில் பரீட்சை முடிவு வந்தது.

அதில் ஆசிரியர் சொன்னதைக் கவனமுடன் கேட்டு தன் வீட்டிலும் போய்ப் படித்ததைத் திரும்பிப் படித்த மாணவன் அவன் நம்பியது போல முதல் தரத்தில் வெற்றி பெற்றான். மற்றவனோ அவன் பயந்தது போல பரீட்சையில் தோல்வி அடைந்தான். உடனே அவன் தனக்கு பாடம் எடுத்த ஆசிரியரைக் காணச் சென்றான். அங்கே அவரைக் கண்டதும் நீங்கள் என்னை ஏமாற்றி விட்டீர்கள் என்றான். அதைக் கேட்ட அந்த ஆசிரியர் எப்படி? என்று கேட்டார். அதற்கு அவன் "நீங்கள் தான் எப்பொழுதும் பாடம் தொடங்குமுன் நீங்கள் முயன்றால் வெற்றியை இலகுவாக அடைவீர்கள் என்றீர்களே! இதோ இப்போது நான் தோற்றுப்போய் வந்திருக்கிறேன்" என்று கூறினான்.


அதற்கு ஆசிரியர் "தம்பி! இப்பொழுதும் நான் சொல்கின்றேன் முயன்றால் வெற்றியை இலகுவாக அடைவீர்கள் என்று" அதில் இன்னொரு செய்தியையும் அறிய வேண்டும். முயற்சி என்பது ஒருமுறை கேட்டுச் சொல்வதல்ல. எப்பொழுதும் நாம் எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பது. அதாவது முயற்சியில் கடினமாக உழைத்தால் வெற்றியை இலகுவில் அறுவடை செய்யலாம். அதில்லாமல் வெற்றியை மட்டுமே கனவு கண்டால் போதாது. உன்னைப் போல்தான் அவனும் என்னிடம் பாடம் பயின்றான். அவன் முயன்றான். கடுமையான முயற்சி செய்தான். வெற்றியை இலகுவாக அடைந்தான். இதை நீ எப்பொழுது உணர்கின்றாயோ அப்பொழுதே உன்னில் செயல் தொடங்கும். பின்பு 'வெற்றி' என்பது உனக்கும் கூட எளிதாகும் என்றார். அதைக் கேட்ட அந்த மாணவன் தன் தவறை உணர்ந்து அதன் பின்பும் அதே ஆசிரியரிடம் கவனமாகப் பாடம் பயின்று கண்ணும் கருத்துமாக அதிலே முயன்று வெற்றிய்யை இலகுவாக அடைந்தான்.



**"முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்"**

**சி.கஜானி**, தரம்-9'டி'
கிளி/இந்துக் கல்லூரி

# நான் விரும்பும் நூல்



"வள்ளுவன் தன்னை உலகுக்குத் தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு" என்று பாடினார் பாரதியார். வான் புகழ் கொண்ட வள்ளுவர் தந்த ஒப்பற்ற நூல் திருக்குறள் ஆகும். நான் விரும்பும் இந்த நூல் உலக மறை என அழைக்கப்படுகின்றது. இந்நூலில் உள்ள

*திருக்குறள் இலத்தீன்,*
*எபிரேயம், ஆங்கிலம்,*
*பிரேஞ்சு, கிரேக்கம்,*
*சொ்மானியம்,*
*போன்ற மேல்நாட்டு*
*மொழிகளிலும்*
*வடமொழி இந்தி,*
*தெலுங்கு,*
*மலையகம், கன்னடம்*
*போன்ற இந்திய*
*மொழிகளிலும்,*
*சிங்களத்திலும், சீனம்,*
*மலேசியம், பர்பியம்,*
*ஜப்பான் போன்ற கீழ்*
*நாட்டு மொழிகளிலும்*
*மொழி*
*பெயர்கப்பட்டுள்ளது.*



கருத்துக்கள் என்னைப் பெரிதும் கவர்ந்துள்ளன. அதன் காரணமாகவே நான் இந்த நூலை பெரிதும் விரும்புகின்றேன். இரண்டு வரிகள் கொண்ட குறட்பாக்களுக்குள் மனித வாழ்க்கைக்குத் தேவையான எல்லாமே அடங்கியுள்ளன.

திருக்குறள் அறத்துபால், பொருள்பால், காமத்துப்பால் எனும் மூன்று பகுதிகளை உடையது. நூற்று முப்பத்துமூன்று அதிகாரங்களைக் கொண்டது. பத்துக் குறள்கள் வீதம் 1330 குறட்பாக்களையும் தன்னகத்தே கொண்டது.


இந்த நூலாசிரியரான திருவள்ளுவர் தமிழ் நாட்டில் உள்ள மைலாப்பூரில் பிறந்தார். தெய்வப்புலவர் செந்நாப் போதர், பொய்யா மொழிப் புலவர், நான் முகனார், பெருநாவலர், முதற்புலவர் என்று சிறப்புப் பெயர்களைக் கொண்டவர். திருக்குறளுக்கு எழுதிய உரைகளில் "பரிமேலழகர்" உரையே சிறப்பாகும். திருக்குறள் இலத்தீன், எபிரேயம், ஆங்கிலம், பிரேஞ்சு, கிரேக்கம், சொ்மானியம், போன்ற மேல்நாட்டு மொழிகளிலும் வடமொழி, இந்தி, தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்ற இந்திய மொழிகளிலும், சிங்களத்திலும், சீனம், மலேசியம், பர்பியம், ஜப்பான் போன்ற கீழ் நாட்டு மொழிகளிலும் மொழி பெயர்கப்பட்டுள்ளது. இவ்வாறு அறிஞர்கள் போற்றும் நெறிகளை வழங்கி உலக மக்கள் உள்ளங்களில் நிலைத்து நிற்கும் பெருமை இந்த நூலாசிரியரைச் சாரும். இவர் அறத்தின் சிறப்பையும், வையத்துள் வாழ்வாங்கு வாழும் நெறியையும் எடுத்துரைத்தார். அவர் கூறும் குறள், நெறி, சாதி, மத, இன, பேதம் எதுவுமற்றதாய் உலகனைத்துக்குப் போதுமானதாய் திகழ்கின்றது. இதனாலேயே இந்த நூல் உலகப் பொது மறை என அழைக்கப்படுகிறது.

**த.சஜீவன்**, தரம்-7ஈ,
யா/ புனித பத்திரிசியார் கல்லூரி.

# பசு

பசுவே வெள்ளைப் பசுவே
பச்சைப் புல்லை நீ தின்று
வெள்ளைப் பாலைத் தருவாயே
என் அம்மாவின் பாலுக்கு
நிகரானது உன் பாலே
கோமாதாவே எங்கள் குலமாதாவே
நான் வியப்பேன் உன்னை எண்ணி

**கி.வாகினி,**
வண்ணை,
காமாட்சி முன்பள்ளி.



# பொது அறிவு

இலங்கையின் முதல் ஜனாதிபதி
சேர்.வில்லியம் கொபல்லாவ

இலங்கையின் பௌத்த கொடியை உருவாக்கியவர்
கேணல் ஒல்கொட்

இலங்கை சித்திர சிற்பக் கலை ஆராய்ச்சியாளர்
டாக்டர் ஆனந்த குமாரசுவாமி

கனவான்களின் விளையாட்டு
கிரிக்கட்

வடக்கு திசை நோக்கி வீசும் காற்று
வாடைக்காற்று

உலகின் முதலாவதுதமிழ் புத்தகம்
கிறிஸ்தவ வணக்கம்

ஐரோப்பாவின் நோயாளி நாடு
துருக்கி

தமிழ் மொழியின் சிறப்புப் பெயர்
சக்தி மொழி



**த.கேமிஷா**, தரம்-7,
ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org